

# கோவிட் - 19

## பொருளாதார அரசியல் சமூக நோக்கு

## COVID - 19: A Socio- Economic and Political Review



*A book for general readers*




பேராசிரியர் செல்வரத்தினம் சந்திரசேகரம்

தலைவர்

பொருளியல்த் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிட்-19

## பொருளாதார அரசியல் சமூக நோக்கு

## COVID - 19: A Socio- Economic and Political Review

**A book for general readers**

பேராசிரியர் செல்வரத்தினம் சந்திரசேகரம்
தலைவர்
பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : Covid - 19 Porulaathara arasiyal samooga nooku

Author : Prof. S.Santhirasegaram

First Edition: 2021

Pages : 181

Printer : ABI Printer

Publisher : API Publisher, Manipay, Jaffna

ISBN : 978-624-5144-05-01

Price : Rs 500.00

தலைப்பு : கோவிட்-19, பொருளாதார அரசியல் சமூக நோக்கு

நூலாசிரியர் : பேராசிரியர் செ. சந்திரசேகரம்

முதல் பதிப்பு : 2021

பக்கம் : 181

அச்சுபதிப்பு : அபி அச்சகம்

வெளியீடு : அபி வெளியீடு, மானிப்பாய், யாழ்ப்பாணம்

ISBN : 978-624-5144-04-4

விலை : 500.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் செ.சந்திரசேகரம் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் வீரகேசரி பத்திரிகையின் வார வெளியீட்டில் -ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் கோவிட்-19 பற்றித் தொடராக எழுதி வந்த தனது கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிடுகின்றார். இது காலத்துக்கு மிகப் பொருத்தமானதொரு வெளியீடாகப் பார்க்கப்படுகிறது.

கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் இன்று முழு உலகையுமே ஆட்டங் காண வைத்திருக்கிறது. இயற்கைக்கும் மனிதனுக்குமான முரண்நிலையின் உச்சக் கட்டமாக இயற்கை மனிதனைச் சவாலுக்கு உட்படுத்தியிருக்கிறது. கால ஓட்டத்தில் சமூக, பொருளாதார ரீதியாக மனிதனை முடமாக்கி, உலகையே முடக்கியிருக்கிறது இயற்கை. ஒரு வகையில் சொல்வதென்றால் இது இயற்கையின் நியதி என்றே சொல்லப்படுகிறது. “இயற்கையை நீ அழித்தால்-இயற்கையால் நீ அழிவாய்” என்பதற்கமைய மனிதன் இயற்கையை நேசிக்காமல், கண் மூடித்தனமாக இயற்கையை அழித்ததன் விளைவையே இன்று உலகம் எதிர்கொள்கின்றது.

உலகத்தில் படைக்கப்பட்ட அனைத்தும் அவற்றின் நிலைபேறான வாழ்க்கைக்காகப் பூரணமாகவே படைக்கப்பட்டுள்ளன.ஒவ்வொரு உயிரியினதும் வாழ்க்கை முறைகள், உணவு, இனவிருத்தி என்பன அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முறைமைக்கேற்பப் பூரணப்படுத்தப்படுகின்றன என்று உலகின் மிகப் பழைமை வாய்ந்த உபதேசங்களாகக் குறிப்பிடப்படுகின்ற "உபநிடதங்கள்" மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

ஆனாலும், மனிதன் அதிகமாக ஆசைப்பட்டு, தேவைக்கு அதிகமாக எல்லாவற்றையும் சேர்த்து வைக்க முயன்றதனாலேயே இந்த நிலை. மிருகங்களையும், பறவைகளையும் மனிதன் வகை தொகையின்றிக் கொன்றொழித்ததன் விளைவாக அவற்றில் இருந்து "கொரோனா வைரஸ்" தனது வாழ்விடத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது. அதாவது அது மனிதனில் தொற்றிக் கொண்டுள்ளது. இந்த வைரஸ் தொற்றிலிருந்து மனிதனைப் பாதுகாப்பதற்கான பிராண வாயுவுக்கும் (ஒட்சிசன்) தட்டுப்பாடு. கரியமில வாயுவை வாங்கிக் கொண்டு பிராண வாயுவைத் தருகின்ற இயற்கையின் அம்சமான மரங்களை அழித்ததன் வெளிப்பாடு தான் இந்தத் தட்டுப்பாடும்.

இவ்வாறு, இயற்கையும் மனிதனும் மோதிக் கொள்ளும் இந்த நேரத்தில் - கொரோனாப் பெருந் தொற்றுக் காலத்தில் அதன் தாக்கங்களை ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பது கல்வியியலாளர்களின் கடமையாகின்றது.

அந்த வகையில், பேராசிரியர் செ. சந்திரசேகரம் தொகுத்து வழங்கும் "கோவிட் - 19 : பொருளாதார, அரசியல், சமூக நோக்கு" என்ற இந்த நூல் பயன்மிகுந்ததொன்றாக அமையும் என நம்புகிறேன்.

தனது கட்டுரைகளின் தொகுப்பின் ஊடாக மனிதர்களைச் சிந்திக்க வைப்பதற்கு முயன்றிருக்கிறார் பேராசிரியர் செ.சந்திரசேகரம். அவரது முயற்சி வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வ துடன், இக் கட்டுரைத் தொகுப்பு நூலுருப் பெற அயராது உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுகள் உரித்தா கட்டும்!

**பேராசிரியர். சி. சிறிசற்குணராஜா.**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

பொருளியல் மக்களின் வாழ்வோடு இணைந்த ஒருபாடமாகும். இது இன்று தனித்தொரு பாடமாக கற்பிக்கப்பட்ட போதும் பொருளியலானது அரசறிவியல் மற்றும் சமூகவியல் ஆகியவற்றுடன் மிக நெருக்கமாக தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. பொருளியலை பல்கலைக்கழகங்களில் கற்பித்தலானது நடைமுறையில் சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் பொருளியலை விபரிப்பதில் இருந்து வேறுபடுகின்றது. இவ்வகையில், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டுரைகள் பொருளியலை அனைத்து மக்களும் விளங்கக்கூடிய வகையில் எழுதப்பட வேண்டும். இந்த நோக்கத்தில் எனது நண்பனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் தலைவருமான பேராசிரியர் செ. சந்திரசேகரம் காலத்தின் தேவை அறிந்து கோவிட் 19 தொற்று தொடர்பாக பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக ரீதியான தாக்கங்களை பாமர மக்களும் விளங்க கூடிய வகையில் வாராந்தம் வீரகேசரி ஞாயிறு வெளியீட்டில் பிரசுரமான தனது கட்டுரைகளில் பதினாறு கட்டுரைகளை தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டுள்ளார். பேராசிரியர் செ. சந்திரசேகரம் ஏற்கனவே பல பொருளியல் சார்ந்த பாடப் புத்தகங்களையும், பொதுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்களையும் வெளியிட்டுள்ள சிறந்த அனுபவத் தினைக் கொண்டவராவார்.

இப்புத்தகமானது பொது வாசகர்களுக்கு கோவிட் 19 பரவலால் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உருவான பொருளாதார, அரசியல் மற்றும் சமூக தாக்கங்கள் மற்றும் உருவாக கூடிய மாற்றங்களை மிகவும் நுணுக்கமாக எடுத்துக் காட்டியுள்ளது. இலங்கையின் சமூக அரசியல் உறுதியின்மையானது எவ்வாறு பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் மீது தாக்கத்தை உருவாக்கியுள்ளது என்பதை ஏற்கனவே ஆய்வு செய்து பல கட்டுரைகளை எழுதி தேர்ச்சி பெற்ற எனது நண்பன் கடந்த ஒரு வருடகாலத்துக்கு மேலாக பரவி வரும் கோவிட் 19 தொற்று நோய் இலங்கையின் அபிவிருத்தியில் எவ்வாறான தாக்கங்களை உருவாக்கி யுள்ளது மற்றும் உருவாக்கப் போகின்றது என்பதை இக்கட்டுரைகளில் எளிமையான முறையில் எடுத்துக் விளக்கியுள்ளார்.

நீண்ட நெடிய யுத்தத்திலிருந்து மீண்டுள்ள போதிலும் யுத்தத்துக்குரிய அடிப்படை காரணங்களை சரி செய்யாது நொந்து வீழ்ந்து கிடக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை இத்தொற்று நோயானது எப்படி பாதித்துள்ளது என்பது தனித்து பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மட்டும் அல்லாது சமூக அரசியல் கண்ணோட்டத்தில் அனைத்து பிரிவு மக்களும் விளங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய வகையில் நோக்குவது இப் புத்தகத்தின் சிறப்பு அம்சமாகும். ஒரு பொருளியலாளன் ஒரு பொருளியல் விஞ்ஞானி என்பதற்கு அப்பால் அரசியல் மற்றும் சமூக விஞ்ஞானியாக இருக்க வேண்டும் என்பதற்கு இப்புத்தகத்தின் ஆசிரியர் பேராசிரியர் செ. சந்திரசேகரம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நண்பனின் இது போன்ற வெளியீடுகள் மென்மேலும் வெளிவந்து தமிழ் சமூகம் நன்மையடைய வேண்டுமென மனமார வழ்த்துகிறேன்.

**பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம்**
**பொருளியல் துறை**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
**இலங்கை.**
**05/06/2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

2019 டிசெம்பரில் இருந்து COVID 19 என்ற தொற்று நோயின் தாக்கம் இன்று உலகலாவிய ரீதியில் பரவி உலக நாடுகளை முடங்க செய்துள்ளது. இலங்கையிலும் இந்நோய்த் தாக்கம் காரணமாக கடந்த ஒரு வருடமாக பொருளாதாரம் முடங்கியுள்ளது. இந்த தொற்று நோயால் பொருளாதார முடக்கம் தொடர்கின்றது. இந்த வகையில் உலகப் பொருளாதாரங்களிலும் இலங்கையிலும் கொரோனாவினால் உருவான பொருளாதாரப் பிரச்சினைகளை ஆய்வு செய்து மக்களுக்கு சேரக் கூடியவாறு பிரசுரிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. மக்களை பொருளாதார ரீதியாக விழிப்படைய செய்ய வேண்டிய ஒரு இக்கட்டான காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

எனவே உலகப் பொருளாதாரங்களிலும் அதன் வழி இலங்கைப் பொருளாதாரத்திலும் கொரோனா தொற்றின் தாக்கத்தினை ஆராய வேண்டிய தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கோவிட்-19 உம் பொருளாதாரமும் என்ற தலைப்பில் ஒரு ஆய்வு புத்தகத்தை வெளியிடத் தீர்மானித்து வேலை செய்து கொண்டு இருந்தேன். எழுதப்பட்ட கட்டுரைகள் வாராந்த தேசிய பத்திரைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இக் கட்டுரைகளை வாசித்து பலர் நன்மை அடைந்துள்ளனர். வாசகர்கள் பலர் தினமும் தொடர்ச்சியாக வாசித்து என்னை ஊக்குவித்து வந்துள்ளனர்.

இக்கட்டுரைகள் ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. எடுத்துக் கொண்ட விடயங்களை விபரண ரீதியில் சில புள்ளி விபரங்கள் அடிப்படையில் விளக்கப்படுத்தப் படுகின்றன. பல கருத்துக்கள் எனது வாசிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறு எழுதப்பட்ட விடயங்கள் அனைத்துக்கும் ஆய்வுக் கட்டுரைகள் போன்று அடிக்குறிப்புக்கள் மற்றும் உசாத்துணைகள் இடப்படவில்லை. இக்கட்டுரைகள் புலமையாளர்கள் வாசிப்பதற்கு பதிலாக சாதாரண பொதுமக்கள் வாசித்து அறிவினை பெறுவதற்காக எழுதப்பட்டவை ஆகும். சில சிக்கலான பொருளாதார விடயங்களை சாதாரண மக்களும் விளங்க கூடிய வகையில் எளிமையான உதாரணங்கள் ஊடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகளை புத்தக வடிவில் கொண்டு வருவதற்கு பலர் உதவிகளை செய்துள்ளனர். இவ் வெளியீட்டு ஆசியுரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ச.சிறிசற்குணராஜா அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய எனது நண்பனும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் பேராசிரியராக கடமை புரியும் பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக் கிறேன். இக்கட்டுரைகளை ஆரம்ப பதிப்பீடுகளை செய்த வீரகேசரி மற்றும் தினக்குரல் ஆகிய தேசிய தினசரி பத்திரிகை நிறுவனங்களுக்கு நன்றியை தெரிவிக்கிறேன். மேலும் இந்த கட்டுரைகளை புத்தக வடிவில் வெளியிட உதவிய அபி பிரின்டர்ஸ் மற்றும் அபி பதிப்பகத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராசிரியர் செல்வரத்தினம் சந்திரசேகரம்**
**தலைவர்**
**பொருளியல்த் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**03 தை 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது துறையுடன் நெருங்கிய ஒரு
சகபணியாளராக, நிர்வாகியாக, ஆசானாக,
தந்தையாக, நண்பராக நீண்டகாலம்
அறிவுரைகள் வழங்கி என்னை
வழிப்படுத்தி மேன்மைப்படுத்திய
பெரும் மதிப்புக்குரிய வாழ்நாள்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
அவர்களுக்கு இந்நூலினை
காணிக்கையாக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

1. கொரோனாவின் பொருளாதார தாக்கங்கள்: ஒரு நோக்கு
2. இலங்கையில் கொரோனாவின் பொருளாதார தாக்கமும் தமிழர்கள் சேமிப்பும்
3. கோவிட் 19 உம் இலங்கைப் பொருளாதாரமும்.
4. இலங்கையில் அரச செலவீடும் கொரோனாவின் பொருளாதார மீட்சியும்
5. இலங்கையில் கொரோனாவும் பணத்தாள்களின் வெளியீடும்.
6. இலங்கையின் COVID-19 உல்லாசப் பயணத் துறையும்
7. இலங்கையில் கொரோனாவும் ரூபாவின் பெறுமதியும்.
8. COVID-19 உம் பொருளாதார மீட்சிக்கான நாணயத் தாள்களின் வெளியீடும்
9. இலங்கையின் நாணயத் தாள்களின் வெளியீடு பொருளாதார மீட்சிக்கு உதவுமா?
10. 20 அதிகாரம் கொரோனாவில் மீண்டு பொருளாதார அபிவிருத்திக்கு உதவுமா?
11. கொரோனாவும் தங்க நகைகள் மீதான முதலீட்டின் நன்மைகளும்
12. இலங்கையில் கொரோனாவும் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பும்
13. கொரோனாவும் விவசாயத் தொழில்நுட்பமும்
14. கொரோனாவின் பூகோள அரசியலும் இலங்கைப் பொருளாதாரமும்
15. இலங்கையின் பாதுகாப்பு செலவும் கடன் சுமையும்
16. இலங்கையில் கோவிட்-19 பொருளாதாரத்தில் உரு வாக்கிய தாக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 01

## கொரோனாவின் பொருளாதார தாக்கங்கள்: ஒரு நோக்கு

**Sunday, Virakesari, April 14, 2020**

### 1.1 உலக அழிவுகள்

உலகத்தில் மூன்று வகையான அழிவுகளை நாடுகள் சந்திக்கின்றன.

1. மனிதனால் உருவாக்கப்பட்ட அழிவுகள் (உதாரணமாக முதலாம் உலக யுத்தம், இரண்டாம் உலக யுத்தம் மற்றும் ஆக்கிரமிப்புகள், உள்நாட்டு யுத்தங்கள்,)

2. இயற்கையினால் உருவாக்கப்பட்ட அழிவுகள் (உதாரணமாக வெள்ளப்பெருக்கு சுனாமி, மண்சரிவு, போன்ற இயற்கை அனர்த்தங்கள்)

3. தொற்று நோய்கள் (கொலரா, மலேரியா, சார்ஸ் மற்றும் கொரோனா) இவைகளும் இயற்கை அழிவு களாக இருந்தாலும் இவை பரவும் தன்மை மற்றும் தாக்கத்தின் அடிப்படையில் வேறுபாடு உள்ளது.

### 1.2 தனிமைப்படுத்தலின் விளைவுகள்

இந்தப் பின்னணியிலேயே நாம் இதனால் ஏற்பட்ட தனிமைப்படுத்தலின் பொருளாதார தாக்கத்தினை நோக்க வேண்டும். உள்ளூர் பொருளாதாரத்தில் பின்வரும் தாக்கங்கள் உருவாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உற்பத்தி முயற்சிகள் நிறுத்தப்பட்டுள்ளதனால் பலர் வேலை இழந்துள்ளனர். குறிப்பாக அன்றாடம் கூலி தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் பாரியளவில் பாதிப்படைந்துள்ளனர். வேலையின்மை அதிகரித்து ள்ளது. இது வறுமை மற்றும் பட்டினி, போசாக்கின்மை போன்றவற்றை அதிகரிக்கும்.
2. உல்லாசப் பயணத்துறை அதிகமாக பாதிக்கப் பட்டுள்ளது.
3. தனியார் துறை ஊழியர்களும் தங்களுடைய வேலையை இழந்து வருமானங்களை இழந்துள்ளனர்.
4. சுயமுயற்சியாளர்கள் ஊரடங்கு காரணமாக தங்கள் தொழில்களை மூடியுள்ளனர். வெளியில் செல்ல முடியாத நிலை இருப்பதனால் முடிவுப் பொருட்களை விற்பதும் மூலப்பொருட்களை பெறுவதில் உள்ள சிரமம் காரணமாக தொழிலை நிறுத்தியுள்ளனர்.
5. பல கைத்தொழில்கள் மூடப்பட்டதால் முதலாளிகள் மற்றும் அவற்றில் வேலை செய்த தொழிலாளர்களின் வருமானங்கள் இழக்கப்பட்டுள்ளது.
6. விவசாயிகள் தங்கள் தொழில்களை செய்ய அனுமதிக்கப்பட்ட போதும் அவர்கள் சுதந்திரமாக தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமல் இருக்கின்றது. இதன் காரணமாக அவர்களின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த சந்தைகள் தொழிற்படாமையினால் தங்கள் உற்பத்திகளுக்கு நியாயமான விலையை பெற முடியாமல் இருக் கின்றது. உதாரணமாக இந்த மாதங்களில் மரக் கறிகளின் விலைகள் குறைவாக இருந்தாலும் கொரோனா நிலைமை இவைகளின் விலைகளை மிக பாதாள நிலைக்கு குறைத்துள்ளது. எல்லா மரக்கறிகளுக்கும் விவசாயிகளுக்கு கிடைக்கும் விலை குறைவானதாகும். பச்சை மிளகாய் கிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று விவசாயிகளிடம் இருந்து 40 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. கறிமிளகாய் 20 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. அநேகமான மரக்கறிகளின் விலைகள் கிலோ ஒன்று 40 ரூபாவுக்கு குறைவாகவே விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது. ஆனால் இம்மரக் கறிகள் நுகர்வோனுக்கு கொள்வனவு விலையை விட இரண்டு மூன்று மடங்கு அதிகமாக விற்கப்படுகின்றன. தற்போது உள்ள நிலைமை விவசாயிகளின் உற்பத்திப் பக்கத்திலும் அதிக தாக்கத்தை கொண்டிருக்கின்றன. ஊரடங்கு காரணமாக அவர்கள் பருவம் அறிந்து பயிர்செய்ய முடியாமல் இருக்கின்றது. இது விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்தும்.

7. சேவைத்துறைகளில் அத்தியாவசியத் தேவைகள் தவிர்ந்த ஏனைய எல்லாச் சேவைகளும் முடங்கியிருக்கின்றன. இது நாட்டின் சேவை உற்பத்தியில் அதிக பாதிப்பை உருவாக்குவதோடு பலர் வேலை மற்றும் வருமானத்தை இழந்துள்ளனர். குறிப்பாக உணவகங்கள், உல்லாசப்பயணம், போக்குவரத்து போன்றன பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளன.
8. ஏற்றுமதி முடங்கியிருக்கின்றது. இதில் வருமானம் பெற்றவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.
9. அரசுக்கு பல புதிய செலவீடுகள் உருவாகியுள்ளது. இது அரசின் நிதி நிலைமைகளில் பாதிப்பை உருவாக்கும்.
10. அரசின் வருமானங்கள் தடைப்பட்டுள்ளன. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 வடக்கு மற்றும் கிழக்கில் உருவாகிய விளைவுகள்

போருக்குப் பிந்திய – அதன் தாக்கத்தில் இருந்து முழுதுமாக மீண்டெழாத ஓர் இக்கட்டான அரசியல் சூழலில் கொரோனா வைரஸ் மூலமாகத் தமிழர் தாயகப் பகுதிகளாகிய வடகிழக்குப் பிரதேசம் பல பாதிப்பு களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்திலும் மேற்குறிப்பிட்ட தாக்கங்கள் உள்ளன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பாக விவசாயிகள் தங்கள் பொருளாதாரத்தை மீளமைத்து வரும் காலகட்டத்தில் இந்த சூழ்நிலையானது பாரிய பின்னடைவை உருவாக்கி யுள்ளது. இலங்கையில் தென்பகுதிக்கு வடக்கில் இருந்து மரக்கறி வகைகள் மற்றும் மீன்கள் அனுப்பப்படுகின்றன. தற்போது உள்ள நிலைமையால் இந்த சந்தை வாய்ப்பை இழந்த மக்கள் தங்கள் உற்பத்திகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்யக்கூடிய நிலை உருவாகி யுள்ளது. பீற்றூட்டை மாடுகளுக்கு போடும் நிலை ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் கறிமிளகாய் 10 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. கடல் உணவுகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விவ சாயிகள் மீனவர்கள் உற்பத்தி ரீதியாகவும் சந்தைப படுத்தல் ரீதியாகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வடக்கில் ஏறத்தாழ 65-75 வீதமான குடும்பங்கள் வெளிநாட்டு வருவாயில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்கியுள்ளனர். இந்த சூழ்நிலையானது அபிவிருத்தி யடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் அமெரிக்கா கனடாவில் மக்களை வீடுகளில் முடங்கச் செய்துள்ளது. இதன் காரணமாக அவர்கள் வருமானங்களை இழந்துள்ளனர். இது வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்த பணஅனுப்புதல்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளில் வீழ்ச்சியை உருவாக்கியுள்ளது. இதன் காரணமாக ஏற்கனவே உதவி பெற்றுக்கொண்டிருந்த போர் விதவைகள், பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள், அங்கவீனர்கள், முன்னாள் போராளிகள் போன்றவர்கள் அவர்கள் பெற்று வந்த உதவிகளை இழந்துள்ளனர் அல்லது குறைந்துள்ளது.

## 1.4 கொரோனாவுக்கு பின்னரான அரசியல் சமூக மாற்றங்கள்

உள்ளூர் மற்றும் வடகிழக்குப் பிராந்தியங்களிலான உடனடி பொருளாதாரப்பாதிப்பு கொரோனாவின் பின்னரான நிலைமைகளில் குறிப்பிடக் கூடிய செல்வாக்கைச் செலுத்துவதாக இருக்கும்.

இந்த கொரோனா பாதிப்பானது தேசிய மற்றும் வடக்கு கிழக்கு மக்களின் கொரோனாவின் பின்னரான செல்வாக்கு என்பது மிகவும் மோசமானதாகவே இருக்கும். நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போன்று ஏனைய அழிவுகள் ஒரு சிறிய காலத்துக்குரியவை. ஒரு வெள்ளப் பெருக்கு நாட்டில் ஒரு பிரதேசத்தில் உருவாகும்போது மறு பிரதேசத்தில் இருந்து உதவி கிடைக்கும். அனர்த்தம் குறுகிய காலத்தில் முடிந்துவிடும். மாதக் கணக்கில் ஒரு நட்டுக்குள் அல்லது உலகம் பூராக எல்லா பிரதேசங்களுக்கும் வெள்ளப்பெருக்கு சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் வந்ததில்லை. ஒரு நாட்டில் ஒரு பிரதேசத்தில் இவ்வாறான அனர்த்தம் ஏற்படும்போது உலக நாடுகளில் இருந்து உதவிகள் கிடைக்கின்றன. உலக மகாயுத்தங்களில் குண்டுகள் போட்டுவிட்டு விமானங்கள் சென்றவுடன் அந்த நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் ஆரம்பமாகி இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வடகிழக்கில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதும் பொருளாதார நடவடிக்கைகள் இருந்தன. ஆனால் தொற்றுநோய் தாக்கத்தின் பொருளாதாரப் பரிமாணம் அவ்வாறானதல்ல. இது நாட்டை மட்டும் அல்ல உலகத்தையே பொருளாதார நடவடிக்கைகளை ஸ்தம்பித மடையச் செய்துள்ளது. இது தொடர்ந்து மாதக் கணக்கில் செல்கின்றது. இது வருடக்கணக்குக்கு செல்லாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. எல்லோரையும் வீடுகளில் முடக்கியுள்ளது. வீட்டில் இருந்து இணையத்தள சேவைகளை பயன்படுத்தி வேலை செய்தல் என்பது மிகவும் வரையறைக்கு உட்பட்டது விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திகளை வீட்டில் இருந்து செய்ய முடியாது. எனவே இது தொடங்கிய காலத்தைவிட இனிவரும் காலங்களில்தான் பொருளாதார பாதிப்புக்கள் அதிகமாக இருக்கும்.

தேசிய ரீதியில் இலங்கை அரசாங்கம் இந்த அனர்த்தத்தை வெற்றிகரமாக கையாண்டுள்ளது. பரவலையும் இழப்புக்களையும் குறைத்தமைக்கு பிரதான காரணம் இலங்கையின் பொருளாதாரத்தில் வழங்கப்பட்டு வந்த இலவச சுகாதார சேவையும் இராணுவ பாணியிலான அரச நிர்வாகமும் ஆகும். அரசு ஒரு பக்கத்தில் ஜனநாயக விழுமியங்களை மதிக்காது காலவரையறையற்ற ஊரடங்கை கொண்டு மக்களின் அசைவுகளை தடுக்க மறுபுறத்தில் மக்களின் ஆதரவை பெறுவதற்கு மக்களுக்கு பல உதவிகளை செய்து வருகின்றமை ஆகும். மக்களை வீட்டில் வைத்து எத்தனை நாளைக்கு உணவுகள் உதவிகள், சம்பளங்கள் வழங்க இலங்கையின் பொருளாதாரம் இடம்கொடுக்கும் என்ற கேள்வி ஒருபுறம் இருக்க, ஏற்கனவே தேர்தலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட சலுகைகளும் அதை தொடர்ந்து இந்த கொரோனாவுக்காக மக்களுக்கு வழங்கப்பட்ட உதவி களுக்கும் இலங்கை மக்கள் என்ன விலையை கொடுக்கப் போகின்றார்கள் என்பதற்கான ஒரு அபாய மணியாக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை இங்கு குறிப்பிட முடியும். அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த மூன்று கிழமைகளில் 8 வீதத்துக்கு மேலாக வீழ்ச்சியடைந் துள்ளது. இதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் இந்த வீழ்ச்சியானது வைரஸ் பரவலினால் அமெரிக்காவின் பொருளாதாரம் சடுதியாக சரிவடைந்து அமெரிக்க டொலரின் வீழ்ச்சிக்கு மத்தியிலும் இலங்கை ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது என்பதாகும். எனவே ரூபாவின் வீழ்ச்சியானது உலகப் பொருளாதாரங்கள் குறிப்பாக அமெரிக்காவின் பொருளாதாரம் சீரான நிலையில் இருந்து இருக்குமானால், இது 20 வீதத்துக்கு அதிகமான வீழ்ச்சியை கொண்டிருந்திருக்கும். தேசிய ரீதியான அனர்த்தங்களை சந்திப்பதற்கு இலங்கையின் பொருளா தாரம் வலுவற்று இருக்கின்றது. ஹொங்கொங்கில் வணிக வங்கியொன்று தனது மத்திய வங்கியில் பேணுகின்ற ஒதுக்கம் 50 பில்லியன் யு.எஸ் டொலராக இருக்க, இலங்கை ஒரு நாடாக பேணுகின்ற ஒதுக்கம் ஏறத்தாழ 7 பில்லியன் யு.எஸ் டொலராக இருக்கின்றது. குறைந்த வெளிநாட்டு ஒதுக்கம், பாரிய கடன் சுமை, நட்டத்தில் இயங்குகின்ற அரச தொழில் முயற்சிகள், கீழ்நிலையில் மரபார்ந்த தொழில்நுட்பத்தில் நோய் வாய்ப்பட்டு உயிர் வாழ்கின்ற விவசாயத்துறை எல்லாவற்றுக்கும் மேலாக சமூகநலச் செலவீடுகளால் பீடிக்கப்பட்ட ஜனநாயக அரசியல் நோக்கம் கொண்ட அரச செலவீடுகள் என்பன இலங்கையில் கொரோனாவுக்கு பின்னரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தை மென்மேலும் பாதிப்படையச் செய்யும். இலங்கை ஒரு நிதிநெருக்கடிக்கு செல்லக்கூடிய அபாயங்கள் தென்படுகின்றன. இது பொதுத் தேர்தல் வரை வெளியில் தெரியாமல் மறைக்க அரசு பல உத்திகளை கையாண்டாலும் வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளில் இதன் தாக்கம் பிரதிபலிக்கும். (ரூபாவின் புறப்பெறுமதி வீழ்ச்சி). பொதுத் தேர்தலுக்கு பின்னர் நிலமை மோசமடையும். இருப்பினும் உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா இந்த வைரசால் உலகப் பொருளாதாரத்தில் தனது நிலையை இழந்து வரும் நிலையில் தற்போது சீனாவின் பொருளாதாரம் கொரோனா தாக்கத்தில் இருந்து மீண்டு எழுந்து உலகப் பொருளாதாரத்துக்கு தலைமை தாங்குமானால் சீனாவின் உற்ற நண்பரான இலங்கையும் அதன் சீனசார்பான தலைமையும் தப்பிப் பிழைக்க வாய்ப்பு உள்ளது. இது உலக அரசியல் மற்றும் பொருளாதார ஒழுங்கில் உருவாகும் மாற்றத்தில் தங்கியுள்ளது.

## 1.5 கொரோனாவும் இலங்கையில் பூகோள அரசியல் மாற்றமும்.

கொரோனா வைரஸ் பேரிடரின் விளைவாக அதன் பின்னரான (Post Covid -19) நிலைமைகள் நிச்சயமாக முன்னைய இயல்பு நிலைமைக்குத் திரும்பப் போவதில்லை. உலக ஒழுங்கில் கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ள தாக்கம் இதனைத் தெளிவாகப் பிரதிபலித்துள்ளது. குறிப்பாக உலக வல்லரசுகளின் நிலைமைகள் தலைகீழாக மாற்றம் பெறப் போவதை உலக நிலைமைகள் கோடிட்டு காட்டுகின்றன. இத்தகைய ஓர் எதிர்பார்ப்புச் சூழல் இலங்கையின் தேசிய பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதார அரசியல் நிலைமைகளில் தாக்கம் செலுத்தும் வாய்ப்புக்கள் உள்ளன.

உலகத்தின் தலைமை வலுச் சமநிலையானது அமெரிக்காவில் இருந்து சீனாவுக்கு மாறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. 2030-2050 களில் உலக பொருளாதாரத்துக்கு சீனப் பொருளாதாரம் தலைமை தாங்கும் என ஆய்வுகள் குறிப்பிட்டு இருந்தன. இருப்பினும் கொரோனாவின் தோற்றம் அதன் பரம்பல், இது சீனாவின் ஏனைய தாக்கங்களை விட சீனாவுக்கு வெளியே ஏற்படுத்திய தாக்கங்கள், கொரோனா தொடர்பாக தகவல்களை வெளியிட்டவர்களின் தொடர் பின்மை மற்றும் சீன அணி நாடுகளில் கொரோனாவின் குறைந்த தாக்கம் என்பன தொடர்பாக முற்றுப் பெறாத விடை காண முடியாத பல வினாக்கள் உள்ளன. இவ்வினாக்களின் அடிப்படையில், சீனாவுக்கு எதிராக உலகம் எப்படியான எதிர் நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதை பொறுத்து உலக பொருளாதார தலைமைத்துவ வலு தீர்மானிக்கப்படும்.

இந்த உலக வலுச் சமநிலை மாற்றமானது இலங்கையின் அரசியல் பொருளாதார நிலைமைகளில் செல்வாக்கு செலுத்தும். இலங்கையில் தற்போது உள்ள அரசியல் தலைமைத்துவமானது சீனாவின் பக்கமே அதிகம் சார்ந்துள்ளது. சீனாவிலும் சீனாவின் நேச அணியில் உள்ள நாடுகளிலும் கொரோனாவின் தாக்கம் குறைவாக உள்ளது. இலங்கையிலும் இது குறைவாக இருக்கின்றது. இந் நிலைமைக்கு காரணம் குறைந்த ஜனநாயகம் ஆகும். இந்த நிலைமையானது பொதுத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியின் அணியின் கைகளை ஓங்கச் செய்துள்ளது. எதிர்காலத்தில் சீனாவுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு மென்மேலும் வலுவடைந்து சீனாவில் இருந்து அதிக அன்னிய உதவிகளை இலங்கை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. உலகத்தில் யாரும் கண்ணை மூடிக்கொண்டு உதவிகள் செய்வதில்லை. அன்னிய உதவியும் ஒரு நவகாலணித்துவத்தின் குறிப்பாக நிதிக் காலணித்துவத்தின் அங்கமாகும். இந்த உதவிகளுக்கு மாற்றீடாக இலங்கையும் சீனாவுக்கு இலங்கையில் முதலிடுவதற்கான பல சலுகைகளை வழங்கி பல ஒப்பந்தங்களில் கையொப்பமிட வாய்ப்பு உள்ளது. இலங்கையின் மாறிவரும் அரசியல் சூழலை சீனாவின் எதிர் அணியில் உள்ள அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் எவ்வாறு கையாளும் என்பதைப் பொறுத்தே இலங்கையின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும்.

சீனாவின் உள்நாட்டு அரசியல் ஜனநாயகம் அற்றதாகும். சீனாவின் எந்த தீர்மானங்களும் மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டு எடுக்கப்படுவதில்லை. எடுக்கின்ற தீர்மானங்களுக்கு தலைவர்கள் மக்களுக்கு பொறுப்பு கூறவேண்டிய அவசியமும் இல்லை. இவ்வாறான உள்நாட்டு அரசியல் சூழலை தமக்கு சாதகமாக பயன் படுத்திக் கொண்டு உலக வலுவை சீனா தனதாக்கிக் கொள்ளக் கூடிய சூழல் காணப்படுகின்றது. அவ்வாறான உலக ஒழுங்குமாற்றப்படுமாக இருந்தால் அமெரிக்காவை விட சீனா வலுவான நிலையை தக்கவைத்துக் கொள்ளும் சக்தியைக் கொண்டுள்ளது. பொருளா தாரத்தில் அரசின் பங்கும் சீனாவில் அமெரிக்காவைவிட அதிகமாக உள்ளது. இந்த காரணங்களுக்காக சீனா கொரோனாவை அமெரிக்காவை விட இலகுவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. இந்த சூழல் சீனாவின் எதிர் அணிக்கு பாதகமாகவே உள்ளது. அரசும் அரசியல் தலைமைகளும் எல்லா முடிவுகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகம் என்ற பெயரில் மக்களிடம் மண்டியிட்டு இருக்கவேண்டி உள்ளது. தலைமைகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. சீனாவில் 1949 இல் இருந்து இன்று (2021) வரை ஒருகட்சி ஆட்சியும் ஒரு குழாம் தலைமைகளும் உள்ளன.

கொரோனா வைரசால் மாற்றமடைந்து வருகின்ற அல்லது வரப்போகின்ற இந்த உலக அரசியல் பொருளாதாரச் சூழலால் இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்கு எவ்வாறான அரசியல் பொருளாதார நன்மைகள் தீமைகள் கிடைக்கப்போகின்றன என்பது ஒரு பெரிய ஆய்வாகும்.

**கொரோனாவும் இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களும்.**

கொரோனாவுக்கு பின்னரான நிலைமைகள் வடக்கு கிழக்கில் உருவாக்க கூடிய தாக்கங்கள் பற்றி சிறப்பாக நோக்கப்பட வேண்டியவையாகும். வடக்கு கிழக்கின் பொருளாதாரம் முதன்மையாக வெளிநாட்டு வருவாய்களிலும், விவசாயம் மற்றும் மீன்பிடியில் அதிகம் தங்கியுள்ளது.

1998 ஆண்டு வடக்கு கிழக்கில் பொருளாதார தடை இருந்தபோது கொழும்பில் PIM (முகாமைத் துவத்துக்கான பட்டப்பின் படிப்பு நிறுவனம்) இல் தலைமைத்துவம் தொடர்பாக பட்டப்பின்படிப்பு மாணவர் களுக்கு விரிவுரை நிகழ்த்திய கலாநிதி பொன்சேகரா உலகிலேயே தலைமைத்துவத்துக்கு மிகவும் உயர்வாக தன்னால மதிக்கப்படுபவர் மேன்தகு வேலுப்பிள்ளை பிரபாகரன் எனக் குறிப்பிட்டார். அவர் இவ்வாறு குறிப்பிட்டதற்கு காரணம் இலங்கையின் தென்பகுதி எதுவித பொருளாதார தடையுமின்றி இருந்துகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியையும் மீனையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றபோது கடந்தவாரம் (அன்றைய விரிரையில் இருந்து) 20 லொறிகளில் அரிசியும் கருவாடும் பல ஆண்டுகள் பொருளாதார தடையில் இருக்கின்ற புலிகளின் கட்டுப்பட்டில் இருந்து வவுனியாவுக்கு வந்தமை ஆகும்.

எனவே நான் இங்கு குறிப்பிட விரும்புவது யாதெனில் வடக்கு கிழக்கு மக்களுக்கு அனர்த்த காலத்தில் எப்படி வாழ்வது என்பவை நன்கு பழக்கப்பட்டவை ஆகும். போக்குவரத்து சீராகும்போது அரிசியிலும், மரக்கறியிலும் மற்றும் மீனிலும் வடக்கு கிழக்கு பிரதேச மக்கள் அதிக பொருளாதார வாய்ப்பு பெற்று வருமானங்களை பெறுவார்கள். வன்னியில் நெல்லில் அதிக வருமானத்தை ஊரடங்கு காலத்தில் பெற்றுள்ளனர். அரசின் பொது வேலைவாய்ப்பில் இன பேதப்படுத்தலும் அதன் வழியான யுத்தமும் எமக்கு தந்த நன்மைகளில் ஒன்று பாரம்பரியமான விவசாயத்தை அதில் வருமானம் குறைவாக இருந்தாலும் நாம் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகும். கொரோனா இந்த துறையில் எமக்கு நிறைய வாய்ப் புக்களை வழங்கப்போகின்றது. நாடுகளின் தனிமைப் படுத்தல் காரணமாக இறக்குமதிகள் தடைப்பட்டு உள் நாட்டு உணவுப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கும் போது இலங்கையில் விவசாய மற்றும் மீன்பிடியில் ஈடுபடும் மக்கள் எதிர்காலத்தில் அதிக நன்மைகளை பெறப்போகின்றார்கள். இது வடக்கு கிழக்குக்கு அதிகமாக உருவாக வாய்ப்பு உள்ளது.

வடக்கு கிழக்கு மக்களுக்கு கொரோனாவுக்கு பின்னரான இன்னொரு வாய்ப்பு வெளிநாட்டு வருவாய் களின் உள்நாட்டுப் பெறுமதி அதிகரிப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பொருளாதாரம் எவ்வளவுக்கு எவ்வளவு சரிவடைகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு வெளி நாட்டுடன் தொடர்புடைய நம்மவர்கள் (70 வீதம்) நன்மையடைவார்கள். வெளிநாட்டு தொடர்புகள் குறையும் போ்து வெளிநாட்டு நாணயங்களின் வருகையும் குறை வடையும். இது நிரந்தரமாக வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் இலங்கைக்கு அனுப்பும் உழைப்பின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யும். இரண்டு கிழமைக்கு முன்னர் 1000 டொலர் பெற்றவர் ரூ 185000 ஐ பெற்றார். இன்று (2020 யூன்) ஏறத்தாள ரூ 200 000 ஐ பெறுகின்றனர்.

சுருக்கமாகக் குறிப்பிட்டால் 1970களில் இலங்கைப் பொருளாதாரம் விவசாயம் செய்பவர்களுக்கும் வெளி நாட்டு செலவாணிகளில் சம்பாதிப்பவர்களுக்கும் எவ்வா றான வாய்ப்பை கொடுத்ததோ அதை ஒத்த வாய்ப்பை கொரோனாவுக்கு பின்னரான நிலைமைகளில் இலங்கைப் பொருளாதாரத்தில் இருந்து வடக்கு கிழக்கு மக்கள் பெறுவதற்கான சாத்தியம் உள்ளது.

வடக்கு கிழக்கு மக்கள் காந்திகளாக இருந்து பின்னர் புலிகளாக இருந்து சிங்கங்களிடம் தோற்று விட்டார்கள். தோல்விகள் இயல்பானவை ஆகும். ஆனால் தோ்ல்விகளில் இருந்து மீண்டு எழாமல் இருத்தலோ மிகப் பெரிய தோல்வி ஆகும். தோல்விகளில் இருந்து மீண்டு எழுந்து கற்ற பாடங்களை நினைவில் நிறுத்தி நரிகளாக மாறி கொரோனாவால் உருவான புதிய உலக ஒழுங்கைப் பயன்படுத்த வேண்டும்.

மா புளிப்பது அப்பத்துக்குத்தான் நல்லது என்ற மரபுத்தொடர் தமிழில் உள்ளது. தமிழர்கள் இலங்கைத் தலைமைகளை சீனாவிடம் மண்டியிட என்னென்ன உள்ளீடுகளை இடவேண்டுமோ அவற்றை இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலில் இடவேண்டும். வெற்றியாளர்கள் கிடைக்கின்ற வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்துகின்றார்கள் அல்லது வாய்ப்புக்கள் உருவாக்க கூடிய சூழலை உருவாக்கி அவற்றை புத்திசாதுரியமாக பயன்படுத்துகிறார்கள். தமிழ்மக்கள் இந்த இரண்டு பக்கத்திலும் பயணிக்க வேண்டிய சூழலில் வாழ்கிறோம்.

மேற்கு உலகுக்கும் இந்தியாவுக்கும் விரோதமான சக்திகளின் பிரசன்னம் இலங்கை அரசியலில் அதிகரித்து தமிழர்களின் அரசியல் உரிமைகள் பாதுகாப்பதற்குமான சர்வதேச சூழலை கொரோனா உருவாக்கி தந்துள்ளது. இவற்றை சரியாக பயன்படுத்தி தமிழர் இருப்பினை இலங்கையில் பாதுகாப்பது தமிழ் அரசியல் தலைமை களிலேயே தங்கியுள்ளது.

துரதிஸ்டமாக இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் நடைபெற்ற யுத்தத்துக்கு தலைமை தாங்கிய புலிகள் அவ்வாறன அரசியல் நரித் தலைமைகளை அழித்து விட்டனர். மாக்கியாவல்லி குறிப்பிடுவது போன்று அரசன் நரியாகவும் புலியாகவும் இருக்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு இரண்டையும் இழந்து பச்சோந்திகளை சுமந்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 02

## இலங்கையில் கொரோனாவின் பொருளாதார தாக்கமும் தமிழர்கள் சேமிப்பும்

Sunday Virakesari, May 03, 2020

### பின்னணி

கொரோனா என்ற COVID-19 தொற்று நோய்த் தாக்கம் உலகப் பொருளாதாரத்தில் ஒரு மூலையில் ஒரு நாட்டின் அல்லது ஒரு பிராந்தியத்தின் மீது பின்னடைவை கொண்டிருக்காமல் உலகத்தின் எல்லா நாடுகளிலும் எதிர் காலத்தில் பாரிய பொருளாதார பின்னடைவை உருவாக்கப் போகின்றது என்பதை பல ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. 1981 ஆண்டு கண்டறியப்பட்ட ஏச் ஐ வி வைரஸ் தொற்றுக்கு இன்று வரை முற்றாக குணப்படுத்த மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. கொரோனாவால் உருவான பொருளாதார பின்னடைவில் உலகத்தில் முன்னணி பொருளாதார தலைமை நாடாக விளங்கும் அமெரிக்காவே பொருளாதார பின்னடைவை சந்தித் துள்ளது எனில் ஏற்கனவே நீண்ட கால உள்நாட்டுப் போரினால் சின்னாபின்னமாகி இருக்கின்ற இலங்கைப் பொருளாதாரம் எவ்வளவுக்கு தாக்கு பிடிக்கும் என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்வது இலகுவானதாகும். கடந்த காலத்தில் உலகின் முன்னணி பொருளாதார வளர்ச்சி வீதத்தை கொண்ட நாடுகளின் 2020 ஆண்டுக்கான எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி வீதம் படுமோசமாக வீழ்ச்சியடையும் என எதிர் பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடுகள் | 2019கணக்கிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி வீதம | 2020 இல் Covid19 முன்னரான எதிர்பார்க்கப் பட்ட பொருளாதார வளர்ச்சி வீதம் | 2020 இல் Covid 19 பின்னரான சீராக்கப் பட்ட பொருளாதார வளர்ச்சி வீதம் | பொருளாதார மந்தத்தை சரிப்படுத்தக் கூடிய இயல்தகவு (சர்வதேச ஒதுக்கம்) US$ billion March 2020 |
|---|---|---|---|---|
| சீனா | 6.10 | 6.0 | 2.30 | 3180(1) |
| அமெரிக்கா | 2.30 | 4.0 | 0.40 | 128 (20) |
| ஐரோப்பா | 1.20 | 1.3 | -1.0 | 73(ECB மட்டும்) |
| **இலங்கை** | **2.30** | **4.5** | **2.10** | **7 (85)** |

03 May 2020

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது 2020 இல் எதிர்பார்த்ததை விட ஏறத்தாழ அரைபங்கினால் வீழ்ச்சியடையவுள்ளது. உலகுக்கு பொருளாதார நெருக்கடியானது புதிதல்ல. இவைகளில் பல பிராந்திய நெருக்கடிகளாகவும் நாடுகளுக்கான தனிப்பட்ட நெருக்கடிகளாகவும் இருந்துள்ளன. ஆனால் COVID 19 இனால் உருவான பொருளாதார நெருக்கடி உலகில் எல்லா நாடுகளையும் பாதித்த, 1929-33 காலத்தில் உருவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகபொருளாதார மந்தம் போன்று உலகலாவிய பொருளாதார நெருக்கடியாக தொடர இருக்கின்றது.

**நெருக்கடியில் இருந்து மீண்டு எழுவதற்கான இலங்கையின் இயல்தகவு.**

கொரோனாவினால் தொடருகின்ற பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டு அதில் இருந்து மீள்வதற்கான இலங்கையின் இயல்தகவானது நெருக் கடியின் உலகலாவிய நிலைப்பாடு, நாடுகளின் சர்வதேச ஒதுக்கம் (இவை தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் பேணப்படும்), அரசுகளின் பொதுப்படு கடன்களின் அளவு, அரச நிறுவனங்களின் வினைத் திறனான செயலாற்றம், மக்களின் கடின உழைப்புடன் கூடிய நாட்டுப்பற்று மற்றும் பூகோள அரசியல் நிலைமைகள் போன்றவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. இலங்கையை பொறுத்த வரை நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மேற்குறித்த காரணிகள் சாதகமாக இல்லை எனலாம்.

முதலாவது, நெருக்கடியின் தார்ப்பரியம் இலங்கைக்கு மட்டும் உரியது அல்ல. இலங்கைக்கு மட்டுமாக இருந்தால் உலகில் ஏனைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி அமைப்புக்களில் இருந்து உதவிகள், கடன்கள் மற்றும் நன்கொடைகள் பெற்று நெருக்கடியில் இருந்து மீள முடியும். இந்நோக்கில் இவ் உலகலாவிய நெருக்கடி இலங்கைக்கு சாதகமாக இல்லை எனலாம்.

இரண்டாவது, சர்வதேச ஒதுக்கத்திலும் இலங்கை உலகில் 85 வது நிலையில் மிகச் சிறிய ஒதுக்கத்தை கொண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியை தனது ஒதுக்கத்தின் வழி சமாளிக்க இலங்கைக்கு முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக அரசானது குறைந்த கடனைக் கொண்டிருக்குமானால் இதில் இருந்து மீள முடியும். ஆனால் இலங்கையின் மொத்த பொதுப்படுகடனானது மொத்த உள்நாட்டு உற்ப்பத்தியின் சதவீதமாக 2020 மார்கழியில் ஏறத்தாழ 91.3 வீதமாக உள்ளது. உலகில் ஒருவரும் சுயநலம் இன்றி நாடுகளுக்கு உதவி செய்வது இல்லை. தற்போது உள்ள நிலையில் சீனா மற்றும் இந்தியாவின் உதவி கிடைக்க கூடிய சூழல் உள்ளது. இது கூட அவர்களின் பொருளாதார சூழல் மற்றும் உலக அரசியலில் உள்ள மாற்றங்களால் மட்டுமே தீர்மானிக்கப்படும். அவ்வாறு உதவி வழங்கினாலும் உள் நாட்டில் அவ்உதவிகளை கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடிய அரசியல் தலைமைத்துவம் மற்றும் பணிக்குழுக்கள் உள்ளனவா? என்பது கேள்வியாகும். இலங்கையில் பயங்கரவாதத்தை வெற்றி கொண்ட அரசியல் தலைமை யுத்தம் நிறைவுற்று 11 ஆண்டுகள் நீங்கியும் பயங்கரவாதத்துக்கான காரணங்களுக்கு பரி காரம் தேடாமல் அக்காரணங்களை மென்மேலும் தீவிர மாக்குகின்றது. இது இலங்கை கடந்த கால அனுப வங்களில் இருந்து பாடங்களை கற்றுக் கொள்ளவில்லை என்பதை தெளிவாக காட்டுகின்றது. இது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள உதவாது.

நான்காவதாக நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கெயின்ஸ் குறிப்பிட்டது போன்று அரசு தொழில் முயற்சிகளில் நேரடியாக பங்கு கொண்டு வேலை வாய்ப்பு வெளியீட்டை அதிகரிப்பதாகும். இந்த அணுகு முறை கூட இலங்கைக்கு சாதகமாக இருக்க வில்லை. இலங்கையில் உள்ள அரச தொழில் முயற்சிகளான இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், சிறீலங்கன் விமான சேவை, இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரத திணைக்களம், இலங்கை போக்குவரத்து சபை போன்ற பல அரச தொழில் நிறுவனங்கள் அரசுக்கு பாரிய சுமையாக நட்டத்தில் இயங்குகின்ற நிலையில் மேலும் அரச தொழில் முயற்சிகளை உருவாக்கி பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பது என்பது முயல் கொம்பாகும்.

கொங்கொங் மற்றும் சிங்கப்பூரின் பிரதான விமான சர்வதேச விமான நிலையங்களில் ஒரு நிமிடத்துக்கு சராசரி 5 விமானங்கள் தரை இறங்குகின்றன அல்லது மேல் எழுகின்றன. இப்படி இலங்கையை விட மிகவும் பின்னுக்கு இருந்த இந்த நாடுகள் அவர்களுடைய விமான நிலையங்களில் இருந்து மிகப் பெரிய வருவாயை உருவாக்குகின்ற போது இலங்கையில் அம்பாந்தோட்டை - மத்தள விமான நிலையம் தொழிற்பட தொடங்கி 7 வருடங்களுக்கு பின்னரும் அது நெற்களஞ்சியமாக பயன் படுத்தப்பட்டுள்ளமை இலங்கை பொது நிறுவனங்களை உருவாக்கினால் என்ன நிலைமை உருவாகும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஐந்தாவது, ஒரு நாட்டை கட்டியெழுப்புதல் அல்லது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு எழுதல் என்பது அந்த நாட்டு மக்களின் கடின உழைப்பிலும் தேசிய பற்றிலும் பெரிதும் தங்கியுள்ளது. நீண்ட பல தியாகங்களை அத்திவாரமாக இட்ட சுதந்திர போராட்டங்களும் அதன்வழி அடையப்பெற்ற சுதந்திரமும் தேசியபற்றுள்ள மக்களை உருவாக்கின்றது. இலங்கை யின் சுதந்திரம் அவ்வாறானது அல்ல (பெறப்பட்ட சுதந்திரம் அல்ல. கொடுக்கப்பட்ட சுதந்திரம்). இது ஒரு இரவுக்குள் கொடுக்கப்பட்டது. இலங்கையை பொறுத்த வரையில் அரசியல்வாதிகள் நாட்டு மக்களை இன வாதத்துடன் கூடிய இலவச சமூகநலச் சேவைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறிப்போன கடின உழைப்பற்ற, எப்போதும் அரசின் இலவச கொடுப்பனவுகளை எதிர்பார்த்து அரசுடன் கையேந்தி இருக்கின்றதும், உற்பத்தி திறன் அற்ற அரச தொழில்களை எதிர்பார்த்து இருக்கின்ற மக்களை கொண்ட ஒரு நாடாக கடந்த 70 ஆண்டுகளாக வளர்த்து விட்டனர். இலவசக் கல்வி ஊடாக வளர்க்கப்பட்ட புத்திஜீவிகளும் அரசின் இனவாத கொள்கையினையும் அரசியல்வாதிகளின் ஊழல்களையும் ஆதரிக்கின்றனர். அல்லது அவற்றை தெரிந்தும் மௌனமாக உள்ளனர். இலங்கையில் உள்ள புத்திஜீவிகளில் எத்தனை பேர் இலங்கையின் இனவாதம் அல்லது ஊழல் பற்றி எழுதியுள்ளனர்? அரசியல் வாதிகளும் படுமோசமான நாட்டை குட்டிச்சுவராக்குகின்ற ஊழல்கள், அதிகார துஸ் பிரயோகங்கள் மோசடிகள் போன்றவற்றை செய்துவிட்டு தங்கள் அரசியல் இருப்புக்காக இனவாதத்தையும் இலவச சமூகநல சேவைகளையும் செய்து மக்களை மகிழ்வித்து ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி நாட்டை பொருளாதார ரீதியில் சீரழித்து வந்துள்ளனர். ஜனநாயக அரசியலில் நெடுங்காலம் ஊறிப் போன பெரும்பான்மை மக்களை இந்த உளப்படிமத்தில் இருந்து மாற்ற முடியாது. இவ்வாறு வளர்க்கப்பட்ட மக்களும் அரசியல் தலை வர்களும் நாட்டுபற்று உள்ளவர்கள் என கூற முடியாது. இவர்கள் இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை எப்படி மீட்பார்கள்?

1997/98 காலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார நெருக்கடியின் போது அந்த நாடுகளின் அரசியல் தலைவர்களும் மக்களும் தங்க ளிடம் உள்ள தங்க நகைகள், அந்நிய செல வாணிகளை வங்கிகளில் வைப்பில் இட்டு நாட்டை நிதி நெருக்கடியில் இருந்து தாய் நாட்டை மீட்பதற்கு வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன்பு நீண்ட வரிசையில் நின்றனர். இவ்வாறான நாட்டுப் பற்றுள்ள மக்களைக் கொண்டு அரசு நாட்டை நிதி நெருக்கடியில் இருந்து மீட்டது. பொருளாதாரங்கள் பழைய நிலைக்கு திரும்பின.

இலங்கை அவ்வாறான பொருளாதார நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டால் தென்கிழக்கு ஆசிய நாடு களைப் போன்று வங்கிகளுக்கு முன்னால் அவ்வாறான நீண்ட ஒரு மக்கள் கூட்டத்தை காணலாம். அக் கூட்டம் வைப்பில் இடுவதற்காக அல்ல. வைப்பில் மற்றும் பாதுகாப்பு பொட்டகங்களில் இட்டதை மீளப் பெறுவ தற்காக ஆகும். நாடு நிதி நெருக்கடியில் உள்ள காலங்களில் அரசு அவசர கால சட்டத்தை பிரகடனப் படுத்தி வங்கிகளிடம் இருந்து பொது மக்களின் வைப்புக் களையும் தங்க நகைகளையும் அரச நிதித் தேவைக்கு பயன்படுத்திய சம்பவங்கள் உலகில் இடம் பெற்றுள்ளன. இலங்கையில் நீதி மன்றங்கள் வழங்குகின்ற தீர்ப்புக் களை அவமதித்து பெருபான்மை மக்களின் விருப்புக்கு தொழிற்படுகின்ற அரசு இவ்வாறான நிதிச் சட்டங்களுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்கு செல்லாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசினால் கொடுக்கப்பட்ட வாய்ப்புக்கள் திட்டமிட்ட முறையில் இன பேதப்படுத்தல்களுக்கு உட்பட்டு இருந்த காரணத்தி னாலேயே தமிழ் மக்கள் அகிம்சையிலும் ஆயுத வழியிலும் பல போராட்டங்களில் ஈடுபட்டு, இறுதியில் 2009 யுத்தம் முடிடைந்து 10 வருடங்கள் கழிந்த பின்னரும், பல உலக நாடுகளின் வலியுறுத்தலில் மத்தியிலும் தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வுக்கான எந்த விதமான முன்னெடுப்புக்களும் இடம் பெறவில்லை என்பது ஒருபுறம் இருக்க, என்னென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப் பேதப்படுத்தல்களால் இந்த முரண்பாடுகள் மற்றும் யுத்தம் உருவானவையே அவைகள் மிகவும் தீவிரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. உதாரணமாக தமிழ் மக்கள் முண்டு கொடுத்த கடந்த கால நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியின் போது 8ம் ஆண்டு கல்வித் தரத்துடன் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மின்சாரமானி வாசிப்பதற்கான அரச தொழில் வாய்ப்பில் கூட பல இளைஞர்கள் இங்கு வேலையின்றி இருக்க, சிங்கள மக்களுக்கு அந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. நீதி மன்ற அறிவுறுத்தலையும் மீறி பௌத்த துறவியின் உடல் பிள்ளையார் தீர்த்தமாடுகின்ற குளத்தில் எரிக்கப் பட்டுள்ளது. புதிய ஜனாதிபதி பெரும்பான்மை மக்கள் எதை விரும்புகிறார்களோ (சிறுபான்மையினரை இனப்படு கொலை செய்தல் ஆயினும்) அதை நிறை வேற்றுவதாக ஆணை பெற்று ஆட்சிக்கு வந்துள்ளார். அவருடைய கட்சி நாடாளுமன்ற தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று இக்கொள்கையை மென்மேலும் உறுதியாக முன்னெடுத்து செல்ல இருக்கின்ற இக்கால கட்டத்தில் கொரோனா உருவாகி யுள்ளது. யார் என்ன ஆட்டம் போட்டாலும் இறைவன் ஒருவர் இருக்கிறார். தலைவர்கள் யாருக்கும் பதில் கூறி தப்பிக்க முடியும். ஆனால் இவர்கள் இறைவனுக்கு பதில் கூற வேண்டும்.

அரசின் இனப்பேதப்படுத்தல்கள் கொரோனாவினால் இலங்கை அரசுக்கு பொருளாதார நெருக்கடி வரும் போது தமிழர்கள் தங்கள் சேமிப்பு வைப்புக்களையும் தங்க நகைகளையும் அரசுக்கு தாங்களாகவே முன்வந்து கொடுத்து நாட்டை மீட்டெடுக்கும்படி அரசிடம் வேண்டி நிற்கும் நாட்டுப் பற்றாளர்களாக இருப்பார்களா? அல்லது அரசு முற்கூட்டியே பொதுவாக நிதி முடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுமாயின் முடக்கத்தால் அதிகம் பாதிக்கப்படுவது யார்? என்ற கேள்வி எழுகின்றது.

**இலங்கையில் நிதி நெருக்கடி காலத்தில் தமிழர்களின் சேமிப்பு**

வடக்கில் இன்றைக்கு ஏறத்தாழ 65 வீதமான குடும்பங்கள் நேரடியாகவே அல்லது மறைமுகமாகவே வெளிநாட்டு வருவாயைப் பெறுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இந்த வருவாய்கள் இலங்கையில் அரச மற்றும் தனியார் வங்கிகளில் சேமிப்பு வைப்புக்களாக இடப்படுகின்றன. திரட்டப்பட்ட வைப்புக்களில் வீதமாக திரட்டப்பட்ட பிரதேசத்தில் வழங்கிய கடன் யுத்த காலத்தில் 15-25 வீதமாக இருந்து, யுத்தம் முடிவடைந்த பின்னர் இது 40-50 வீதமாக அதிகரித்துள்ளது. இந்த சேமிப்பை உறிஞ்சி எடுப்பதற்காக பல வங்கிகள் வடக்கு மற்றும் கிழக்கில் முண்டியடித்துக் கொண்டு பல கிளைகளை திறந்துள்ளன. மேல் மாகாணத்திலும் வங்கிகளில் வைப்பிலிடப்படும் சேமிப்பில் தமிழர்களின் பங்கு அதிகமாகும்.

அரசியல் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் உருவான நிதி நெருக்கடியின் போது நாடுகளின் நாணயங்களின் அகப்பெறுமானம் மற்றும் புறப் பெறுமானங்கள் மிகவும் பாரதூரமாக தேய்வடைகின்றன. 1992 இல் சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் அதன் வழியான பொருளாதார மந்தந்தின் போது இரசியாவின் ரூபில் நாணயத்தின் பெறுமானம் மிகவும் மோசமாக வீழ்சியடைந்தது. நெருக்கடிக்கு முன்னர் மக்கள் வங்கிகளில் கார் வாங்குவதற்கு சேமிப்பாக வைப்பில் வைத்திருந்த பணம் நெருக்கடிக்கு பின்னர் ஒன்று அல்லது இரண்டு பஸ் ரிக்கற்றுக்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. அவ்வளவுக்கு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே தமிழ் மக்கள் தாய் நாட்டை இழந்து, உறவுகளை இழந்து கடும் குளிரில் கடின உழைப்பால் வாயைக்கட்டி வயிற்றை கட்டி சுகபோகங்களை இழந்து வீடு வாங்குவதற்கு சேமிக்கப்பட்ட வைப்புக்கள் கொரோனா நெருக்கடியால் இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய நிதி நெருக்கடியால் பெறுமதி இழந்து ஒரு இரு பஸ் ரிக்கற்றுக்கள் வாங்க கூடிய நிலை வரக் கூடாது என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

தமிழர்களின் சேமிப்பில் அவர்களின் கலாச்சாரத்துடன் பின்னிபிணைந்த ஒரு சேமிப்பாக தங்க நகைகள் உள்ளன. உலகில் பொருளாதார நெருக்கடிகளின் போது தங்கத்தின் விலைகள் அதிகரிக்கின்றன என்பது மட்டும் அல்ல, உலகலாவிய ரீதியில் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு போக்கு காணப்படுகின்றது. 2000 ஆண்டு ஒரு பவுண் தங்கத்தின் விலை ரூபா 6000 இருந்தது. இது 2012 இல் 60 000 ஆக 10 மடங்காக அதிகரித்துள்ளது. தங்க நகைகளை அணிவதால் குடும்பம் அடைகின்ற மகிழ்ச்சிக்கும் பொருளியலில் பெறுமதியுண்டு. அவ்வாறு நோக்கின் தங்க நகைகளின் பெறுமதி அதிகரிப்பு 10 மடங்கை விட பல மடங்கு அதிகமாக இருக்கின்றது.

எனவே, எமது உறவுகளே தங்க நகைகளில் முதலீடு செய்யுங்கள். நிலைமைகளுக்கு ஏற்ப ஊரடங்கு காலங்களில் வங்கிகளுக்கு சென்று வருவது கஸ்டமாக இருப்பதால் வங்கிப்பொட்டகங்களில் தங்க நகைகளை பாதுபாப்பில் இடுவதை தவிர்க்கலாம். உங்கள் வீடுகளில் பாதுகாப்பாக தங்க நகைகளை பாதுகாக்கவும். இடவசதியுள்ள மக்கள் கால்நடைகள், விவசாயப் பொறித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள், விவசாயக் கைத்தொழில் பொறிகள் மற்றும் இயந்திரங்கள், காணிகள் கட்டிடங்கள் போன்றவற்றில் உங்கள் சேமிப்புக்களை முதலீடு செய்து எங்களை நாங்களே பாதுகாத்து தன்னிறைவு பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவோம்.

தமிழர்களின் உயிர்களுக்கே பாதுகாப்பற்ற இலங்கையில் கொரோனா சூழலில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடிச் சூழலில் ஆட்சியாளர்களின் அதிகாரத்தின் கீழ் உள்ள நிதிநிறுவனங்களில் அதிகளவில் தமிழர்களால் சேமிக்கப்படும் பௌதீக நிதி மற்றும் திரவச் சேமிப்பு சொத்துக்களை ஆட்சியாளர்கள் பாதுகாத்து அவர்களுக்கு தேவைப்படும் போது எல்லாம் மீள வழங்குவார்களா? என்ற வினாவுக்கான விடையை நாம் ஒருவரும் தேடுதல் வேண்டும்.

நாடு கொரோனாவினால் பாதிப்படைந்து இறக்கின்ற போது இறந்த உடல்கள் இத்தொற்றினால் கடுமையாக பாதிப்படைந்த நாடுகளில் கூட புதைக்கின்ற போது, இலங்கையில் முஸ்லீம் மக்களின் உடல்களை எரிப்பதை அரசியல் ஆக்கிய சம்பவம் மேற்குறித்த கேள்விக்கான விடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 03

## கோவிட் 19 உம் இலங்கைப் பொருளாதாரமும்.

SundayVirakesari, May 10, 2020

உலகம் பூராக கோவிட் 19 கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக உலகப் பொருளாதாரம் முற்றாக முடங்கி இருக்கின்றது. இலங்கைப் பொருளாதாரத்தில் 2018 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறை 56 வீதமாகவும் கைத்தொழில் துறை 26 வீதமாகவும் மற்றும் விவசாயத் துறை 7.1 வீதமாகவும் இருக்கின்றது. மொத்த வேலைவாய்பை பொறுத்த வரையில் சேவைத் துறை 46.6 வீதத்தையும், கைத்தொழில் துறை 25 சதவீதத்தையும் விவசாயத் துறை 27 சதவீதத்தையும் வழங்குகின்றது. இத்தொற்று நோயானது சேவைத்துறையில் உள்ள தொழில்களையே அதிகமாக தாக்கியுள்ளது. விடுதிகள், உணவகங்கள், களியாட்ட விடுதிகள், உல்லாசப் பயணத்துடன் தொடர்புடைய தொழில்கள், போக்குவரத்து (தரை, கடல் மற்றும் விமானம்), வங்கித்தொழில், மொத்த சில்லறை வர்த்தகம் போன்ற சேவைத் தொழில்கள் மிகவும் கடுமையாக செயலிழந்து உள்ளன. இலங்கை போன்ற சேவைத்துறையில் அதிகம் தங்கியிருக்கின்ற பொருளா தாரங்களுக்கு கோவிட் 19 பாரிய பொருளாதார தாக்கங்களை உருவாக்கியிருக்கின்றது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2018 இல் முறையே 4.5 மற்றும் 5.6 சதவீத பங்களிப்பை வழங்குகின்ற இலங்கையின் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் சேவைத்துறை முன்னணி வகித்த போதும் இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பொருளாதாரம் போன்று அல்லாமல் சேவைத்துறை சற்று குறைவான முக்கியத்துவத்தையே பெறுகின்றது. இதனால் இப்பாதிப்புக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு குறைவாக உள்ளது.

| | விவசாயத்துறை % | | கைத்தொழில் துறை % | | சேவைத்துறை % | |
|---|---|---|---|---|---|---|
| | உற்ப த்தி | வேலை வாய்ப்பு | உற்பத்தி | வேலை வாய்ப்பு | உற்ப த்தி | வேலை வாய்ப்பு |
| இலங்கை | 7.1 | 27 | 25 | 26 | 56 | 46.6 |
| வடக்கு மாகாணம் | 28 | - | 24.2 | - | 47.1 | - |
| கிழக்கு மாகாணம் | 27.2 | - | 27.2 | - | 47.7 | - |

கோவிட் 19 இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்படுத்திய தாக்கங்களை பல கட்டுரைகள் எடுத்து இயம்புகின்றன. யுத்தத்தில் இருந்து மீண்டு எழுந்து பல சமூக அரசியல் பிளவுகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் இத்தொற்று நோய்ப் பிரச்சினையும் அதன் வழியான பொருளாதார பிரசினைகளும் உருவாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **பொழுது போக்கு மற்றும் உல்லாசப்பயணத் தொழில்கள்**

இந்த தொற்று நோய் காரணமாக பாதிக்கப்பட்ட பொருளாதார துறைகளில் மிகவும் முதல் நிலையில் உள்ள துறையாக சேவைத்துறை உள்ளது சேவைத் துறைக்குள் முதலிடத்தை வகிப்பது உல்லாசப்பயணம் ஆகும். இது உள்நாட்டு உல்லாசப்பயணமும் வெளிநாட்டு உல்லாசப்பயணத்தையும் முற்றாக ஸ்தம்பிதம் அடையச் செய்துள்ளது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 இல் மொத்த உல்லாசப்பயணிகளின் வருகை ஏறத்தாழ 5 இலட்சமாக இருந்தது. இது 2018 இல் 22 இலட்சத்தை கடந்து 23 33 768 பயணிகளாக இருந்தது. ஒரு உல்லாசப்பயணி இலங்கையில் ஒரு வருகையின் போது சராசரியாக 2000 அமெரிக்க டொலர்களை செலவு செய்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. உல்லாசப்பயணத்தால் 2010 இல் இலங்கை பெற்ற மொத்த வருமானம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும் இது 2018 இல் 4500 மில்லியன் டொலர்கள் ஆக ஒன்பது மடங்கு அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு இலங்கைப் பொருளாதாரத்துக்கு பல வாய்ப்புக்களை உருவாக்கி இருந்தது. 2019 இல் பயங்கரவாத குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து இது 3592 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. 2020 ஆண்டில் இந்த தொற்று நோய்காரணமாக இந்த வருமானம் 2010 இல் இருந்ததை விட கீழ்நிலைக்கு செல்லும் என எதிர்வு கூறப்படுகின்றது. இது பூச்சிய நிலைக்கு செல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உல்லாச பயணிகளின் வருகையின் போக்குகள்


| Month | 2018 | 2019* | மாற்றத்தின் வீதம். 2018/19 | 2020* | மாற்றத்தின் வீதம். 2019/20 |
|---|---|---|---|---|---|
| தை | 238,924 | 244,239 | 2.2 | 228,434 | (6.5) |
| மாசி | 235,618 | 252,033 | 7.0 | 207,507 | (17.7) |
| பங்குனி | 233,382 | 244,328 | 4.7 | 71,370 | (70.8) |
| சித்தரை | 180,429 | 166,975 | (7.5) | --- | --- |
| வைகாசி | 129,466 | 37,802 | (70.8) | --- | --- |
| ஆனி | 146,828 | 63,072 | (57.0) | --- | --- |
| ஆடி | 217,829 | 115,701 | (46.9) | --- | --- |
| ஆவனி | 200,359 | 143,587 | (28.3) | --- | --- |
| புரட்டாதி | 149,087 | 108,575 | (27.2) | --- | --- |
| ஐப்பசி | 153,123 | 118,743 | (22.5) | --- | --- |
| கார்த்திகை | 195,582 | 176,984 | (9.5) | --- | --- |
| மார்கழி | 253,169 | 241,663 | (4.5) | 393 | (99.8) |
| **Total** | **2,333,796** | **1,913,702** | **(18.0)** | 507,704 | (73.5) |

மூலம்:Monthly Tourist Arrivals Reports 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலமாக இதன் வீழ்ச்சி மென்மேலும் அதிகரித்து செல்கின்றது. 2020 இல் இது யுத்த காலத்தை விட கீழ் நிலைக்கு செல்லும்.




இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உல்லாசப்பயணத் துறையின் பங்கு 2018 இல் ஏறத்தாழ 6 சதவீதம் ஆகும். இத்துறையில் கோவிட் 19 தொற்றால் ஏற்படும் தாக்கம் மிக உயர்வானதாக இருக்கின்றது. 2018 ஆண்டில் உல்லாசப்பயண துறையில் 169 000 பேர் நேரடியாகவும் 219 000 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை பெற்று இருந்தனர். இந்த தொற்று நோயானது ஏறத்தாழ 388 000 இலங்கையர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை இழக்கச் செய்துள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசத்தில் நீண்ட கால யுத்தம் காரணமாக உல்லாசப் பயண தொழில்களில் முதலீடுகள் குறைவாக இருக்கின்றன. யுத்தத்துக்கு பின்னர் மிருதுவான வளர்ச்சியே இடம் பெற்றுள்ளது. இத்தொற்று நோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது வடகிழக்கில் இத்துறையில் வேலை வாய்ப்பு இழப்பு குறைவானதாகும்.

## 2. வெளிநாட்டு பண அனுப்புதல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி.

இலங்கைக்கு வெளிநாட்டு வருவாயை உழைத்து தருகின்ற இன்னொரு மூலமாக வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கையர்கள் உழைத்து அனுப்புகின்ற பணத்தினைக் குறிப்பிடலாம். 2018 ஆண்டில் 129 774 ஆண்களும் 81 685 பெண்களுமாக மொத்தம் 211000 பேர் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்று இருந்தனர். இவர்கள் இலங்கைக்கு அலுவலக ரீதியாக அனுப்பிய பணம் 2018 இல் 7015 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இப்பணம் ஏறத்தாழ இலங்கை கொண்டிருந்த சர்வதேச ஒதுக்கத்துக்கு சமனாக இருந்தது.

மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதாரம் மசகு எண்ணை வளத்திலேயே உருவாக்கப்பட்டிருக்கின்றது. தொற்று நோய் காரணமாக போக்குவரத்து முடக்கப்பட்டு எரிபொருளுக்கான விலைகள் குறைந்தமை காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை மிகவும் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே இது மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதாரங்களை நலிவடையச் செய்யும்.இதன் காரணமாக இந்நாடுகளில் ஊழியர்களாக பணிபுரியும் இலங்கை இந்தியா, பங்களாதேசம் போன்ற நாடுகளின் தொழிலாளர்கள் திருப்பி அனுப்ப தொடங்கி விட்டார்கள். இது இலங்கை ஏற்கனவே சம்பாதித்துக் கொண்டிருந்த வெளிநாட்டு சம்பாத்தியத்தில் ஒரு பாரிய சரிவினை உருவாக்கி இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 இல் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இருந்து 1272 நபர்களும் கிழக்கு மாகாணத்தில் இருந்து 7975 நபர்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்கு சென்றுள்ளனர். கோவிட் 19 தொற்று நோயால் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வேலையிழக்கப் போகின்ற இலங்கையர்களில் வடக்கு மாகாணம் குறைந்த இழப்புக்களைக் கொண்டிருக்கும்.

இத்தொற்றினால் ஏனைய அபிவிருத்தி அடைந்த வெளிநாடுகளில் இருந்து இழப்புக்களை சந்தித்தவர்களில் வடக்கு கிழக்கு மக்கள் அதிகமாக உள்ளனர். இருப்பினும் அவர்களுக்கு சிறந்த வேலை இழப்பீட்டு கொடுப்பனவுகள் இந்நாடுகளினால் வழங்கப்படுகின்றன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலை இழந்தவர்களுக்கு அவ்வாறான இழப்பீட்டுத் தொகைகளை எதிர்பார்க்க முடியாது.

## 3. ஏற்றுமதி சம்பாத்தியத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி

இலங்கைக்கு அதிக அந்நிய செலவாணியை ஈட்டித் தரும் ஏற்றுமதிகளில் முதலிடத்தை வகிப்பது தைக்கப்பட்ட ஆடைகள் ஆகும். 2018 இல் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாயில் (ரூ1893443 மில்லியன்) 43.3 வீதமான வருமானம் தைக்கப்பட்ட ஆடைகளில் இருந்து பெறப்பட்டுள்ளன. இலங்கையின் எல்லா ஏற்றுமதிகளுக்கும் முதல் இடத்தை ஐக்கிய அமெரிக்காவும் (ரூபா 501 211 மில்லியன்) இரண்டாம் இடத்தை ஐக்கிய இராட்சியமும் (ரூபா 159 192 மில்லியன்) பெற்று இருந்தன. இரண்டாவது ஏற்றுமதி வருமானம் தேயிலை (ரூபா 231 150 மில்லியன்) ஆகும். இந்த ஏற்றுமதிகளினால் இலங்கை குறைந்தளவான அந்நிய செலவாணியை உழைக்கின்றது என்பது ஒருபுறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க, இவ் ஏற்றுமதிகள் அத்தியாவசிய ஏற்றுமதிகள் அல்ல. தொடர்ச்சியான ஊரடங்குகள் காரணமாக நீண்டகாலம் ஆடைத் தொழிற்சாலைகள் இயங்காமை யினால் உற்பத்தி நடைபெறாது என்பதற்கு அப்பால் கொரோனாவினால் உலகில் முதல் நிலையில் பாதிப்புக்கும் அழிவுக்கும் உட்பட்டிருக்கும் அமெரிக்காவின் சந்தையானது இலங்கையின் கைகளை நழுவிச் சென்றுள்ளது. இது இலங்கையின் பொருளாதாரத்தில் அதிக சுமையினை ஏற்படுத்தவுள்ளது. சீனாவுடனான இலங்கையின் வர்த்தக உறவானது சீனாவுக்கே சாதாகமாக உள்ளது. சீனா இலங்கையிடம் இருந்து இறக்குமதி செய்யும் பெறுமதியை விட 5 மடங்கு அதிகமான பெறுமதியான பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்கின்றது. மேலும் இலங்கையின் ஏற்றுமதிக்கான இரண்டாவது சந்தையாக அமையும் ஐக்கிய இராட்சியமும் கொரோனாவினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவும் இலங்கையின் ஏற்றுமதியை பாதிப்படைய செய்கின்றது.

இவ்வாறு கொரோனா காரணமாக மேலே குறிப்பிட்ட மூன்று பிரதான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இலங்கைப் பொருளாதாரத்தை கடுமையாக பாதிப்படையச் செய்துள்ளது. இவற்றை விட பல தொழில் முயற்சிகள் இந்த தொற்று நோய் காரணமாக மூடப்பட்டுள்ளன. இத் துறைகளில் வேலைவாய்ப்பு வெளியீடு குறைந்துள்ளது. பல அன்றாட கூலித்தொழில் செய்து வருமானம் உழைப்பவர்கள் பாதிப்படைந் துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்-04

## இலங்கையில் அரச செலவீடும் கொரோனாவின் பொருளாதார மீட்சியும்

Sunday, Virakesari, 2020 May 24, 2020

இலங்கையில் உலகளாவிய ரீதியில் உருவாகியிருக்கின்ற கோவிட் 19 கொரோனா வைரஸின் தொற்றானது இலங்கைப் பொருளாதாரத்தில் பல பொருளாதார பின்ன டைவுகளை உருவாக்கியுள்ளது என்பது வெளிப் படை யானது. இந்த பொருளாதார பின்னடைவுகளாக பின்வரு வனவற்றைக் குறிப்பிடலாம்.

1. உல்லாசப்பயணத் துறை முற்றாக செயலிழந்து உள்ளது.
2. பிரதான ஏற்றுமதி வருமானங்கள் வீழ்ச்சியடைந் துள்ளன.
3. வெளிநாட்டு வேலைவாய்பில் இருந்து கிடைக்கின்ற வருமானங்களின் வீழ்ச்சி
4. உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையினால் பலர் வேலையிழந்துள்ளனர்.
5. உற்பத்தி வீழ்ச்சியும் மற்றும் வேலையின்மை அதிகரிப்பும்
6. அரசின் வருவாய்களின் வீழ்ச்சி மற்றும் பணநிரம்பல் பணவீக்கம் அதிகரிப்பு.
7. வறுமை பட்டினி அதிகரிப்பு.

போன்ற பிரச்சினைகள் உருவாகியுள்ளன அல்லது உருவாகவுள்ளன. இலங்கைப் பொருளாதாரத்தில் இப் பிரச்சினைகள் பல ஏற்கனவே காட்சிக்கு வந்து விட்டன. அரசாங்கம் சிலவற்றை நாடாளுமன்றத் தேர்தலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலதந்திரங்களைக் கையாண்டு அடக்கி வைத்திருக்கின்றது. அவற்றின் தாக்கங்கள் தேர்தலுக்கு பின்னர் மிகவேகமாக வெளிவருகின்றது. இப்பொருளாதார பின்னடைவில் இருந்து இலங்கையை மீட்டெடுப்பது எப்படி என்ற வினா எங்கள் எல்லோராலும் எழுப்பப்படுகின்றது. இந்த மீட்சிக்கு அரசின் வகிபாகம் அளப்பரியதாகும்.

**அரசாங்க செலவீட்டை அதிகரித்தல்**

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு எழுதல் என்பது பல உலக நாடுகள் மற்றும் உலக பொருளாதார மந்தத்தின் மீள் எழுச்சியின் அனுபவத்தின் அடிப்படையில் அரசாங்கம் தனது செலவீடுகளை அதிகரித்தல் என்பது ஒரு சிறப்பான தந்திரோபாயமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. பொருளாதார நெருக்கடி என்பது அது தோன்றிய மூலங்களை விட ஒரு பீதியினால் உருவாகின்ற கிளுகிளுப்பினால் (Panic) அதிகம் உருவாகின்றது. பொருளாதாரத்தில் அரசின் உற்பத்தி செயற்பாடுகள் குறைவடைந்து தனியார் துறையின் பங்கு அதிகமாக இருக்கின்ற போது இவ்வாறான கொரோனோ போன்ற உலகளாவிய இயற்கை அனர்த்தங்கள் அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள் ஏற்படும் போது தனியார் துறை நாட்டில் உருவாகின்ற அசாதாரண சூழ்நிலையால் பீதியடைந்து தமது ஏற்கனவே இருக்கின்ற தொழில்களை மூடி விடுவதும் புதிய தொழில்களுக்கான முதலீடுகளை பிற்போடுவதும் நடைபெறகின்றது.

பொருளாதார மந்த காலத்தில் கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய இரண்டு பக்கத்திலும் ஒரு பின்னடைவு உருவாகின்றது. தனியார் துறை உற்பத்தியை கைவிடும் போது தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். நிறுவனங்களின் உற்பத்தி குறைந்து நாட்டின் நிரம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைகின்றது. மறுபுறத்தில் வேலையின்மை காரணமாக நாட்டின் அதிக அளவில் வாழும் தொழிலாளர்களின் வருமானம் குறைவதால் பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்து நாட்டின் மொத்த கேள்வி குறைவடை கின்றது. அரசு பொருளாதாரத்தில் மக்களின் கைகளில் வருமானம் கிடைக்கக் கூடியவாறு பல வழிகளில் தலையிட வேண்டிய அவசியம் உருவாகின்றது. ஒரு புறத்தில் மக்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமான நிவாரணங்களை மற்றும் பணஉதவிகளை வழங்கி மக்களை பொருட்கள் சேவைகள் மீது கேள்வியினை அதிகரிக்க தூண்டுதலும் மறுபுறத்தில் தொழில் நிறுவனங்களுக்கு அவர்கள் தொடர்ந்து உற்பத்தி நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கு பாரிய நிதியினை வழங்கி அல்லது அரசு நேரடியாக தொழில் முயற்சிகளில் பங்கு கொண்டு நாட்டின் நிரம்பலை தூண்டுதல் ஆகிய பிரதான இரண்டு பிரதான முனைகளில் அரசு பாரிய பங்காற்ற வேண்டும்.

## கெயின்ஸ்ஸின் தோற்றமும் உலகப்பொருளாதார மீட்சியும்

நவீன பொருளியலின் தந்தை என அழைக்கப் படுகின்ற கெயின்ஸ் என்ற பொருளியல் மேதை 1929-1933 காலப் பகுதியில் உருவான உலகப் பொருளாதார மந்தத்தை ஆழமாக ஆராய்ந்து அந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து உலக பொருளாதாரங்கள் மீண்டு எழுவதற்கான பரிகாரத்தை முன்மொழிந்தார். 1936 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு வட்டிவீதம் மற்றும் பணத்தின் பொதுக் கொள்கை (General theory of employment interest and money) என்ற அவருடைய பிரபல்யமான நூல் வெளி வந்தது. இந்த நூல் வெளிவருவதற்கு முன்னர் 1935 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி Keynes அவருடைய நண்பரான George Bernald Shaw க்கு ஓர் கடிதம் எழுதினார்.......

"I belief myself to be writing a book on economic theory which will largely revolution is- not, I suppose, out once but in the course of the next ten years- The way,the world thinks about economic problems"

கெயின்ஸ் எதிர்வு கூறியது 1936 ல் இருந்து அடுத்து 10 வருடங்களுக்கு பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக உலகம் தனது கோட்பாட்டை பின்பற்றும் என்றார். 1946 இல் அவர் இறந்து விட்டார். அவர் உயிருடன் இருந்த காலத்தை விட இறந்த பின்பே அவருடைய கருத்துக்கள் உலகெங்கும் பரவியது. ஆனால் உலகம் இன்றும் அவரின் சிந்தனையின் மையத்தில் இருந்து விலகிச் செல்லாமல் இருப்பதைக் காணலாம்.

2007 இல் அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி உருவான போது கெயின்ஸ்ஸின் பொருளாதார நெருக்கடி 2007 - 2009 மீட்சிக்கான வழியில் இருந்தே அமெரிக்க பொருளாதாரம் மீட்கப்பட்டது.

இன்று 2020 இல் கொரோனாவினால் உருவாக்கப் பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் மந்தத்தில் இருந்து உலகப் பொருளாதாரங்களை மீண்டு எழுப்புவதற்கு இவரின் கொள்கை அவசியமாக இருக்கின்றது. அமெரிக்க அரசு இரண்டு ரில்லியன் டொலரில் (2000 பில்லியன்) மீட்பு திட்டத்தை உருவாக்கி தலா ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 2000 டொலர்களை வழங்கி கேள்வியை தூண்டுகின்ற அதே நேரம் அமெரிக்க தொழில் நிறுவனங்கள் கொரோனாவுக்கு மத்தியிலும் தங்கள் தொழில்களை தொடர்வதற்கு முதல்கட்டமாக 500



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லியன்களை ஒதுக்கியுள்ளது. இந்த பொருளாதார மீட்சிக்கான அரச செலவு அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 10 சதவீதம் ஆகும். ஆனால் இலங்கை அரசு இதுவரை கொரோனாவின் மீட்சிக்காக செலவழித்த அரச செலவீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 00.5 சதவீதமாக 20 மடங்கு குறைவாக உள்ளது.

### முதலாளித்துவத்தின் அபாயம்

கெயின்ஸ் அடம்சிமித் காலத்தில் இருந்து பழம் பொருளியலாளர்களால் போற்றிப் புகழப்பட்ட முதலாளித் துவமும் அதைக் கொண்டு இயங்குகின்ற மறைகரமாகிய விலைப் பொறி முறையையும் உலகப் பொருளாதாரத்தை தவறாக வழிநடத்துகின்றது என்பதை மட்டும் எடுத்துக்காட்டவில்லை. அத்துடன் இவை தன்னகத்தே கொண்டிருக்கின்ற அனர்த்தகரமான பண்பு களையும் எடுத்துக் காட்டியுள்ளார். 1970களில் புதுப்பழம் பொருளிய லாளர்கள் தங்களுடைய புரட்சிகரமான அரச தலை யீட்டுக்கு எதிரான சந்தை முறையிலான முதலாளித்துவ கோட்பாட்டில் வெற்றி பெற்று உலக மயமாக்கம் ஊடாக முதலாளித்துவம் வியாபித்து வளர்ந்து வந்த போதும் இன்று சந்தைப் பொருளாதாரத்துக்கு தலைமை தாங்கு கின்ற அமெரிக்காவில் கொரோனா தொற்றின் அதி உச்சமான பரவலும் அதிக இறப்புக்களும் உலகுக்கு சொல்லுகின்ற மிக முக்கியமாக செய்தி என்னவென்றால் பழம் பொருளியலாளர்களால் போற்றிப் புகழப்பட்ட முதலாளித்துவமும் அதைக் கொண்டு இயங்குகின்ற மறைகரமாகிய விலைப் பொறி முறையும் உலகப் பொருளாதாரத்தை தவறாக வழிநடத்துகின்றது என்பது மட்டும் அல்ல. அத்துடன் இவை தன்னகத்தே அனர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமான பண்புகளையும் கொண்டிருக்கின்றன என்பது ஆகும். அமெரிக்காவில் கொரோனாவினால் ஏறத்தாழ 2 கோடி மக்கள் வேலையிழந்துள்ளனர். 40 வீதமான மக்கள் மாதம் 400 டொலருக்கு குறைவான வருமான த்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். உலகிலே பலவீனமான சிறிய பொருளாதாரங்கள் கூட கொரோனாவினால் மீண்டு எழுகின்ற போது உலகப்பொருளாதாரத்துக்கு தலைமை தாங்குகின்ற அமெரிக்காவினால் ஏன் இலகுவாக மீண்டு எழ முடியவில்லை என்ற வினா எழுகின்றது.

கெயின்சின் பார்வையில் முதலாளித்துவம் நோய் வாய்ப்புள்ள இயலுமையற்ற ஓர் பொறிமுறை அமைப்பு என நம்பினார். அது எந்த வேலையிலும் அகப் புற அனர்த்தங்களினால் உடைந்து போகலாம் என்பதை நம்பினார். உண்மையில் அவரது பிரதான இலக்கு யாதெனில் முதலாளித்துவத்தை பாதுகாப்பதற்கும் பலப் படுத்துவதற்குமான இம்முறைமைக்குள் இருக்கும் சட்டங் களையும் ஒழுங்கு விதிகளையும் திருத்தி அமைப்பதாக இருந்தது. உண்மையிலேயே கெயின்ஸ் ஓர் சோசலிச வாதியல்ல. அவர் தனக்கு முன்னர் பழம் பொருளிய லாளர்களின் சிந்தனையின் அடிப்படையில் கட்டிக்காக் கப்பட்ட முதலாளித்துவத்தை அரசாங்கத் தலையீட்டின் ஊடாக பாதுகாக்கவும் பலப்படுத்தவுமே முற்பட்டுள்ளார். அவரின் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமெரிக்க அரசு கொரோனாவினால் அடிபட்டு இருக்கின்ற பொருளா தாரத்தை கட்டியெழுப்பி முதலாளித்துவத்தை காப்பாற்று வதற்காக இப்பாரிய அரச செலவீட்டை செய்துள்ளது.

உலகிலே முதலாளித்துவத்துக்கு எதிரான சோசலியத்தின் வீழ்ச்சியானது முதலாளித்துவ பொருளா தாரங்களை கெயின்ஸ்ஸின் கோட்பாட்டில் இருந்து காலத்துக்கு காலம் விலகி பயணிக்க செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு விலகிக் கொண்டமையினால் அடி வாங்கிய வர்கள் மீண்டும் கெயின்ஸ்சுக்கு திரும்பி வந்துள்ளனர். கொரோனாவினால் உருவான கொருளாதார மந்தமும் கெயின்ஸை மீள அழைத்துள்ளது. இம்முறை உலகப் பொருளாதாரங்கள் இந்த மந்தத்தில் இருந்து தப்பி பிழைக்குமா? என்பது அப்பொருளாதாரங்களின் அரசியல் பொருளாதார சமூக காரணிகள் மற்றும் கொரேனாவின் எதிர்காலம் போன்றவற்றால் தீர்மானிக் கப்படும்.

### வட்டிவீத குறைப்பும் மற்றும் தனியார் முதலீட்டின் அதிகரிப்பும்

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசுகள் வட்டிவீதத்தைக் குறைக்கின்றன. இது தனியார் முதலீட்டை அதிகரித்து மொத்தக் கோள்வியை அதி கரித்து வெளியீடு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உண்மையில் ஒரு சாதாரண சூழ்நிலையில் குறைந்த வட்டிவீதம் அதிக முதலீட்டையும் அதிக வட்டி வீதம் குறைந்த முதலீட்டையும் பிரதிபலிப்பதாக இருக்கும். முதலீட்டை தூண்டுவதற்கு இலங்கை அரசாங்கம் வட்டி வீதத்தைக் குறைத்துள்ளது. ஆனால் பொருளாதாரம் ஆபத்து மற்றும் நிட்சயமற்ற தன்மை போன்றவற்றை அதிகமாக எதிர்நோக்குகின்ற போது வட்டி வீத குறைப்பு முதலீட்டை தூண்ட மாட்டாது.

வட்டிவீத மாற்றம் ஏன் முதலீட்டை தூண்ட வில்லை என்பதற்கு கெயின்ஸ் ஒரு நடைமுறை சார்ந்த விளக்கத்தைக் கொடுக்கின்றார். கெயின்ஸ் ஒரு நடைமுறைவாதி ஆவார். அவர் தனியார் துறையினரின் உளவியலை சரியாக எடைபோட்டுத்தான் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டை உருவாக்கினார். ஒரு தனியார் தனது பணப்பையில் இருந்து ஒரு ரூபாவை முதலிடுவதாக இருந்தாலும் தனது முதலீட்டுக்கான வருவாயில் அம்முதலுக்கான வட்டி வீதம் மட்டும் தீர்மானிப்பதில்லை என்பதில் உறுதியாக இருப்பான் என்பதை இவர் நம்பினார். வட்டி வீதம் முதலீட்டை தீர்மானிக்கின்ற ஒரு நம்பிக்கையான காரணி (Optimistic factor) மட்டும்தான். ஆனால் இது மட்டும் முதலீட்டை தீர்மானிப்பது அல்ல. ஒரு பகுத்தறிவான முதலீட்டாளன் தனது முதலீடு தொடர்பாக அவநம்பிக்கையான காரணிகளை (Pessimistic factors) அதுவும் ஒரு நிட்சயமற்ற தன்மை அல்லது ஆப்த்து இருக்கின்ற காலத்தில் மிகவும் அவதானமாக கவனத்தில் எடுத்து முதலீட்டு தீர்மானத்தை மேற் கொள்வான். இவ்வாறான காரணிகளை கெயின்ஸ் பொதுக்கொள்கையில் Animal Spirits எனக் குறிப் பிட்டுள்ளார். பொருளாதாரத்தின் இயல்பு நிலை மாற்ற மடைந்தால் முதலீட்டாளன் பீதியால் கிளுகிளுப்பு (Panic) அடைந்து உண்மையாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட அவநம்பிக்கையை விட தனது முதலீட்டு தீர்மானத்தால் அதிக அவநம்பிக்கையை மற்றவர்களுக்கும் பொருளா தாரத்தில் உருவாக்குகின்றான்.

கொரோனாவினால் ஏற்பட்ட பொருளாதார முடக்கம் மக்களால் அல்லது முயற்சியாளர்களால் உருவாக்கப்பட வில்லை. மாறாக அரசு நோய் பரம்பலை தடுக்க மேற் கொண்டது. ஆனால் எதிர்காலத்தில் அரசு முடக்கங்களை தளர்த்தி பொருளாதார நடவடிக்கை களுக்கு அனுமதித் தாலும் கொரோனாவுக்கு நிரந்தரமான மருந்து கண்டு பிடிக்கும் வரை புதிய தனியார் முதலீடுகளை எதிர்பார்க்க முடியாது. ஏற்கனவே நொந்து இருக்கின்ற தொழில் முயற்சிகளை கொரோனாவினால் ஏற்பட்ட முடக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து முயற்சியாளர்கள் மூடிவிடுவார்கள். கடந்த வாரம் ஊரடங்கு தளர்த்தப்பட்ட போது பல வர்த்தக ஸ்தாபனங்கள் வாரம் பூராக மூடப்பட்டு இருந்தமையை அவதானிக்க முடிந்தது. இவை இவ்வகையை சார்ந்தவை ஆகும் இந்நிலை ஏற்கனவே இருந்த நிலையை மென் மேலும் உறுதியற்றதாக மாற்றுகின்றது. வட்டி வீதம் சார்பாக நெகிழ்ச்சி குறைந்த முதலீட்டு நிலை முற்றாக நெகிழ்ச்சி அற்றதாக மாறுகின்றது. முதலீட்டை தீர் மானிப்பதில் வட்டி வீதத்தின் பங்கு பூச்சியமடைகின்றது. அதாவது வட்டி வீதம் குறைந்தாலும் அதிகரித்தாலும் முதலீட்டில் மாற்றம் இல்லாத நிலையை இது குறிக்கின்றது.

புதிதாக முதலீடுகள் செய்யப்படாமையும், ஏற்கனவே இருந்த தொழில்களும் மூடப்படுகின்றமையும் சேர்ந்து நாட்டின் தேசிய வெளியீட்டு மட்டம் மற்றும் வேலை யளவை குறைகின்றது. வர்த்தக சகடஓட்டம் ஒரு குறுகிய காலத்துக்கு அன்றி நீண்ட காலத்துக்கு பொருளாதாரத்தை மந்தநிலையில் வைத்திருக்கின்றது.

கொரோனாவில் உருவான பொருளாதார மந்தம் ஒரு இரு மாதங்கள் அன்றி பல வருடங்கள் நீடிக்கும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறான ஒரு நிலைக்கு அடிப்படைக் காரணம் பணச் சந்தையிலும் பொருட் சந்தையிலும் உருவாகும் நிச்சயமற்ற தன்மை (Uncertainty) ஆகும். நிச்சயமற்ற தன்மையானது முதலீட்டாளர்களை பணச்சந்தையில் உத்தேச நோக்கம் குறித்து திரவப்பொறிநிலையை உருவாக்குவது போன்று பொருட்சந்தையிலும் முதலீட்டில் நிச்சயமற்ற நிலையை உருவாக்கி தனியார் முதலீட்டை தடுக்கின்றது. இவ்வாறு நிச்சயமற்ற தன்மையால் தனியார் துறை வழியாக குறைவடைந்த கேள்வியை(I) ஈடுசெய்வதற்கு அரசாங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி முயற்சிகளில் தலையிட்டு வேலை வாய்ப் பையும் வெளியீட்டையும் அதிகரிப்பதற்காக அரசாங்க செலவீட்டை (G) அதிகரிக்க வேண்டும்.

அரசாங்க செலவீடானது எவ்வாறு நிதியீட்டம் செய்யப்படலாம் என்பதை அடுத்த அத்தியாயம் விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 05

## இலங்கையில் கொரோனாவும் பணத்தாள்களின் வெளியீடும்.

Sunday Virakesari, May 31, 2020

இலங்கையில் கொரோனாவினால் உருவான பொருளாதார பின்னடைவில் இருந்து மீள்வதற்காக ஆட்சியாளர்கள் கடந்த வாரம் பண நிரம்பலை அதிகரிப்பதாக தெரிவித்துள்ளனர். பணநிரம்பல் அதிகரிப்பு என்பது மத்திய வங்கி தனது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரிக்கும் போது அதிகரித்த சொத்துக்கு சமமாக பணத்தினை அச்சடித்து பழக்கத்துக்கு விடுவது என்று அல்லாமல் அவ்வாறான சொத்து க்கள் அதிகரிக்காத போதும் காகித பணத் தாள்களை அச்சடித்து புழக்கத்துக்கு விடுதலை குறித்து நிற்கிறது. பாராளுமன்றத்தின் அனுமதி இன்றி இந்த வகை நாணயத் தாள்களின் வெளியீடு செய்யப்படலாமா? என்ற கேள்விக்கு அப்பால், கடந்த வாரம் இதை நியாயப் படுத்துவதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் லக்ஸ்மன்

“இந்த செயல் முறையானது நெருக்கடியான காலங்களில் இலங்கை போன்ற சிறிய பொருளாதாரங் களில் மட்டும் அல்ல, அமெரிக்கா போன்ற பெரிய பொருளாதாரங் களிலும் நடைபெறுகின்றன”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிட்டு இருந்தார். இந்த கருத்து தொடர்பாக நாம் ஆழமாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

நன்கு வினைத்திறமையான ஊழல் அற்ற மிகப் பெரிய வலுவான பொருளாதாரங்களில் இவ்வாறான பணதாள்களின் வெளியீடு மூலம் கெயின்ஸ் குறிப்பிட்ட அரசாங்க செலவீட்டின் வழி பேரினப்பொருளாதார இலக்குகளை அடைய முடிந்தது. சீனாவின் ஒரு கட்சி யிலான நீண்ட கால அரசாங்கத்தில் சீனப் பொருளாதாரம் எழுச்சியடைந்த காலகட்டத்தில் மத்திய வங்கியின் சொத்துக்கு மேலாக பணநிரம்பலை அச்சிட்டு வெளியிட் டுள்ளது. ஆனால் அச்சிடப்பட்ட பணம் பொருளாதாரத்தின் சாதாரண சூழ்நிலையில் அரசின் பாரிய முதலீட்டு திட்டங்களான பாரிய கடுகதி வீதிகள், நவீன வேகமான புகையிதர வீதிகள், கைத்தொழில் வலயங்கள், விமான நிலையங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றுக்காக செலவு செய்யப்பட்ட அரசின் குறைநிலைப் பாதீட்டை நிரப்புவதற்காக பயன் படுத்தப்பட்டன. இப்பணம் அரசியல் வாதிகளின் வாக்கு வங்கியை நிரப்புவதற்கு இலவசக் கல்வி, இலவச மருத்துவம், இலவச உணவு, உணவு மானியங்கள், இலவச கறுப்பு வெள்ளை தொலைக்காட்சி பெட்டிகள் போன்ற மக்களை வீட்டில் அமர்த்தி மகிழ் வூட்டி வேலை செய்யத் தூண்டாத சமூகநலச் செல வீடுகளில் செலவீடு செய்யப்படவில்லை. மாறாக, திட்ட மிட்டு பொருளாதாரத்தின் உற்பத்தி இயல்தகவை அதிகரிக்க கூடிய முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டன. இவ்வாறான முதலீடுகள் அரசுக்கு குறுகிய காலத்தில் வருவாயை பெற்றுக்கொடுத்தது. மத்திய வங்கியின் சொத்துக்களுக்கு மேலாக அச்சடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட பணத்துக்கு மேலாக அரசுக்கு குறுகிய காலத்தில் வருமானம் கிடைத்தது. எனவே சொத்துக் களுக்கு மேலாக உருவாக்கிய பணநிரம்பல் பலமடங்கு சொத்துக்களை அரசின் மத்திய வங்கிக்கு பெற்றுக் கொடுத்து பண நிரம்பலினால் உருவான பணவீக்கத்தை தடுத்தது. சீனாவின் சராசரி பணவீக்கம் 3-4 வீதமாக நீண்டகாலமாக இருக்கின்றது. அதாவது நாட்டு மக்களுக்கு கனியை கொடுக்கும் மரத்தை நாட்டு வதற்காக பணநிரம்பலை சொத்துக்கு மேலாக அதிகரிக் கலாம். ஆனால் மரத்தை நாட்டாமலே அதன் கனியை ருசி பார்ப்பதற்கு மக்களை மகிழ்வூட்டும் அரசின் செலவுகளுக்கு பண நிரம்பலை சொத்துக்கு மேலாக அதிகரிக்க கூடாது. இங்கு மரம் நாட்டுவது முக்கியம் அல்ல, நாட்டப்பட்ட மரக் கன்றுகளான அரசின் பல தொழில் முயற்சிகளை விருட்சமாக்கி காய்கள் காய்த்து கனியாக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் பிரித்தானியர் உருவாக்கி வளர்த்துக் கையளித்து கொடுத்த பெருந் தோட்டங்கள் உட்பட்ட அரச தொழில் முயற்சிகளாயினும் சரி அல்லது சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கை உரு வாக்கிய அரச தொழில் முயற்சிகளாகினும் சரி காய்த்து கனிகளை கொடுக்கவில்லை என்பதற்கு அப்பால் அவை தொடர்ந்து கருகிக்கொண்டு இருக்கின்றன. இதை சரிப்படுத்த அரசு வருடா வருடம் பல மில்லியன்களை வெளிநாடுகளில் கடன் வாங்கி செலவு செய்கின்றது.

இலங்கையின் தலை நகரத்தில் உள்ள கோட்டை புகையித நிலையத்தின் தரையும் கூரையும் பிரித்தானியர் இட்ட அதே நிலையில் உள்ளமையும், ஒரே ஒரு விமான சேவையான சிறீலங்கன் விமான சேவை நிறுவனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்களை அரசு பெறுப்பேற்பதாக அறிவித்து இதை விற்க முற்பட்ட போதும் உலகத்தில் எந்த ஒரு நிறுவனங்களும் இதை வாங்கதயாராக இல்லாமையும் அவதானிக்கின்ற போது ஏனைய அரச தொழில் முயற்சி களின் சீத்துவத்தை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

இலங்கையில் பணநிரம்பலின் இக்கால அதிகரிப்பு என்பது அரசு தேர்தலை இலக்காக கொண்டு மக்களை மகிழ்சியாக வைத்திருப்பதற்கான செலவீடாக உள்ளது. இவ்வாறாக ஒரு சூழ்நிலையில் அரச செலவீட்டின் வழி பணநிரம்பலை செய்து பொருளாதாரத்தை கொரோனாவின் தாக்கத்தில் இருந்து மீட்டு எடுக்க முடியுமா? என்பது கேள்விக் குறியே. கொரோனாவினால் உருவான பொரு ளாதார மந்தத்தில் இருந்து பொருளாதார மீட்சிக்கான அரச செலவிடும் பணத் தாள்களின் வெளியீடும் ஏனைய நாடுகளில் ஏற்கனவே நல்ல நிலையில் இயங்கிய நிறுவனங்களை மீட்பதற்கும் மற்றும் அரசின் நலன்புரி செலவுகள் இன்றி தங்களின் வருமானங்களில் உயர்ந்த நிலையில் வாழ்ந்த மக்களுக்கு நிவாரணம் கொடுத்து அவர்களின் நுகர்வை துாண்டுவதாகவும் இருக்க, இலங்கையில் நாணயத் தாள்களின் வெளியீடு ஏற்கனவே நட்டத்தில் இயங்குகின்ற தொழில் முயற்சிகளுக்கு நிவாரணம் கொடுப்பதாகவும் மற்றும் ஏற்கனவே பாரிய நல்ன்புரி செலவுகளினால் அரசின் மீண்டு எழும் செலவுக்கு சுமையாக இருக்கின்ற நலன்புரிச் செலவீடு களுக்கு தேர்தலை நோக்காக கொண்டு மென்மேலும் உருவாகின்ற செலவுகளை ஈடு செய்வதற்கு வெளியிடப் படுகின்ற பண தாள்களின் வெளியீடாக இருக்கின்றது. இந்நிலைமையில் பண நிரம்பலின் வெளியீடு பண வீக்கத்துக்கு இட்டு சென்று பொருளாதாரத்தை மென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஸ்திரமற்ற தன்மைக்கு இட்டுச் செல்லக் கூடிய சாத்தியங்களே அதிகம் உள்ளன.

பணநிரம்பலின் அதிகரிப்பு வட்டி வீத வீழ்ச்சி ஊடாக மொத்தக் கேள்வியை அதிகரிப்பதற்கு நிச்சய மற்ற தன்மை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலாபம் இல்லாத போது தனியார் துறை முதலீட்டை குறைப்ப தால் அரசாங்கம் செலவீட்டை அதிகரிக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசாங்க செலவீடு பல பொருளாதாரங்களில் அதிகரிக்கப்பட்டது. இலங்கையில் அரச செலவீட்டின் அதிகரிப்பு என்பது விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது என்பதற்கு அம்பாந்தோட்டை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் சிறந்த உதாரணங்கள் ஆகும். இக் கோட்பாட்டை கொள்கை அடிப்படையில் அனுபவ ரீதியாக நோக்குகின்ற போது உலகத்தில் அரச செலவீடு எவ்வகையாக இருந்தது என்பதும் எல்லா வகையான அரச செலவீடும் நாட்டின் உற்பத்தி வேலைவாய்ப்பு அதிகரிக்க உதவியுள்ளதா? என்பதும் முக்கியமானதாகும்.

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, சுவீடன் அண்மையில் சிங்கப்பூர், தைவான், தென்- கொரியா மிக அண்மையில் சீனா போன்றவற்றில் அரசாங்க செலவீடு ஆரம்பத்தில் பாரிய அரச தொழில் முயற்சிகளில் மேற்கொள்ளப்பட்டு அவை இலாபம் உழைக்கும் தொழில்களாக இன்றும் தொழிற்படுகின்றன. பல குறைவிருத்தி பொருளாதாரங்களில் (இலங்கை இந்தியா) அவ்வாறான செலவீடுகள் செய்யப்பட்ட போதும் அத்தொழில்கள் நட்டத்தில் இயங்கியதால் பின்னர் தனியார் மயப்படுத்தப்பட்டன. சில இன்றும் நட்டத்தில் இயங்குகின்றன. இந்நிறுவனங்களை தனியார் வாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு தயாராக இல்லை. இதற்கான பிரதான காரணங்களாக தாராள ஜனநாயக பல்லின கட்சி ஆட்சியில் அடிக்கடி மாற்றப்படும் அரசாங்கங்கள் தங்கள் அரசியல் தொண்டர்களுக்கு வேலை வாய்ப்புககளை வழங்குவதற்க்கும், உயர் பதவிகளை கொடுப்பதற்கும், உல்லா சமாக உழைப்பு இன்றி மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் பொதுத்துறையை பயன்படுத்தியமை ஆகும். அரசாங்க செலவீடுகள் வினைத் திறமையற்று பாரிய வரவு செலவுத்திட்ட பற்றாக் குறையை வேண்டிநின்றன. அபிவிருத்தியில் பின்னோக்கி இருக்கின்ற நாடுகளில் அரச செலவீடுகளில் காணப்படும் இன்னுமொரு அம்சம் அவை அதிகளவில் முதலீட்டு செலவீனங்களாக அன்றி சமூக நலச் செலவீடுகளான நுகர்வு செலவைக் கொண்டிருந்தமை ஆகும். தாராள ஜனநாயகம் கொண்ட நாடுகள் இவ்வாறு அருமையான வளங்களை சமூகநலச் செலவீடுகளில் செலவு செய்து ஆட்சியாளர்களையும் மக்களையும் மகிழ்வூட்டி குறைவிருத்தி நிலையை அடைய, குறைந்த ஜனநாயகம் கொண்ட நாடுகள் சில சிறந்த அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் அரசாங்க செலவை அதிக மூலதன செலவில் செலவு செய்து மூலதன இருப்பை அதிகரித்து வளர்ச்சியை பெருக்கி குறுகிய காலத்தில் உயர்ந்த அபிவிருத்தியை அடைந்தன.

அரசாங்கத்தின் செலவை குறைக்கும்படி IMF அரசாங்கத்துக்கு நிபந்தனையை விதிக்கின்றது. உண்மையில் சிறந்த அரசியல் தலைமைத்துவத்துடன் மென்மையான சர்வதிகாரத்தின் கீழ் வோசிங்டன் உடன்பாட்டை ஏற்காது அரசதுறையை பலப்படுத்தி அரச நிறுவனங்களை இலாபம் ஈட்டித்தரும் நிறுவனங்களாக மாற்றிய நாடுகளே பொருளாதார வளர்ச்சி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியில் முன்னணி வகிக்கின்றன. இதனை பணக்கார நாடுகளின் கைபொம்மையாக இருக்கின்ற உலக வங்கியின் பொருளாதார நிபுணரான Joseph Stiglitz ஒப்புக்கொண்டுள்ளார்.

## தொகுப்புரை

எனவே இன்று இருக்கின்ற உலக பொருளாதார ஒழுங்கான பொதுத்துறையை புறக்கணித்து தனியார் துறையை மையப்படுத்திய தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலும் இவற்றை வலியுறுத்துகின்ற உலக நிறுவனங்களும் உலகத்தில் எல்லா குறைவிருத்தி நாடுகளுக்கும் பொருளாதார சுபீட்சத்தை கொடுக்க வில்லை என்பது ஒருபுறம் இருக்க, இவை இன்னொரு உலக பொருளாதார மந்தந்தை 1929 போன்று உருவாக்குமா? என்பதை 1996-97, 2008-09 உலக நிதிநெருக்கடிகள் குறித்து நிற்கின்றன. 2020 இல் கொரோனாவினை உருவான பொருளாதார நெருக்கடி யானது உணர்துவது யாதெனில் உறுதியான இலாபம் உழைக்கும் பொதுத்துறை தொழில் முயற்சிகளைக் கொண்ட நாடுகளே இந்த உலக பொருளாதார ஒழுங்கு முறையில் வெற்றி பெற்று இருக்கின்றன. அமெரிக்கா இன்று கொரோனாவினால் கட்டுப்படுத்த முடியாமல் தினறிக் கொண்டிருப்பதற்கு பிரதான காரணம் சுகாதார மருத்துவ துறையில் முற்று முழுக்க அரசை புறக்கணித்து தனியார் துறையில் தங்கியிருந்தமை ஆகும். கொரோனாவின் தாக்கத்தில் இருந்து வெற்றி பெற்ற இந்நாடுகளின் உறுதியான பொதுத்துறைக்கு பின்னால் இருந்த இன்னெரு இரகசியம் யாதெனில் அவை பகுதியாகவோ அல்லது முழுமையாகவே ஜனநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி பொருளாதார சுதந்திரத்தை தாராளமயமாக்கியமை ஆகும். இருப்பினும் சில விதி விலக்குகளும் உண்டு என்பதை மறுக்க முடியாது. இலங்கையில் சமூகநலச் செலவீடுகளில் ஊறிப்போன பொதுத்துறை பணியாளர்களும் நட்டத்தில் இயங்குகின்ற பொதுத்துறை தொழில்முயற்சிகளும், ஜனநாயகத்தை காட்டி ஊழல் செய்து இனவாத அரசியல் செய்யும் அரசியல்வாதிகளினாலும் கொரோனாவினால் உருவான உள்நாட்டு மற்றும் சர்வதேச பொருளாதார மந்தத்தால் சிக்குண்டு இருக்கின்ற இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல் என்பது கல்லில் நார் உரிப்பதற்கு நிகரானது. தற்போதைய இராணுவ பின்னணியைக் கொண்ட தலைமைத்துவம் இனம், மொழி, மதம் போன்றவற்றை உதட்டால் அல்ல உள்ளத்தால் கடந்து சிறுபான்மை மக்களையும் அரவணைத்து நாம் இலங்கையர் என்ற தேசியத்தை உருவாக்கி மென்மை யான சர்வதிகார ஆட்சிக்கு நகர்ந்தால் இலங்கைப் பொருளாதாரத்தை மீட்க முடியும். ஆனால் இவ்வாறான ஒரு நகர்வுக்கு எதிர்கட்சிகளில் இருந்து வரும் எதிர்பை விட முதலில் ஜனாதிபதியின் குடும்பத்துக்குள் எதிர்ப்பு வரும். ஜனநாயகம் என்ற மாயை மானைக் காட்டியே அரசியல் வாதிகளும் சர்வதேசமும் இலங்கையில் பிழைப்பு நடத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்-06

## COVID 19 மற்றும் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை

SundayVirakesari, May 31, 2020

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வந்து இலங்கைக்கு அதிக அந்நிய செலவாணியை ஈட்டித்தந்த ஒரு துறையாக உல்லாசப் பயணத் துறை விளங்குகின்றது. 2009 இல் 447890 ஆக இருந்த உல்லாசப் பயணிகளின் வருகை 2018 இல் 2333796 ஆக ஏறத்தாழ 6 மடங்கால் அதிகரித்துள்ளது. இது ஒரு பாரிய வளர்ச்சி ஆகும். இக்காலப்பகுதியில் உல்லாசப் பயணத்தால் இலங்கை அடைந்த அந்நிய செலவாணி வருவாயும் மிகவும் வேகமாக அதிகரித்துள்ளது. 2009 இல் 350 மில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக பெற்ற இலங்கை 2018 இல் 4381 மில்லியன் அமெரிக்க டொலரை பெற்று 12 மடங்கு அதிகரிப்பை பெற்றது. உலகில் இவ் அதீத உல்லாசப் பயண வருவாய் அதிகரிப்பினை வேறு எந்த நாடுகளும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்அதிகரிப்புக்கு பின்வருவன காரணங்களாக இருந்துள்ளன.

1. உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தமையும் இலங்கையில் அமைதி நிலவியமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இலங்கையில் உல்லாசப்பயணிகளை கவரக் கூடிய இயற்கையான உல்லாசப்பயண மையங்களும் மற்றும் மிதமான காலநிலையும்.
3. உல்லாசப் பயணத் துறையை முன்னேற்றுவதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கை களும் சலுகைகளும்
4. புலம்பெயர்ந்த தமிழர்களின் தாயகம் நோக்கிய வருகை களின் அதிகரிப்பு.
5. இலங்கையின் பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வாழ்க்கைச் செலவு குறைப்பும்.
6. அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்ப்பட்ட வீழ்ச்சி. உல்லாசப்பயணிகளை இலங்கை நோக்கி இழுத்தது.
7. சட்டம், ஒழுங்கு மற்றும் நல்லாட்சியில் ஏற்பட்ட முன்னேற்றம் உல்லாசப் பயணிகளுக்கு பாதுகாப்பை வழங்கியது.
8. இல்ங்கையின் சீனாவுடனான அரசியல் பொருளாதார உறவில் அதிகளவான சீன உல்லாசப் பயணிகளை கவர்ந்தமை
9. இலங்கை மக்களின் வெளிநாட்வர்களுக்கு எதிரான வெறுப்புணர்வு வெளிப்படுத்தல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி.
10. உலகலாவிய அரசியல் பொருளாதார மற்றும் சமூக பிணைப்புக்களின் அதிகரித்த தன்மை.


போன்றன குறிப்பிடக்கூடிய காரணங்கள் ஆகும்.

2019 ஏப்பிரலில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து வீழ்சியடைந்த இந்த துறை சில மாதங்களின் பின்னர் மீண்டும் உயிர்பெற்று வளர்ந்தது. இந்த தாக்குதலால் உருவான பின்னடைவு ஒரு சாதாரண நிகழ்வாகவே நோக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா தொற்று காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட முதல்தர துறையாக உல்லாசப்பயணத் துறை விளங்குகின்றது. இலங்கை வரலாற்றில் 2020 ஏப்ரல் மாதமே பூச்சிய உல்லாசப்பயணிகள் வருகை தந்த ஆண்டாக காணப்படுகின்றது. மிகவும் கடுமையான முயற்சிகளின் விளைவாக வளர்த்து எடுக்கப்பட்ட இத் துறை பாரிய வீழ்ச்சியை அடைந்துள்ளது.




மூலம் :- http://bizenglish.adaderana.lk/covid-19-impact-sri-lanka-tourist-arrivals-down-70-8-in-march-2020/

இவ்வீழ்சியானது இலங்கைப் பொருளாதாரத்துக்கு பின்வரும் வழிகளில் தாக்கத்தை உருவாக்கியுள்ளது.

1. **அந்நிய செலவாணி சம்பாத்தியத்தில் உருவான வீழ்ச்சி.**

இலங்கைக்கு மொத்த வெளிநாட்டு ஏற்றுமதி மூலம் (பொருட்கள்) 2018 இல் 11 பில்லியன் அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொலர் வருமானம் கிடைத்துள்ளது. இதே ஆண்டில் இறக்குமதி ஏறத்தாழ 22.5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இறக்குமதிக்கு செலவு செய்யப்பட்ட மிகுதி 11.5 b USA $ களும் உல்லாசப்பயணம் (3.5 b USA $) மற்றும் வெளிநாட்டு பணஅனுப்புதல்களினால் (7 b USA $) கிடைத்த வருவாய்களில் இருந்தே ஈடு செய்யப்பட்டது. ஆனால் தற்போது கொரோனா தொற்று நோய் காரணமாக இந்த இரண்டு மூலங்களில் இருந்து கிடைத்த வருவாய்கள் தடைப்பட்டுள்ளன. இது இலங்கைப் பொருளாதாரத்தை பாரியநிதி நெருக்கடிக்குள் தள்ளி இருக்கின்றது. ஏற்கனவே 2.8 b USA $ ஆகஇருந்த சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கின் பற்றாக் குறையானது மென் மேலும் அதிகரிக்க கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இந்த இழப்பை ஈடு செய்வதாக இருந்தால் நாட்டின் சாதாரண சூழ்நிலையில் குறைந்தது 2-3 ஆண்டுகள் தேவை என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

## 2. வேலைவாய்ப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி

இலங்கையில் அரசின் தகவலின்படி உல்லாசப் பயணத் துறையால் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏறத்தாழ நான்கு இலட்சம் மக்கள் வேலைவாய்ப்பு பெற்று இருந்தனர்.(சில தரவு மூலங்களின் படி இது 5 இலட்சம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது) இத் துறையில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியினால் இந்த நான்கு இலட்சம் இலங்கையர்கள் கடந்த இரண்டு மாதங்களில் முற்றாக வேலை இழந்துள்ளனர். ஆங்காங்கு சில விடுதிகள் இயங்கிய போதும் இவைகளின் களநடவடிக்கைகள் மிகச் சிறியன ஆகும். எனவே வேலை இழந்த இந்த மக்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டிய தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துள்ளது. எவ்வளவு காலத்துக்கு நிதி உதவி வழங்கி இவர்களை அரசு காப்பாற்ற முடியும்? என்பது ஒரு கேள்விக் குறியாகவே உள்ளது. வேலை இழந்த வர்களுக்கு எந்த ஒரு சிறப்பான மீட்சி திட்டமும் இது வரை இலங்கை அரசால் சுற்றுலா துறைக்கு ஆரம்பிக்கப் படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நிறுவனங் களுக்கு (விடுதிகளுக்கு) நிதி வசதிகளை செய்து கொடுத்து அவைகளை தொடர்ந்து இயங்க ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு அவைகள் இயங்கினாலும் குறும் காலத்தில் பயணிகளை எதிர்பார்க்க முடியாது. இது இலங்கை பொருளாதாரத் துக்கு ஒரு மாபெரும் சவாலாகவே உள்ளது. இருப்பினும் உயர்தர உல்லாசப் பயணிகளை வரவழைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு தொழிற்பட ஆரம்பித்துள்ளது. கலாச்சார சுற்றுலாவை முன்னேற்ற அரசு சில நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. பெறுபேறுகளை பொறுத்து இருந்துதான் பார்க்க வோண்டும்.

## 3. அரசின் நிதி நிலைமைகளில் உருவாகும் தாக்கம்

இலங்கையின் வெளிநாட்டுப் பொருளாதாரத்துக்கு முண்டு கொடுத்துக் கொண்டு இருந்த பிரதான ஒரு துறையாக உல்லாசப் பயணத்துறை விளங்கியுள்ளது. இதில் ஏற்பட்ட வீழ்ச்சி சென்மதி நிலுவையில் நடை முறைக் கணக்கு நிலுவையில் பாரிய பற்றாக்குறையை உருவாக்கி இறுதியாக மூலதனக் கணக்கு ஊடாக சென்மதி நிலுவையின் பற்றாக்குறை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஏற்பட உள்ள பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு உலக நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக நிதி நிறுவனங்களிடம் கடன் பெற வேண்டி இருக்கும். ஜனாதிபதி கடந்த நாட்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியப் பிரதமருடன் நடைபெற்ற தொலை பேசி உரையாடலில் ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் களை கடனாக கேட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த தொகை உல்லாசப் பயணத்துறை வீழ்சியின் இழப்பில் மூன்றில் ஒரு பங்கு தொகை மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வெளிநாட்டு பண அனுப்பு தலிலும் ஒரு வீழ்ச்சி உருவாகி இருக்கின்றது. வெளி நாட்டு துறையுடன் தொடர்புடைய உருவாகவுள்ள எல்லா இழப்புக்களையும் ஈடுசெய்ய இலங்கை அரசாங்கத்தால் முடியாது உள்ள போது நிதிப் பற்றாக்குறை நிதி நெருக்கடி ஒன்றுக்கு இட்டுச் செல்லலாம்.

## 4. இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

இலங்கைக்குள் ஒப்பீட்டு ரீதியில் ஏற்றுமதிகள், உல்லாசப் பயணிகளின் வருகை, வெளிநாட்டு பண அனுப்புதல்களின் அதிகரிப்பு, வெளிநாட்டு உதவிகளின் அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்றன அதிகரிக்கும் போது அந்நிய செலவாணிகளின் உட் பாய்ச்சல்கள் அதிகரித்து ரூபாவின் புறப்பெறுமதி அதிகரிக்கின்றது. மாறாக இவை குறையும் போது நாண யத்தின் பெறுமதி வீழ்சியடைகின்றது. ஒரு டொலருக்கு வழங்கப் படும் இலங்கை ரூபாவின் அளவு அதிகரித்தல் என்பது ரூபாவின் பெறுமதி தேய்வு ஆகும். மாறாக ரூபாவின் அளவு குறைதல் என்பது பெறுமதி அதிகரித்தல் ஆகும். இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக முடக்கப் பட்ட பொருளாதாரத்தில் உல்லாசப் பயணிகளின் வீழ்ச்சி ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 07

# இலங்கையில் கொரோனாவும்ரூபாவின் பெறுமதியும்.

Sunday Virakesari,June 07,2020

இலங்கை ரூபாவின் கொள்வனவு பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக ஏப்ரல் 5-10 காலத்தில் வீழ்ச்சியடைந்து ஏறத்தாழ ரூ 194 க்கு சென்றது. இக்காலப்பகுதியில் விற்பனைப் பெறுமதி ரூ 199 ஐ எட்டியிருந்தது. அந்த நேரத்தில் பல பொருளியலாளர்கள் இது மேலும் வீழ்ச்சியடைந்து ரூ 210-215 அடுத்து வரும் மாதங்களில் எட்டிப்பிடிக்கும் என எதிர்வு கூறினார்கள். பலர் முண்டியடித்துக் கொண்டு கறுப்பு சந்தையில் வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்தனர். ஆனால் எல்லோருடைய எதிர்பார்ப்புக்கு மாறாக அடுத்து வந்த நாட்களில் ரூபாவின் பெறுமதி வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ஏறத்தாழ ரூ 10 ஆல் பெறுமதி ஏற்றம் கண்டு ரூபா 189 க்கு சென்றது.. ஏன்? எப்படி? இந்த மாற்றத்தின் பின்னால் உள்ள பொருளாதார மர்மங்கள் என்ன? பார்ப்போம்.

இலங்கைக்குள் உல்லாசப் பயணிகளின் வருகை, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகை, இலங்கை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதிகள் மூலமான வருவாய், இலங்கைக்கு வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அனுப்பி வைக்கும் பணம், இலங்கை அரசின் மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆவணங்கள், உண்டியல்கள், பிணைப் பத்திரங்கள் போன்றவற்றை வெளிநாட்டவர்கள் கொள்வனவு செய்தல், இலங்கைக்கு கிடைக்கும் அந்நிய உதவிகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பங்குச் சந்தையில் பங்குகளை வெளி நாட்டவர்கள் கொள்வனவு செய்தல் என்பன இலங்கை ரூபாவுக்கான கேள்வியை உருவாக்குகின்ற அதேநேரம் இதே காரணிகள் இலங்கையில் வெளிநாட்டு நாணயங் களுக்கான நிரம்பலை உருவாக்குகின்றன.

மறுபுறத்தில் இலங்கையர்கள் உல்லாசப் பயணியாக வெளிநாடுகளுக்கு செல்லல், இலங்கை இறக்குமதி செய்த பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பனவுகள், இலங்கையில் இருந்து வெளி நர்டுகளுக்கு செல்லும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள், இலங்கையில் உள்ள தொழில்புரியும் வெளிநாட்டவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பும் பணம். இலங்கையர்கள் வெளிநாடுகளில் உள்ள பங்குகள் ஆவணங்களில் முதலீடு செய்தல் என்பன வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வியை உருவாக்குகின்ற அதே நேரம் இதே காரணிகள் இலங்கை ரூபாவுக்கான நிரம்பலை உருவாக்குகின்றன.

இலகுபடுத்தி விளங்கிக் கொள்வதற்காக இலங்கையின் வெளிநாடு அமெரிக்கா மட்டும் எனக் கருதிக்கொள்வோம். குறித்த ஒரு திகதியில் 100 மில்லியன் டொலர்கள் மேற்குறிப்பிட்ட மூலங்கள் ஊடாக இலங்கைக்கு அமெரிக்காவில் இருந்து உள் வந்தன எனவும் 100 மில்லியன் டொலர்கள் மேற்குறிப்பிட்டவை ஊடாக இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு வெளிச் சென்றன எனக் கருதுவோமானால் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப்பெறுமதி இந்த பரிமாற்றங்கள் நிகழ்ந்த திகதியில் குறித்த திகதிக்கு முன்னர் உள்ள திகதியில் உள்ளவாறு மாற்றம் இல்லாமல் இருக்கும். USA$1 = Rs 187 என முன்னைய திகதியில் இருந்தால் குறித்த திகதியிலும் $1 = Rs 187 என இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது அமெரிக்காவுக்கு சென்றது 100 USA$ ஆகவும் பெற்றது 75 USA$ எனவும் கருதிக் கொள்வோமாயின், மிகுதி 25 USA$ ஐ இலங்கை தனது சர்வதேச ஒதுக்கத்தில் இருந்து எடுத்து நிரப்ப வேண்டும். அரசிடம் (மத்திய வங்கியிடம்) பற்றாக் குறையை நிபர்த்தி செய்ய சர்வதேச ஒதுக்கம் இல்லையாயின் $1 = Rs 187 என்ற வீதம் உயர்ந்து (ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மறுபுறத்தில் அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்ச்சி) $1 = Rs 190 க்கு செல்லலாம்.


மாறாக அமெரிக்காவுக்கு சென்றது USA$ 75 ஆகவும் பெற்றது USA$125 எனவும் கருதிக் கொள்வோமாயின், நிலுவையாக உள்ள USA$ 50 ஐ அமெரிக்கா தனது சர்வதேச ஒதுக்கத்தில் இருந்து எடுத்து நிரப்ப வேண்டும். சர்வதேச ஒதுக்கம் இல்லையாயின் டொலரின் பெறுமதியை தேய்வடைய விட வேண்டும். இந்த நிலைமையில் $1 = Rs 180 என வீழ்ச்சியடையும்(ரூபாவின் பெறுமதி உயர்ச்சி மறுபுறத்தில் அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சி ஆகும்).

இலங்கை 1977 இல் திறந்த பொருளாதாரத்துக்கு மாறிய முதல் 2017 வரை கடந்த நாற்பது ஆண்டுகளில் இலங்கை ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக 2200 வீதத்துக்கு மேலாக வீழ்ச்சியடைந் துள்ளது. 1977 இல் ரூ 7.21 காணப்பட்ட ரூபாவின் பெறுமதி இன்று ரூ 189 ஆக காணப்படுகின்றது. இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் அந்நிய செலவாணி இலங்கைக்கு வரும் அந்நிய செலவாணியை விட அதிகமாக இருந்துள்ளது. இது குறித்து நிற்பது யாதெனில் திறந்த பொருளாதாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையினால் இலங்கை பொருளாதார ரீதியாக இழப்புக்களை சந்தித்துள்ளது என்பதாகும். இந்த பெறுமதி இழப்பு திறந்த பொருளாதாரத்தின் ஆரம்பத்தில் இருந்தாலும் காலப்போக்கில் பெறுமதி ஏற்றம் அடையும் என திறந்த பொருளாதார சித்தாந்தம் கூறுகின்றது. ஆனால் இலங்கையின் அனுபவத்தில் 40 வருடம் கழிந்தும் அது நடைபெறவில்லை.




மூலம் :- http://bizenglish.adaderana.lk/sri-lanka-rupee-fell-by-over-2201-against-us-dollar-in-a-41-year-history-from-1977-2018/


கொரோனா தொற்றின் ஆரம்பத்தில் குறிப்பாக ஏப்பிரல் 2020 இல் ரூபாவின் பெறுமதி சடுதியாக $1 = Rs 187இல் இருந்து$1 = Rs 199 க்கு வீழ்ச்சியடைந்து பின்னர் $1 = Rs 189 என2020மே இல்அதிகரித்துள்ளது. கொரோனாவின் ஆரம்பத்தில் ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடைந்து பின்னர் அதிகரித்தமைக்கான பிரதான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **இலங்கை மற்றும் அமெரிக்காவில் கொரோனாவின் தாக்கம்.**

கொரோனாவின் ஆரம்பத்தில் இலங்கைக்கு வெளி நாட்டு உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தன. இது ரூபாவின் வெளிநாட்டு பெறுமதி வீழ்ச்சியடைய காரணமானது. ஆரம்பத்தில் அமெரிக்க பொருளாதாரம் கொரோனா வால் பாதிப்படையவில்லை. இது அமெரிக்க டொலரை இலங்கை ரூபாவுக்கு எதிராக வலுவாக வைத்திருந்தது. பின்னர் கொரோனாவின் தொற்று அமெரிக்காவில் அதிகரித்தமைால் அமெரிக்கப் மற்றும் ஐரோப்பிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து டொலரின் மற்றும் யுரோவின் பெறுமதி இலங்கை ரூபாவுக்கு எதிராக வீழ்சியடைந்தது. இதன் மறு கருத்து இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றம் கொண்டது.




மூலம்:fxexchangerate.com

உல்லாசப்பயணத் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியால் 2020 ஏப்பிரலில் உச்சத்துக்கு சென்ற ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி பின்னர் கொரோனாவின் அலையின் தாக்கம் இலங்கையில் குறைந்து அமெரிக்காவில் அதிகரித்த மையால் உலக சந்தையில் அமெரிக்க டொலருக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமையால் ரூபாவின் பெறுமதி அதிகரித்து செல்கின்றது. அமெரிக்காவுடன் ஒப்பிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கொரோனா தொற்றால் உலக அந்நிய செல வாணி சந்தையில் இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்ப்பட்ட பாதிப்பு குறைவாக உள்ளமையை இந்த மாற்றம் பிரதிபலிக்கின்றது.

## 2. இலங்கைக்கு கிடைத்த அந்நிய உதவிகள்.

கொரோனாவை தொற்று காலத்தில் இலங்கைக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மற்றும் புதிய அந்நிய உதவிகள் குறிப்பாக சீனா மற்றும் இந்தியாவில் இருந்து கிடைக்கப்பெற்றன. இது ரூபாவின் பெறுமதியை அதி கரித்துள்ளது. கொரோனா தொற்று காரணமாக வெளி நாடுகளில் இருந்து இறக்குமதிகள் குறைக்கப் பட்டமை, உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை வீழ்ச்சி மற்றும் இலங்கையின் சில நிதிச் சொத்துக்களை வெளி நாட்டவர்கள் கொள்வனவு செய்துள்ளனர். இவ்வாறான இலங்கைக்கு சார்பான அதே நேரம் வெளிநாடுகளுக்கு பாதகமான வெளிநாட்டு நாணய அசைவுகள் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியை அதிகரிக்கச் செய்துள்ளது.

## 3. நாணயத் தாள்களின் வெளியீடு.

இலங்கையின் மத்திய வங்கியானது 2020 மாசியில் இருந்து பல்வேறு வழிகளில் ரூபாவினை இலங்கைப் பொருளாதாரத்துக்குள் அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சொத்துக்களுக்கு மேலாக உட் செலுத்திக் கொண்டு இருக்கின்றது. இதில் முக்கியமான ஒன்று மத்திய வங்கி அரச பிணைப்பத்திரங்களை அரசிடம் இருந்து பெற்றுக்கொண்டு அவைகளுக்கு சமனான பணத்தாள்களை வழங்கியமை ஆகும். கொரோனாவின் ஆரம்பத்தில் 2020 பங்குனி 12 இல் இலங்கை மத்திய வங்கி கொண்டிருந்த அரச பிணைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரங்களின் அளவு ரூபா 78.1 பில்லியனாக இருந்தது. ஆனால் இது 2020 சித்திரை 24 இல் இது ரூபா 291.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. இக்காலப் பகுதியில் ரூபா 217 பில்லியன் பணம் பொருளாதாரத்துக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. அரசின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் சுயாதீனம் இன்றி இருக்கும் இலங்கை மத்திய வங்கியின் இந்த நடவடிக்கையானது குறும் காலத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதியை அதிகரித்துள்ளது. சந்தையில் ரூபாவின் கேள்விக்கு மேலாக அரசின் இந்த பண நிரம்பலின் உட்செலுத்துகையானது பொருளாதாரத்தில் இருந்து எதிர்காலத்தில் (அரச பிணைப் பத்திரங்களை அரசு வருமானத்தை பெற்று மீட்டு எடுக்க முடியாத சந்தர்ப்பத்தில்) மீள எடுக்கப்படாத போது பொருளாதாரத்தில் பல விளைவுகளை உருவாக்கும். 2018 ஏப்பிரல் மாதத்திலும் இதுபோன்ற அணுகு முறையை கையாண்டு ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிராக ரூபா 163 இல் இருந்து 153 ஆக பெறுமதி ஏற்றம் செய்யப்பட்டது. இந்த அணுகு முறையை பொருளாதாரத்தில் பலமான நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனா போன்ற நாடுகளும் கடைப் பிடித்துள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவ்வாறு உள்ளீர்கப்பட்ட பண நிரம்பலின் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்ப்பத்தியின் சதவீதமாக 10-15 சதவீதமாக இருக்கின்ற போது இலங்கையில் இவ்வாறு உட் புகுத்தப்பட்ட பணநிரம்பல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 0.2 ஆக காணப்பட்டுள்ளது. எனவே இச்சிறிய தொகையை அரசு இலகுவாக மீட்டு பொருளாதாரத்தை ஸ்த்திரப்படுத்த முடியும் என முதலீட்டாளர்களும் மக்களும் நம்புவதால் ரூபாவின் பெறுமதி ஏற்றம் கண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 08

# COVID-19 உம் பொருளாதார மீட்சிக்கான நாணயத் தாள்களின் வெளியீடும்

SundayVirakesari,June 14,2020

இலங்கையில் அண்மைய நாட்களில் மட்டுமல்ல கொரோனா தொடங்கிய மாதம் தொட்டு இன்று வரை இலங்கை மக்களிடையே அதிகம் பேசப்படுகின்ற ஒரு முக்கியமான பொருளாதார பேசுபொருளாக பணத்தாள்கள் அச்சடித்து வெளியிடுதல் காணப்படுகின்றது. இந்த பணநிரம்பல் அதிகரிப்பு என்பது சாதாரணமாக பொருளாதாரத்தில் மத்திய வங்கியினால் முன்னெடுத்துச் செல்லப்படும் பண நிரம்பல் அதிகரிப்பை குறித்து நிற்கவில்லை. அதாவது நாட்டின் உற்பத்தி அதிகரித்து மத்திய வங்கி தன்னிடம் உள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சொத்துக்கள் அதிகரிக்கும் போது பணநிரம்பல் அதிகரிப்பதற்காக சொத்துக்களின் பெறுமதிக்கு சமனாக பணம் அதிகரிப்பதை இது குறித்து நிற்கவில்லை. மாறாக இது குறித்து நிற்பது யாதெனில் இலங்கையின் பணத்தின் வெளியீடானது மத்திய வங்கியின் உள்நாட்டு வெளிநாட்டுச் சொத்துக்களுக்கு மேலாக நாணயத்தாள்களை பொருளாதாரத்துக்குள் உட்செலுத்தும் செயற்பாட்டை இது குறித்து நிற்கின்றது. இது பொருளாதார மந்த காலங்களில் பல பொருளாதாரங்களில் நடைபெறுகின்றது. இந்த அரசின் நடவடிக்கையை தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு முன்னர் பணம் பொருளாதாரத்தில் ஆற்றுகின்ற தொழிற் பாடுகளை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணம் எதை செய்யும்?**

ஔவையார் பணம் பற்றி குறிப்பிடும் போது

*"இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்று எடுத்த தாயும் வேண்டாள் கல்லான் ஆயினும் கைப்பொருள் உள்ளோனை எல்லோரும் முன் சென்று எதிர் கொள்வர்"*

எனக் குறிப்பிடுகிறார். அந்தளவுக்கு பணம் ஒரு தனி மனிதனின் வாழ்வில் முக்கியமானது. இதே போன்றுதான் பணம் ஒரு பொருளாதாரத்திலும் அதி முக்கியமானது.

1936 இல் கெயின்சின் பொதுக்கொள்கை என்ற நூல் வெளிவருவதற்கு முன்னர் பொருளாதாரத்தில் பணம் ஒரு விடயம் அல்ல (Money does not matter) என்றும் பணம் பொருளாதாரத்தில் கொடுக்கல் வாங்கல்களை இலகு படுத்தவும், கணக்கீட்டு அலகாகவும், பெறுமானத் திரட்டாகவும், பிற்போடப்பட்ட நியமங்களின் கொடுப்பன வாகவும் தொழிற்படுவதாக பழம்பொருளியலாளர்கள் வலியுறுத்தினார்கள். இது பணத்தின் நிலையியல் தொழிற்பாடுகள் ஆகும். (Static functions of Money) பொருளாதார நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக மட்டுமே பணம் பயன்படும் எனவும், இது இயந்திர பசை(Grease) போன்றது எனவும் குறிப்பிட்டனர். வாகனம் இயந்திர பசை இல்லாவிட்டாலும் அசையும். ஆனால் குறுகிய காலத்தில் பிரச்சினைகள் உருவாகி வாகனத்தின் சிலபகுதிகள் தொழிற்படாமல் அழிந்து வாகனத்தை முற்றாக செயலிழக்க செய்து விடும். ஆனால் இயந்திர பசையை தேவையான இடங்களுக்கு உட்செலுத்தி வாகனத்தை ஓட்டினால் அது மிகவும் மிருதுவாக நீண்ட காலத்துக்கு பிரசினைகள் இன்றி ஓடும். இதே போன்றுதான் பணம் பொருளாதாரத்தில் இல்லாவிட்டாலும் பொருளாதாரம் இயங்கும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை பொருளாதாரத்தில் இடும் போது பொருளாதார நடவடிக்கைகள் இலகுவாக்கப்படுகின்றன என விளக்கப் பட்டது.

பொருளியல் சிந்தனை வரலாற்றில் கெயின்ஸ் தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பன் போன்று இருக்கிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் யாரை தூக்கி வெளியில் வைத்துவிட்டும் தமிழை சுவைக்கலாம். ஆனால் கம்பனை தூக்கி வெளியில் போட்டுவிட்டு தமிழை சுவைக்க முடியாது என பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவது போன்று பொருளியலில் கெயின்ஸை அகற்றினால் பொருளியல் இல்லாமல் போய்விடும். இவருடைய புரட்சி பொதுப் பொருளியலில் மட்டுமன்றி பணப்பொருளியலிலும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. பணம் தொடர்பாக இவர் கூறிய கருத்து யாதெனில் பணத்தை மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு அப்பால் நாட்டின் மெய் உற்பத்தியை அதாவது மெய்ச் செல்வத்தை அதிகரிப்பதற்கு பயன்படுத்தலாம் என்ப தாகும். (Money does matter) பணம் இயந்திர பசை போன்று பொருளாதாரத்தில் தொழிற்படுவதற்கு அப்பால் இயந்திரத்திரத்தின் இயக்கத்துக்கு பயன்படுத்தும் எரி பொருள் போன்று தொழிற்பட்டு நாட்டின் பொருளாதார வளர்சியை குறும் காலத்தில் உருவாக்கும் என நிறுவினார். அதாவது பணத்தின் அளவை அதிகரிப்பதன் ஊடாக நாட்டின் மெய் உற்பத்தியை (செல்வத்தை) பெருக்கலாம் என்பது இவரின் வாதமாக இருந்தது. 1936 க்கு முன்னர் பணம் தொடர்பான கருத்து பொருளா தாரத்தில் பணநிரம்பலை அதிகரித்தால் அது பண வீக்கத்தை அதிகரித்து பணதேசிய வருமானத்தை மட்டுமே அதிகரிக்கும். இது பணமாயை ஆகும். உண்மை யானது அல்ல என கூறப்பட்டது. பணம் பொருளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தில் நிலையியல் தொழிற்பாடுகளுடன் (Static functions) இயங்கியல் தொழிற்பாடுகளையும் (Dynamic functions) ஆற்றுகின்றது என்பது கெயின்சினுடைய வாதம் ஆகும்.

**பணத்தை பொருத்தமான அளவில் பயன்படுத்துதல்**

கடதாசியில் அச்சிட்டு வெளியிடப்படும் பணம் நாட்டின் மெய் உற்பத்தியை எப்படி அதிகரிக்கும்? அப்படி ஆயின் எல்லா நாடுகளும் பணத்தாள்களை அச்சிட்டு அதிகரித்து நாட்டின் உண்மை பெறுமதியான செல்வத்தைப் பெருக்கலாம் என்பது இலகுவானது என நீங்கள் நினைக் கலாம். நாட்டின் செல்வத்தின் பெருக்கத்தில் ஊழிய அளவு, ஊழியத்தின் உற்பத்தி திறன், மூலதன திரட்சி, மூலதனத்தின் உற்பத்திதிறன், தொழில்நுட்ப முன்னேற்றம் என்பன அதிக வகிபாகத்தை கொண்டிருக்கும் போது கடதாசியில் வெளியிடப்படும் பணம் எப்படி நாட்டின் மெய்ச் செல்வத்தை பெருக்க உதவும் என்பது புரியாத புதிராக உங்களுக்கு தோன்றலாம். ஆனால் பணத்துக்கு அவ்வாறான வகிபாகம் குறும் காலத்தில் உள்ளது என்பது நன்கு நிறுவப்பட்ட ஒன்றாகும். மில்ரன் பிறீட்மனுக்கு இந்த உண்மையை கண்டுபிடித்தமைக் காகவே நோபல் பரிசு வழங்கப்பட்டது.

உண்மையில் பணம் இயந்திரத்தில் வைத்து பூட்டப்படும் கம்பிச்சுருள் (spring) போன்றது. இந்த கம்பிச் சுருளின் நீளம் அது வேண்டப்படும் அளவை விட ஈய்ந்து நீண்டு போனால் பயனற்றது ஆகிவிடும். அதே போன்று அது வேண்டப்படும் அளவை விட ஒடுங்கி குறுகிப் போனாலும் பயனற்றதாகி விடும். அது பொருத் தமான அளவில் இருந்தால்தான் இயந்திரத்தை இயங்கச் செய்யும். இதே போன்று தான் பணமும் பொருளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தில் தொழிற்படுகின்றது. பணம் பொருளா தாரத்தில் வேண்டப்படும் அளவை விட குறைந்து இருந்தாலும் பொருளாதாரத்துக்கு பாதகமானது. அதே போன்று வேண்டப்படும் அளவை விட அதிகரித்தாலும் பொருளா தாரத்துக்கு பாதகமானது. சரியான அளவில் பேணப்பட வேண்டும். தேவைப்படும் அளவை விட பண அளவு குறைந்தால் வட்டி வீதம் அதிகரிக்கும். வட்டி வீதம் அதிகரித்தால் தனியார் முதலீடுகள் குறைவடையும். முதலீடு குறைந்தால் உற்பத்தி வேலையளவு என்பன வீழ்சியடையும். இது பொருளாதார மந்த நிலையாகும். பொருளாதாரம் ஒன்று மந்த நிலையில் இருக்கின்ற போது பண நிரம்பலை அதிகரித்து வட்டி வீதத்தை குறைத்து முதலீட்டை அதிகரித்து வேலைவாய்ப்பு வெளியீட்டை அதிகரிக்க வோண்டும். ஆனால் முதலீட்டா ளர்கள் பொருளாதாரத்தில் முற்றாக நம்பிக்கை இழக் கின்ற போது பணநிரம்பலை அதிகரித்து வட்டிவீதத்தை ஆகக் கீழ் நிலைக்கு கொண்டு வந்து பூச்சியமாக் கினாலும் கூட நாட்டின் முதலீடு குறிப்பாக தனியார் முதலீடு அதிகரிக்க மாட்டாது. இந்நிலையில் பணத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை உருவாகின்றது.

கொரோனாவினால் எதிர்காலம் எப்படி இருக்கும் என தீர்மானம் எடுக்க முடியாத ஆபத்து நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கும் போது பணநிரம்பலை அதிகரித்து வட்டி வீதம் வீழ்ச்சியடைந்தாலும் முதலீடு தூண்டப்பட மாட்டாது. இந்த விளக்கமானது சாதாரண பொருளாதாரங் களுக்குரியவை ஆகும். அமெரிக்கா சீனா ஐரோப்பிய ஒன்றியம் போன்ற உலகப்பொருளாததாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் நாணய நிரம்பலுக்கு பொருந்தாது. வலுவான நாடுகளின் பணநிரம்பலின் தாக்கமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச நாணய அமைப்பு முறை ஊடாகவே நோக்கப் பட வேண்டும்.

பொருளாதாரத்தில் வேண்டப்படுகின்ற அளவுக்கு மேலாக பணநிரம்பலை அதிகரிக்கும் போது அது வட்டி வீத குறைப்பின் மத்தியிலும் முதலீட்டை தூண்டாத போது உற்பத்தி வேலையளவு குறைந்து பண வீக்கத் துக்கு இட்டுச் செல்கின்றது. சரியான அளவில் பண நிரம்பலை பேணுதல் வேண்டும். 1929-1933 உலக பெருமந்த காலத்தில் அமெரிக்காவின் பணநிரம்பல் 38 வீதம் வீழ்ச்சியடைந்தமையை எடுத்துக் கூறி உலக பொருளாதார பெரு மந்தத்துக்கு காரணம் உலக நாடுகளின் பண நிரம்பலில் உருவான வீழ்ச்சி என மில்ரன் பிறீட்மன் வாதிடுகிறார். ஆனால் மறுபுறத்தில் பல குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார பின்னடை வுக்கு குறிப்பாக பணவீக்கத்துக்கு பண நிரம்பலில் உருவான அதிகரிப்புத்தான் காரணம் என தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

**இலங்கையின் நிலைமை**

இலங்கையின் மத்திய வங்கியானது 2020 மாசியில் இருந்து பல்வேறு வழிகளில் ரூபாவினை இலங்கைப் பொருளாதாரத்துக்குள் அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சொத்துக்களுக்கு மேலாக உட் செலுத்திக் கொண்டு இருக்கின்றது. இதில் முக்கியமான ஒன்று மத்திய வங்கி அரச பிணைப் பத்திரங்களை அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டு அவைகளுக்கு சமனான பணத் தாள்களை வழங்கியமை ஆகும். கொரோனாவின் ஆரம்பத்தில் 2020 பங்குனி 12 இல் இலங்கை மத்திய வங்கி கொண்டிருந்த அரச பிணைப் பத்திரங்களின் அளவு ரூபா 78.1 பில்லியனாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இது 2020 சித்திரை 24 இல் இது ரூபா 291.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. இக்காலப் பகுதியில் ரூபா 217 பில்லியன் (ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்) பணம் பொருளாதாரத்துக்குள் உள்ளீர்க்கப் பட்டுள்ளது. இந்த செயற்பாடு சாதாரண நிலையில் மத்திய வங்கி பெற்ற அரச பிணைப்பத்திரங்களை வணிக வங்கிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். ஆனால் திரவத்தன்மையை பேணுவதற்காக இம்முறை அரச பிணைப்பத்திரங்களின் முழுத்தொகையும் மத்திய வங்கிக்கு அப்பால் செல்ல வில்லை. இலங்கை அரசின் பிணைப்பத்திரங்களை பிறர் கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்டுகின்றமையும் பிறிதொரு காரணமாக இருக்கின்றது.

சொத்துக்களுக்கு மேலாக பணத்தாள்களை அரச பிணைப் பத்திரங்களை பெற்றுக் கொண்டு அரசுக்கு கொடுக்கின்ற அணுகு முறையை பொருளாதாரத்தில் பலமான நாடுகளான அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா மற்றும் சீனா போன்ற நாடுகளும் கடைப்பிடித்துள்ளன. கொரோனா தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட பொருளா தாரத்தை மீட்பதற்காக பணத்தாள்களின் வெளியீட்டின் ஊடாக அரச செலவீடு ஈடுசெய்யப்பட்டது. ஆனால் எதிர் வரும் காலங்களில் அரசு பல்வேறு வருமான மூலங்களை அதிகரித்து இந்த செலவீடுகளுக்கான வருமானத்தை பெற்று இந்த பிணைப்பத்திரங்களை மீட்டு எடுக்கும். அவ்வாறு மீட்டு எடுக்கும் போது அச்சிடப்பட்ட பணத் தாள்கள் பொருளாதாரத்தில் பாதிப்பை உருவாக்க மாட்டாது. இந்த அரசுகளுக்கு அவ்வாறு மீட்டு இடுப்ப தற்கான நிதி மற்றும் முகாமைத்துவ இயல்தகவு உள்ளதா என்பதை காலந்தான் பதில் சொல்லும்.

அரசுக்கு பொருளாதார மந்த காலத்தில் குறிப்பாக உலகலாவிய மந்த காலத்தில் அரச பிணைப் பத்திரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை பொதுவான நடைமுறைகள் ஊடாக மத்திய வங்கி முகவராக தொழிற்பட்டு சந்தையில் விற்க முடியாது. பணம் தேவைப்படும் போது அரசு தனது பிணைப் பத்திரங்களை பணம் செலுத்தி மீள பெற்றுக் கொள்ளும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் மத்திய வங்கிக்கு வழங்கி பணத்தை பெற்றுக் கொள்கின்றது. மத்திய வங்கியும் பிணைப் பத்திரங்களுக்கு நிகரான பணத் தாள்களை அச்சிட்டு அரசுக்கு வழங்குகின்றது. கொரோனா தொற்றால் உருவான பொருளாதார முடக் கத்தில் இருந்து மீளுகின்ற போது அரசு பல்வேறு வழிகளில் வருமானங்களைப் பெற்று மத்திய வங்கிக்கு மீள பணம் செலுத்தி தனது பிணைப்பத்திரங்களை மீட்டு எடுக்கும். அவ்வாறு மீட்டு எடுக்கும் பட்சத்தில் பணத் தாள்களை அச்சடிப்பதால் பொருளாதாரத்தில் பணவீக்கம் உருவாக வாய்ப்பு இருக்காது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவ்வாறு உள்ளீர்க்கப்பட்ட பணத் தாள்களின் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10-15 சதவீதமாக இருக்கின்ற போது இலங்கையில் இவ்வாறு அச்சிட்டு உட்புகுத்தப் பட்ட பணத் தாள்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் சதவீதமாக 0.2 ஆக இருப்பதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. .

இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலாநிதி வீரசிங்கவின் கருத்துப்படி இந்த அச்சடிக்கப் பட்ட பணத்தாள்களின் வெளியீட்டை நாணயக் கொள்கை ஊடாக கட்டுப்படுத்துவோம் எனக் குறிப்பிட்டதன் பொருள் அரசு அவற்றை பணம் செலுத்தி மீட்கின்ற போது இந்த செயற்பாடு சாதாரண நாணயக்கொள்கை தொழிற்பாடாக மாறுகின்றது என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா காலத்தில் அரசின் இந்த தொழிற்பாடு பொருளாதாரத்தில் பாதகமான தாக்கம் எதையும் உரு வாக்கவில்லை என்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இரண்டு பருநிலைப்பொருளாதார குறிகாட்டிகளை ஆதாரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

**முதலாவது** பொருளாதாரத்தில் மத்திய வங்கியின் சொத்துக்களுக்கு மேலாக பணத்தாள்களின் உள்ளீர்ப்பு பணவீக்கத்தை உருவாக்கவில்லை (பணவீக்கம் 4-6 வீதத்துக்கு இடையில் உள்ளது).

**இரண்டாவது** ரூபாவின் புறப் பெறுமதி வீழ்ச்சி அடையவில்லை. மாறாக இந்த செயற்பாடு ரூபாவின் புறப் பெறுமதியை ஏற்றம் அடைய செய்துள்ளது. (கொள்வனவு பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக 195 இருந்து 187க்கு சென்றது) இவ்விரு குறிகாட்டிகளும் பொருளாதார முகாமைத்துவம் சரியாக இருக்கின்றது என்பதை மறை முகமாக உணர்த்தியுள்ளார்.

கோட்பாட்டு ரீதியாக நாம் மேலே விபரித்தது போன்று பணம் குறும் காலத்தில் பொருளாதாரத்தின் மீது நேரான தாக்கத்தைக் கொண்டுள்ளது. ஆனால் நீண்ட காலத்தில் எதிரான தாக்கத்தையே கொண்டிருக்கின்றது. அரசின் இந்த செயற்பாடு குறும் காலத்தில் பொருளா தாரத்தை பலப்படுத்துவதாகவே அமையும் என்பதற்கு மாற்று கருத்து கிடையாது. ஆனால் நீண்ட காலத்தில் எப்படி இருக்கும் என்பதை நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் மக்கள் உணர்வார்கள்.

குறைந்த பணவீக்கம் தொடர்பாக பல விடயங் களை ஆராய வேண்டியுள்ளது.

முதலாவது, அரசு தேர்தலுக்காக பல்வேறு சலுகைகள் ஊடாக விலை உயர்வை தடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தக் கேள்வி தொற்றுநோய் காலத்தில் குறை வடைந்ததன் காரணமாக விலை உயர்வு கட்டுப்படுத்தப் படுகின்றது. நாடாளுமன்றத் தோர்தலுக்கு பின்னர் பண வீக்கத்தின் உண்மை நிலையை மக்கள் உணருவார்கள்.

இரண்டாவது, இலங்கையின் பணவீக்கம் தொடர்பான தரவில் பல குறைபாடுகள் உள்ளன. 2005 க்கு முன்னர் சராசரியாக 12 வீதமாக இருந்த வருடாந்த பணவீக்கம் 2012 பின்னர் சராசரி 6 வீதத்துக்கு கீழ் சென்று விட்டது. அவ்வாறு ஆயின் 2005 க்கு முன்னர் 1000 ரூபாவுக்கு வாங்கிய பொருளை 2020 இல் 1060 ரூபாவுக்கு கீழ் கொடுத்து வாங்கலாம். ஆனால் கள நிலைமை அவ்வாறு அல்ல. 2000 ரூபாவுக்கு மேல் கொடுத்து வாங்க வேண்டி யுள்ளது. இலங்கை மக்கள் அன்றாடம் நுகர்கின்ற அரிசியின் விலையே இக்காலப்பகுதியில் அதிகரித்து இருக்க பணவீக்க புள்ளிவிபரம் குறைந்ததாக கூறு கின்றன. வருடா வருடம் இலங்கையின் பணவீக்க கணிப்பீட்டில் (விலைச்சுட்டெண்) உள்ள குறைபாடுகள் எவை என பொருளியல் பாடத்தில் கேள்விகள் கேட்கப் படுகின்றன. ஆனால் குறைபாடுகள் இல்லாத சுட்டெண் இதுவரை கணிக்கப்படவில்லை.

**மூன்றாவது,** பருநிலைப் பொருளாதார இலக்குகள் ஒன்று மற்றொன்றுக்காக பதிலீடு செய்யக் கூடியவை. பண வீக்கத்துக்கும் வெளியீட்டுக்கும் (வேலையின் மைக்கும்) இடையில் பதிலீடு உள்ளது. ஒரு நாடு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை கொண்டிருந்தால் (அதிகரித்த வெளியீடு அல்லது குறைந்த வேலை யின்மை) அது உயர்ந்த பணவீக்கத்தை கொண்டிருக்கும். எந்த ஒரு பொருளாதாரம் நீண்ட காலத்துக்கு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை குறைந்த பணவீக்கத்துடன் அடைகிறதோ அந்த நாடு பொருளாதாரத்தை சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமை செய்கின்றது எனலாம். குறைந்த பணவீக்கம் நாணயப்பெறுமதி ஏற்றத்துக்கு இட்டு செல்லும். சீனாவில் உயர்ந்த வளர்ச்சியும் (சராசிரி 8 வீதத்துக்கு மேல்) குறைந்த பணவீக்கமும் (சாரசரி 4 வீதத்துக்கு கீழ்) இருக்கின்றது. யுவானின் நாணய பெறுமதி உயர்ந் துள்ளது (2004 ஒரு அமெரிக்க டொலர் 8.25 யுவான். இது 2008 இல் 6.2 ஆகும்) இலங்கையும் யுத்தம் முடிவடைந்த பின்னர் பணவீக்கத்தை குறைத்தது. அதே நேரம் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்துள்ளது. இது சிறந்த பொருளாதார முகாமை என பறைசாற்றப்பட்டது. ஆனால் இலங்கை ரூபாவின் நாணயப் பெறுமதியின் பாரிய இறக்கங்கள் இந்த புள்ளிவிபரங்கள் மீது ஐயம் கொள்ள செய்கின்றது.

இலங்கைப் பொருளாதாரம் மிகச் சிறிய ஒரு பொருளாதாரம் ஆகும். உலகில் உள்ள சிறிய முதலீட்டாளர்களே பொருளாதாரத்துக்கு முண்டு கொடுத்து இதை காப்பாற்றலாம். ரூபாவின் பெறுமதி அதிகரித்த காலப்பகுதியில் மொறிசியஸ்சில் இருந்து 30-40 பெரிய முதலைகள் தனிவிமானத்தில் இலங்கைக்கு வந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கையை பலர் தங்கள் கறுப்பு பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றப் பயன்படுத்துகிறார்கள் என செய்திகள் தெரிவிக்கின்ற நிலையில் இவர்களின் வருகை அமைந்துள்ளது.

சட்ட ஆட்சி நலிவடைந்து இராணுவ மேலா திக்கத்தை உள்வாங்கி ஜனாதிபதியின் ஆணைக் குழுக்களில் ஓடுகின்ற இலங்கையின் அரசியல் சூழலில் பொருளாதார முகாமைத்துவத்திலும் சட்டத்துக்கு புறம் பான சில நடவடிக்கைகள் ஊடாக பொருளாதாரம் குறும் காலத்தில் ஸ்திரபடுத்தப்படுகின்றது என சந்தேகிக்க வாய்ப்பு உள்ளது. இலங்கைப் பொருளாதாரத்தை நாணய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள்களைக் கொண்டு குறும்காலத்தில் ஸ்திரப்படுத்தி னாலும் நீண்ட காலத்தில் இலங்கைப் பொருளாதாத்துக்கு பல ஆபத்துக்கள் காத்திருக்கின்றன. ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெறுவதற்கு குதிரை சிறப்பாக இருக்க வேண்டும் என்பது மட்டும் அல்ல. குதிரையை ஓட்டுபவனும் சிறப்பாக இருக்க வேண்டும். பொருளாதாரத்தை வெற்றி கொள்வதற்கு பணம் மட்டும் முக்கியம் அல்ல. பணத்தை நிர்வகிக்கின்ற மத்திய வங்கியும் அதன் சுயாதீனமும் முக்கியமானது. இலங்கை இதைக் கொண்டுள்ளதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 09

## இலங்கையின் நாணயத் தாள்களின் வெளியீடு பொருளாதார மீட்சிக்கு உதவுமா?

Sunday Virakesari, June 21, 2020 & June 28,2020

உலகில் கொரோனா தொற்று காரணமான உருவான பொருளாதார பின்னடைவில் இருந்து மீட்சி பெறுவதற்காக பல நாடுகள் நாணயத் தாள்களை அச்சடித்து பொருளாதாரத்திற்குள் உட்செலுத்தின என்பதை கடந்த வார கட்டுரையில் குறிப்பிட்டு உள்ளேன். இக் கட்டுரையானது இந்த நாணயத் தாள்களில் வெளியீடு இலங்கையில் பொருளாதார மீட்சிக்கு உதவுமா? என்பதை ஆராய்கின்றது.

நாணயத் தாள்களின் வெளியீடு சட்ட ரீதியாக பண நிரம்பல் வெளியீட்டுக்கு உரியதா இல்லையா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. மத்திய வங்கி அரச பிணைப் பத்திரங்களை திறைசேரியிடம் இருந்து பெற்றுக் கொண்டு நாணயத் தாள்களை வெளியீட்டு உள்ளது. மத்திய வங்கியின் ஐந்தொகையில் இந்த பிணைப் பத்திரங்களில் வருகையினால் உள்நாட்டு சொத்துக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனவே உள்நாட்டு சொத்து அதிகரிப்பு நிகராக நாணய நிரம்பலை மத்திய வங்கி செய்யலாம். இது சட்ட ரீதியாக பெற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆனால் மத்திய வங்கி பெறப்பட்ட பிணைப் பத்திரங்களை இரண்டாம் தர சந்தையில் பொது மக்களுக்கு வணிக வங்கிகளுக்கு விற்பனை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பகிரங்க சந்தை நடவடிக்கை) பண நிரம்பலை கட்டுப்படுத்த வேண்டும்.

**பணத்தாள்களின் வெளியீட்டின் கொரோனா தொற்று பின்னணி**

கொரோனாவினால் உருவான பொருளாதார நெருக்கடியானது மக்கள் எல்லோரையும் வங்கிகளில் இருந்து பணத்தை மீள எடுக்க தூண்டியுள்ளது. அதாவது கால சேமிப்பு மற்றும் நடைமுறை வைப்புக்களில் உள்ள பணத்தை பொது மக்கள் தாள் நாணயங்களாக தமது கைகளுக்கு வைத்திருப்பதற்கு மாற்றிய காரணத்தினால் பொருளாதாரத்தில் திரவத் தன்மைக்கான தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மத்திய வங்கி பெற்றுக் கொண்ட பிணைப் பத்திரங்களை சந்தையில் விற்பனை செய்தால் மென் மேலும் வணிக வங்கிகள் மற்றும் பொது மக்களிடம் உள்ள பணம் மத்திய வங்கிக்கு வந்து திரவத் தன்மை பணத்தில் பற்றாக்குறை ஏற்படும். இது பொருளாதாரத்தில் பணத்தின் அளவை குறைப்பதற்கு வழி வகுக்கும். இது பொருளாதாரத்தில் உறுதியற்ற நிலையை உருவாக்கும். எனவே பிணைப் பத்திரங்களுக்கு எதிராக நாணயத் தாள்களை வெளியீடு செய்தல் சிறந்த நாணய முகாமைத்தும் என மத்திய வங்கி விளக்கம் கொடுத்துள்ளது. இந்த விளக்கம் குறும் காலத்துக்கு சரியானது ஆகும். ஆனால் பிரச்சினை குறும் காலத்துக்குரியது அல்ல. நீண்ட கால நோக்கிலேயே பார்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகில் நாணயத்தாள்களின் வெளியீடு**

இந்த நாணயத் தாள்களின் வெளியீடு உலகில் ஒன்றும் புதிதானது அல்ல. உலகில் பல நாடுகள் பொருளாதாரம் சாதாரண நிலையில் இயங்கிய சூழ் நிலைகளிலும் இந்த அணுகு முறை ஊடாக நாணயத் தாள்களை வெளியீட்டு அதை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தியுள்ளது.

உதாரணமாக வளர்ந்த ஐரோப்பிய, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் கூட பல பாரிய அபிவிருத்தி திட்டங்களுக்கு தேவையான நிதியானது இவ்வாறான அரச பிணைப் பத்திரங்கள் ஊடாக மத்திய வங்கியில் நாணயத் தாள்களின் வெளியீடு ஊடாக செலவு செய்யப்பட்டது. ஆனால் இந்த நாடுகள் இதன் தாக்கத்தை நீண்ட காலத்துக்கு செல்ல விடாமல் குறும் காலத்திலேயே அரசுகள் தங்கள் பிணைப் பத்திரங்களை மத்திய வங்கியிடம் இருந்து மீண்டு எடுப்பதற்கான வருமான மூலங்கள் ஊடாக மத்திய வங்கியிடம் இருந்து மீட்டு எடுப்பதற்கான வருமான மூலங்களை ஸ்திரப்படுத்தி திரட்டப்பட்ட வருமானங்களைக் கொண்டு அரச பிணைப் பத்திரங்களை மீட்டு எடுத்த காரணத்தினால் அச்சிடப்பட்ட நாணயத் தாள்கள் பொருளாதாரத்தில் பணவீக்க நிலைமைகளிலே அல்லது நிதி பொறி முறையின் உறுதியற்ற நிலைமைகளுக்கோ இட்டுச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பணத்தாள்களின் வெளியீட்டினால் ஈடு செய்யப் பட்ட அரச செலவீடுகள் மக்களை வீட்டுக்குள் நித்திரை செய்ய முடக்க வைத்து அவர்களை சோம்பலாக வினைத்திறன் அற்ற சமூகநலன்புரி அரச செலவீடுகளாக இருக்கவில்லை. இந்த அரசுகள் நாணய தாள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு வழி செலவு செய்த செலவுகள் இலவச உணவு, இலவசக் கல்வி, இலவச சீருடை, இலவச போக்குரத்து, இலவச தேர்தலை நோக்கமாக கொண்ட அரசியல்வாதிகளின் வாக்கு வங்கிகளை பலப்படுத்த கூடிய நலன்புரிச் செலவீடுகளில் செலவீடு செய்யவில்லை என்பது கவனத்தில் கொள்ள வேண்டும். மாறாக நாணயத் தாள்களின் வெளியீட்டுக்கான செலவீடுகள் பல பாரிய உள்கட்டுமானங்களில் பயன்படுத்தப்பட்டது. உள்கட்டு மானங்கள் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தியடைந்த பின்னர் அவை மக்களுக்கு இலவசமாகவோ அல்லது மானிய அடிப்படையிலோ சேவைக்கு திறந்து விடப்படவில்லை. மாறாக அவை அரசுக்கு வருமானத்தை அதிகரிக்க கூடிய வகையில் விலையிடப்பட்டு சேவைக்கு விடப்பட்டன. உதாரணமாக கடுகதி வீதிகள், புகையிரத உள்கட்டு மானங்கள் வீடமைப்பு திட்டங்கள், தரைகீழ் உள்கட்டு மானங்கள் போன்ற பொருளாதார நடவடிக்கைகளுக்கு தேவையான அபிவிருத்தி உள்கட்டுமானப் பணிகளுக்கு தேவையான நிதியானது இவ்வாறான நாணயத்தாள்கள் வெளியீடு வழி பெறப்பட்டு செலவு செய்யப்பட்டன. இதில் கவனிக்கப்பட வேண்டிய இன்றொரு விடயம் யாதெனில் இப் பாரிய கட்டுமானப் பணிகள் அரச நிறுனங்கள் ஊடாகவே பூர்த்தி செய்யப்பட்டன. அரசு இப் பணிகளை உள்நாட்டு தனியார் துறையினருக்கு ஏலம் விட்டோ, அல்லது வெளிநாட்டு தனியார் துறையினருக்கு ஏலம் விட்டோ செய்யவில்லை. மாறாக அரச நிறுவனங்களே இக்கட்டுமானப் பணிகளை மிகவும் தரம் வாய்ந்ததாகவும் ஊழல் மோசடிகள் இல்லாமல் கால இழுத்தடிப்பு இல்லாமல் திட்டமிட்ட காலத்தில் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு அதிக விலையில் சேவைக்கு விடப்பட்டன. எனவே இவைகள் ஊடாக அரசு அதிக வருமானத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று அரசின் மொத்த வருமானம் அதிகரித்து பிணைப் பத்திரங்களை பொருளாதார வலி இன்றி மீட்டது.

**கொரோனா காலத்தில் உலக நாடுகளின் நாணயத் தாள்கள் வெளியீடு**

கொரோனா காலத்தில் கூட பல வளர்ந்த நாடுகள் வெளியீடு செய்த பணத்தாள் வழி செலவு செய்த அரச செலவீடுகள் மக்களின் நலன்புரிச் செலவீடுகளில் செலவீடு செய்ததை காட்டிலும் அதிகளவான செலவீடு பொருளாதாரத்தின் உற்பத்தி நிறுவனங்களை தொடர்ந்து இயங்கச் செய்வதற்காக செலவீடு செய்யப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்களை தொடர்ந்து தொழிற்பட செய்வ தற்காக பல ஊக்குவிப்பு திட்டங்களுக்கு அரசு அதிக செலவீடுகளை செய்துள்ளது. உதாரணமாக இலங்கையில் கொரோனா காலத்தில் அரச ஊழியர்களுக்கு 100 வீதம் சம்பளம் வழங்கப்பட்டது ஆனால் தனியார் தொழில் நிறுவனங்களை மீட்பதற்கு மிகச் சிறிய தொகையே செலவீடு செய்யப்பட்டது. இந்த நிலமை வளர்ந்த நடைமுறை அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஐரோப்பா போன்ற நாடுகளில் எதிர்மாறாக காணப்பட்டது. 80 வீதமான சம்பளமே மக்களுக்கு வழங்கப்பட்டது. பெருமளான நிதி நேரடியாக தனியார் நிறுவனங்களில் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு முன்னெடுப்பதற்கு பயன் படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் தொடர்ந்து தொழிற்பட்டால் அரசு நெருக்கடிக்கு பின்னர் பல வரிகள் ஊடாக வருமானத்தை திரட்டிக் கொள்ள முடியும்.

**இலங்கையின் அரச செலவீடும் நாணயத் தாள்களின் வெளியீடும்.**

இலங்கையின் கடந்தகால வரவு செலவுத் திட்டத்தை நோக்குவேமானால் இலங்கையின் அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவீடு இலங்கைப் பொருளாரத்தை மீட்க உதவுமா? என்பது தெளிவாகும்.

இலங்கையின் மொத்த அரச செலவீட்டில் முதலீடத்தை வகிப்பது பொது நிர்வாகமும் பாதுகாப்பும் ஆகும். இலங்கையின் பொது நிர்வாகம் என்பது மிகவும் வினைத்திறன் அற்ற ஓர் துறை ஆகும். இலங்கையில் ஏறத்தாழ 16 இலட்சம் அரச ஊழியர் வேலைக்கு அமர்த்தப்பட்டு உள்ளனர். ஆனால் இந்த பொது நிர்வாகத்தை செய்வதற்கு 8 இலட்சம் பணியாளர்கள் போதுமானதாகும் எனவே 8 இலட்சம் பணியாளர்கள் மிகையாக கொண்ட பொதுத் துறையில் வினைத்திறனை எதிர்பார்க்க முடியாது. பொதுத் துறை வேலைவாய்ப்பை பதவிக்கு வருகின்ற அரசுகள் தங்கள் அரசியல் இருப்புக்கான வாக்கு வங்கியை தக்க வைப்பதற்கான ஒரு கருவியாக கையாளுகின்றமையே இந்த பொதுத் நிர்வாகத்தில் வினைத்திறன் இன்மைக்கு காரணம் ஆகின்றது. பொது நிர்வாகத்தில் நாட்டுக்கு முன் மாதிரியாக வினைத் திறமையாக பல்கலைக்கழகங்கள் தொழிற்பட வேண்டும் ஆனால் இலங்கையில் பல்கலைக் கழகங்கள் அவ்வாறான வினைத்திறனான நிர்வாக த்தையோ அல்லது வினைத்திறனான நிர்வாகத்தை செய்யக் கூடிய பட்டதாரிகளையோ உருவாக்கவில்லை. மாறாக இவை வினைத்தின் அற்ற ஊழல் மோசடிகளை கொண்டவையாக இயங்குகின்றன. உதாரணமாக சிங்கப்பூரில் ஒரு அரச உயர் அதிகாரி மது போதையில் இரவில் லிப்ரிக்குள் வாந்தி எடுத்து சூழலை அசுத்தப் படுத்தியமைக்காக அவர் வீடு வந்து சேருவதற்கு முன்னர் அவருடைய வீட்டு தொலை நகலில் அவர் இந்த குற்றத்தை செய்தமைக்காக இரண்டு கிழமைகள் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கான கட்டளைக் கடிதம் வந்திருந்தது. இந்த பொது நிர்வாகத்தை உருவாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாரிகளும் அவைகளை உருவாக்கிய பல்கலைக் கழகங்களும் சிறப்பானவை ஆகும்.

இதே விடயத்தை இலங்கையில் ஒப்பிடுவோ மானால் இலங்கையில் ஒரு பல்கலைக்கழகத்தில் 2012ம் ஆண்டு பாலியல் குற்றச்சாட்டில் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட பேராசிரியர் ஒருவருக்கு 2013 இல் இருந்து முழு சம்பளத்துடன் கட்டாய லீவில் எல்லா பதவி உயர்வுகள் மற்றும் அவற்றுக்கான படிகள் எல்லாம் கடந்த 7 வருடங்களுக்கு மேலாக வழங்கப்படுகின்றன. இந்தக் காலப்பகுதியில் இரண்டு அரசுகளுக்கு சார்பான பேரவை உறுப்பினர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தில் வந்து சென்றும் இந்த பிரச்சினைக்கு முடிவு காணப் படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றது. இந்த நிர்வாக செயற்பாடு பாலியல் குற்றச்சாட்டுக்கான பல்கலைக்கழக நிர்வாகத்தின் ஊக்குவிப்பாக பிறரால் பார்க்கப்படுகின்றது. இவ்வாறான பல்கலைக்கழகங்கள் எப்படி சிறப்பான பொது நிர்வாகத்துக்குரிய பட்ட தாரிகளை உருவாக்க முடியும்? அரசாங்கம் இலவச கல்வி வழங்கி 4 வருடங்கள் பல்கலைக்கழகத்தில் பயிற்றப்பட்ட பட்ட தாரிகளை அரச பொது நிர்வாகத்தில் தேவைக்கு மேலாக உள்ளீர்க்கப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இந்த பொது நிர்வாகத்துக்கு செலவு செய்யும் பணத்துக்கு நாணய தாள்களை வெளியீடு செய்தால் நிலமை எப்படி இருக்கும் என்பதை எவரும் இலகுவாக உணர முடிகின்றது.

அரச செலவீட்டில் இலங்கை எதிர்நோக்குகின்ற இன்னொரு பிரச்சினை பாதுகாப்பு செலவீடு ஆகும். இலங்கையில் ஒவ்வொரு வரும் ஏறத்தாழ ஒரு நாள் காலை உணவுக்கான செலவுக்கு சமமாக பாதுகாப்பு செலவை தாங்கிக் கொள்கின்றார்கள். ஒரு சிறிய நாடு பௌத்த மத சிங்கள இனவாத மேலாண்மைக்காக இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய பாதுகாப்பு செலவை செய்ய வேண்டிய ஜனநாயாக சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. ஆட்சியாளர்கள் பெரும்பான்மை மக்களின் ஆதரவை பெற வேண்டு மானால் பாதுகாப்பு செலவும் நலன்புரி செலவுகளும் இரண்டு கண்களாக இலங்கை பொருளாதாரத்தில் ஆட்சி யாளர்களுக்கு தெரிகின்றன. இந்த செலவீடுகளுக்கான நிதியை பணத்தாள்களின் வெளியீடு வழி ஈடுசெய்தால் நாடு மிக மோசமான நிலைக்கு செய்ய வேண்டிய நிலை உருவாகும்.

அரச தொழில் நிறுவனங்களின் செயலாற்றம் என்பது நாணயத் தாள்களின் வெளியீட்டின் வழி பொருளாதார நன்மைகளை பெறுவதில் சவாலாக இருக்கின்றது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நாணய தாள்களின் அச்சிட்டு அரச செலவீட்டை ஈடு செய்தலின் பொருளாதார வெற்றி என்பது அரச தொழில் முயற்சி களின் வெற்றிகளிலும் பெரிதும் தங்கியுள்ளது. சிங்கப் பூரில் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளான சிங்கப்பூர் ஏயர்லைன், வீடமைப்பு அதிகார சபை, சிங்கப்பூர் நகர அபிவிருத்தி சபை போன்ற அரச தொழில் முயற்சிகள் அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரும் தொழில் முயற்சியாக இயங்குகின்ற போது இலங்கையில் சிறீலங்கன் விமான சேவை, இலங்கை புகையிரத திணைக்களம், இலங்கை மின்சார சபை போன்ற அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகள் அதிக நட்டத்தில் இயங்குகின்றன. இவ்வாறான நட்டத்தில் இயங்குகின்ற அரச தொழில் முயற்சியாளர் உள்ள பொருளாதாரத்தில் பணத் தாள்களின் வெளியீடு வழி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியாது. சுருக்கமாக கூறுவோமானால் நாணயத் தாள்களின் வெளியீட்டு வழியினை அரச செலவீடுகளை குறும் காலத்தில் வருமானமாக மீளப் பெற்றுத் தருகின்ற அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் முயற்சிகள் உள்ள நாட்டில் நாணய தாள்களின் வழியிலான அரச செலவீடு பொருளாதாரத்துக்கு அதிக வருவாயை உருவாக்கி நாணய தாள்களின் வெளியீட்டு வழி வருகின்ற பொருளாதார சுமைகளான பணவீக்கம், நாணயப் பெறுமதி தேய்வு போன்றவற்றை தடுத்து நிறுத்தும். மாறாக ஏற்கனவே பாரிய நட்டத்தில் இயங்கு கின்ற அரச தொழில் முயற்சிகள் உள்ள நாட்டில் பணத் தாள்களின் வெளியீட்டு வழி அரச செலவீட்டை ஈடு செய்தல் என்பது நீண்ட காலத்தில் பாரிய பொருளாதார அனர்த்தங்களுக்கு இட்டு செல்லலாம்.

அரசின் வரி வருமான மூலங்களின் பண்புகளும் பண தாள்களின் வழி பொருளாதார மீட்சியினை நீண்ட காலத்தில் தீர்மானிக்கின்றன. அபிவிருத்தி அடைந்த நாடு களில் நெருக்கடியான காலங்களில் அரச செலவீட்டுக்கு ஈடு செய்யப்படும் நாணயத் தாள்களின் வெளியீட்டின் வழி அரச பிணைப்பத்திரவர்களை மீட்டு எடுப்பதற்கு அரச வரி வருவாய் ஒரு காத்திரான வகிபாகத்தை கொண்டிருக் கின்றன. வளர்ந்த நாடுகள் ஒரு உறுதியான வரி அறவீட்டு கட்டமைப்பை கொண்டிருப் பதோடு ஓரளவிற்கு நல்லாட்சி திறனுடைய வரி சேகரிப்பு முறையை கொண்டிருக் கின்றன. ஜேர்மனியில் ஒருவர் இன்னொருவரை கொலை செய்த குற்றத்தில் இருந்து இலகுவாக தப்ப முடியும். (மனநோய், மனித உரிமை போன்ற பல காரணங்களை முன்னிறுத்தி) ஆனால் வருமான வரி செலுத்துவதில் இருந்து தப்பிக்க முடியாது. எல்லா நடவடிக்கைகளும் நன்கு நிறுவன மயப்படுத்தப்பட்டிருப்பதால் வரி ஏய்ப்பு செய்ய முடியாது. மக்களும் அரசுக்கு வரி செலுத்துவது தங்கள் கடமை என்ற உளப்பாங்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். இப்படியான பண்புகளை கொண்ட நாடு களில் அரசு பல கோடி பணத்தாள்களை வெளியிட்டு பின்னர் வருமான வரிகள் ஊடாக அரச வருமானத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தி குறுகிய காலத்தில் அரச பிணைப் பத்திரங் களை மீட்டு எடுக்க முடியும்.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள வரிக்கட்டமைப்பு (குறிப்பாக வருமான வரி) உள்ள குறைபாடுகள், நிர்வாக முறை கேடுகள் போன்றன காரணமாக அரசு தனது வருமான வரி ஊடாக அரச வருவாயை உயர்த்த முடியாத சூழ்நிலை காணப்படு கின்றது. இலங்கை வருமான வரியில் அதிகரிப்பை உருவாக்கும் போது அதில் அதிகம் பாதிக்கப்படுகின்ற வர்கள் அரசிலும் அரச நிர்வாகத்திலும் முக்கியமான வகிபாகத்தை கொண்டிருக்கின்றது. உயர்தர வர்த்தக மாகும். வரி ஏய்ப்பு செய்பவர்கள் அரசியல்வாதிகளின் வலுவான பின்புலத்தை கொண்டவர்களாக உள்ளனர். வரி சேகரிப்பு முறையில் உள்ள ஓட்டைகளை மூடாமல் இலங்கை நிர்வாகம் தொடர்வதற்கான பிரதான காரண்ம் இந்த அரசியல்வாதிகளின் பின்புலம் ஆகும். எனவே அரச வருமான வரி மூலம் தனது வருவாயை அதிகரிக்க முடியாது உள்ளது. இந்நிலைமை பணத் தாள்களின் வெளியீட்டின் வழி பொருளாதாரத்தில் நீண்ட காலத்தில் பல பாதகமான நிலைமைளை உருவாக்கும்.

இலங்கையின் தாராள ஜனநாயகம் வழி அரசியலில் பொருளாதாரத்தில் நாணயத் தாள்களின் வெளியீட்டின் வழி நன்மைகளை பெறுவது கடினமான தாகும். மக்கள் நலன்புரிச் செலவுகளில் அடிமையாகி யுள்ளனர். அரசியல்வாதிகளும் தங்கள் பிழைப்புக்காக இவ்வாறான செலவீடுகளை ஊக்குவிக்கின்றனர். ஊடக வியலாளர்கள் பொருளாதாரத்தின் அடிப்படையினை செல்வத்தை உருவாக்கின்ற மூலகங்களை முன்னிலைப் படுத்துவதை விட செல்வ பகிர்விலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். எனவே இவ்வாறான சூழ்நிலையில் பணத் தாள்களின் வெளியீட்டு வழி நாடு செல்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதற்கான முக்கியத்துவம் குறைகின்றது. நாடு மரத்தை நாட்டுவதற்கு முன்னர் அதன் பழத்தை ருசிக்க துடிக்கின்றது. இந்த உளப்பாங்கு இருக்கும் போது நாணயத் தாள்களின் வெளிப்பாடு நீண்ட காலத்தில் பாதிப்பை உருவாக்கும்.

கொரோனா காலத்தில் மக்கள் கையில் பணத்தை வைத்திருப்பதற்காக பணத்திற்கான கேள்வி அதிகரித்த மையினால் பணத்தாள்கள் வெளியிடப்பட்டன. மறு புறத்தில் கொரோனாவுக்கு பின்னர் மக்களின் பணத்துக் கான கேள்வி குறைவடையும் போது பொருளாதாரத்தில் மிகை பணம் இருக்கும். இது பொருட்கள் சேவை களுக்கான கேள்வியை அதிகரித்து பணவீக்கத்துக்கு இட்டுச் செல்லக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. இலங்கையில் பணத்தாள்களின் வெளியீட்டு வழி மூலதன செலவுக்கான உள் கட்டுமானங்களில் தனியார் துறை ஈடுபடுத்தப்படுகிறது. பல வெளிநாட்டு குறிப்பாக சீனாவின் நிறுவனங்கள் கட்டிட நிர்மாணப் பணியில் ஈடுபடுகின்றன. அரச நிர்மாண நிறுவனங்கள் செயல் இழந்து உள்ளன. எனவே தனியார் துறை வழி நாணய தாள்களின் வெளியீட்டு வழி உள்கட்டுமானங்களை உருவாக்குவது நீண்ட காலத்தில் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு பதிலாக பலவீனப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஊழல்கள், மோசடிகள், தரம் குறைந்த கட்டுமானங்கள், இலாபம் வெளிநாடுகளுக்கு செல்லல் போன்ற காரணங் களுக்காக உறுதியான பொருளாதார அபிவிருத்திக்கு அரச துறை நிர்மாண நிறுவனங்கள் அவசியப்படுகின்றன.

ஆனால் இலங்கையின் அனுபவத்தில் ஏற்கனவே பல அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கும் போது உள்கட்டுமான நிர்மாணத்துறையில் அரச நிறுவனங்களின் தொழிற்பாடு அரசுக்கு மேலும் மேலும் சுமையாக அமையும். சீனாவில் பல அரச உட்கட்டுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் பணத் தாள்களின் வெளியீட்டு மூலமான அரச செலவீட்டு உள்கட்டுமான பணிகளை நிறைவேற்றின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அரச நிறுவனங்களில் மிகவும் கடுமையான சட்ட விதிகள் மற்றும் தண்டங்கள் ஊடாக தொழிலாளர்களை கசக்கி பிழிந்து உற்பத்தி திறனை அதிகரித்து அரசின் வருவாயை அதிகரிப்பதற்கு அந் நாட்டின் அரசியல் கட்டமைப்பு (ஒரு கட்சி ஏதேட்சை அதிகார ஆட்சி) காரணமாக இருக்கிறது. இலங்கையில் அப்படி புதிய சட்டங்கள் அமுல்படுத்த முடியாது மட்டும் அல்ல, இருக்கின்ற சட்டங்களையே பிரயோகிக்க முடியாது. மனித உரிமைகள், வாக்கு வங்கி என ஜனநாயக விழுமியங்களை ஆட்சியாளர்கள் மதிக்க வேண்டி இருப்பதால் பணத் தாள்களின் வழி அரச தொழில் நிறுவனங்கள் ஊடாக அரசின் வருவாயை அதிகரித்து அச்சடிக்கப்பட்ட நாணய தாள்களுக்கு ஈடு வைக்கப்பட்ட அரச பிணைப் பத்திரங்களை மீட்க முடியாமல் போகலாம்.

இருப்பினும் இராணுவ பின்புலத்தை கொண்ட தற்போதைய ஜனாதிபதியின் அணுகுமுறையானது சில நல்ல சமிஞ்சைகளை பொருளாதாரத்தில் உருவாக்கி யுள்ளது. குறிப்பாக கொரோனா கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததில் இராணுவ அணுகுமுறையும் ஒரு காரணமாக இருக்கின்றது. பொருளாதார அபிவிருத்திக் கான தலைமைத்துவம் என்பது ஒரு கப்பல் ஓட்டும் கப்டின் மற்றும் யுத்த முன்னரங்கில் எதிரியுடன் போரிட்டு கொண்டிருக்கும் இராணுவத்துக்கு தலைமை தாங்கும் கப்டின் போன்றது. களத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு அசைவுகளுக்கும் மேலிடத்தின் உத்தரவுகளை கேட்டு கப்பல் கப்டின் கப்பல் செலுத்தினால் கப்பல் புயலில் கவிழ்ந்து விடும். களச் சூழலுக்கு ஏற்றவாறு முடிவு எடுக்கின்ற அதிகாரம் கப்டனுக்கு வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ முன்னிலையில் போரிடும் கப்டனுக்கு களச் சூழலை கருத்தில் கொண்டு முடிவு எடுக்கும் அதிகாரம் வேண்டும். இதேபோன்று தான் பொருளாதார அபிவிருத் திக்கும் ஒரு தன்னிச்சையான முடிவு எடுக்கும் எதேட்சை அதிகார வலு அவசியமாகிறது.

எல்லா விடயங்களுக்கும் பொருளாதார அறிவு இல்லாத சுய நலத்துக்காக இயங்குகின்ற மக்களின் மற்றும் மக்களின் பிரதிநிதிகளுடன் விவாதித்துக் கொண்டிருக்க முடியாது. இலங்கை கடந்த 60 வருடங் களுக்கு மேலாக அவ்வாறு விவாதித்து முடிவெடுத்த அணுகுமுறைகள் நல்ல பெறுபேற்றினையும் பெறவில்லை. மாறாக அழிவுகளையும் அனர்த்தங் களையுமே சந்தித் துள்ளது. சீனா, தென்கொரியா, தைவான் போன்ற நாடுகளில் இருந்ததை போன்ற குறைந்த ஜனநாயாக ஆட்சி முறை பொருளாதார அபிவிருத்திக்கு அவசிய மாகின்றது.

இலங்கையில் அவ்வாறான ஒரு குறைந்த ஜனநாயத்தை கொண்ட அதிகார வலுவை கைப் பற்றுவதற்காகவே எங்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி மூன்றில் இரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மைக்காக பலமாக போரிட்டு வெற்றி பெற்றுள்ளார். ஒரு பொருளா தார நோக்கில் ஜனாதிபதியின் இந்த அணுகு முறை யானது மிகவும் தேவையானது மட்டும் அல்ல மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆனால் குடும்ப ஆட்சியில் மற்றும் பூகோள அரசியலுக்குள் சிக்குண்டு இருக்கும் இலங்கையின் ஜனாதிபதிக்கு இந்த அணுகுமுறை பொருத்தமாக இருக்குமா? அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 10

## 20 இல் ஜனாதிபதியின் அதிகாரம் கொரோனாவில் இருந்து மீண்டு பொருளாதார அபிவிருத்திக்கு உதவுமா?

Sunday Virakesari, November 01, 2020

இலங்கை ஆசியாவிலே ஜனநாயகத்தில் முதல் நிலை நாடு என நாம் பெருமைப்படுகின்றோம். 1931 இல் டொனமூர் யாப்பில் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை 1948 இல் சுதந்திரம் அடைந்தது முதல் 1978 வரை சிறுபான்மை மக்களுக்கு ஜனநாயகம் இல்லையாயினும் இலங்கையின் பெரும்பான்மை மக்களுக்கு ஜனநாயகம் அதிகமாக கிடைத்துள்ளது. 1978 இல் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையானது நாடாளுமன்றத்துக்கு இருந்த அதிகாரங்கள் குறைக்கப் பட்டு ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப் பட்டன. இது 18 இல் மென்மேலும் அதிகரிக்கப்பட்டு பின்னர் 19 இல் குறைக்கப்பட்டு தற்போது 20 இல் அவை மீண்டும் அதிகரிக்கப் பட்டுள்ளது. அரசியல் கண்ணோட்டத்தில் இது பற்றி பல வாதப் பிரதிவாதங்கள் இருந்தாலும், பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி கண்ணோட்டத்தில் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்கள் அல்ல, இதை விட அதிக அதிகாரங்கள் வழங்கி நாட்டை பொருளாதார ரீதியாக துரிதமாக அபிவிருத்தி செய்யலாம்.

பொருளாதார அபிவிருத்தி எனும் போது இரண்டு விடயங்கள் முக்கியமானவையாகும்.

அ)பொருளாதார வளர்ச்சி (நாட்டின் செல்வம் அதிகரித்தல், அதாவது GDP இன் மெய்வளர்ச்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ)சமூக அபிவிருத்தி(வறுமை மற்றும் வருமான சமமின்மை குறைதல். நாட்டின் எல்லா மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிலைபேண் நிலையில் உயர்த்துதல்)

இவற்றில் இரண்டும் நாட்டுக்கு அவசியமான போதும் பொருளாதார வளர்ச்சியே நாட்டுக்கு அடித்தளமாகும். இது ஆணி வேராகும். சமூக அபிவிருத்தியாகிய வண்டியை முன்னால் நின்று குதிரை போன்று சமூக அபிவிருத்தியாகிய வண்டியை எழுத்து செல்வதற்கு பொருளாதார வளர்ச்சி அவசியமானது. ஆனால் வளர்ச்சி மட்டும் அபிவிருத்தி அல்ல. ஆனால் வளர்ச்சி அபிவிருத்திக்கான முன்தேவை ஆகும்.

அபிவிருத்திக்கு அடிநாதமாக இருக்கும் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு நாட்டின் அரசியல் முறைமை குறிப்பாக உள்நாட்டு அரசியல் முறைமை தாராள ஜனநாயகம் கொண்டதாக அமையக் கூடாது என்பது பல நாடுகளின் அனுபவங்களின்வழி உணரலாம். பிரித்தானியா போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவத்தின் எழுச்சியானது தாராள ஜனநாயகத்தைக் கொண்டிருக்கவில்லை. நாம் இன்று வலியுறுத்துகின்ற அடிப்படை மனித உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டுத்தான் இந்நாடுகளில் விவசாயப் புரட்சியோ அல்லது கைத் தொழில் புரட்சியோ நடைபெற்று நாட்டின் செல்வத்தை உருவாக்குவதற்கான அத்திவாரம் இடப்பட்டது. பிரித்தானியாவில் ஒரு குழந்தைக்கு பெற்றோர் அடித்தால் உடனே அப்பெற்றோரை கைது செய்து சிறையில் அடைத்து குழந்தையின் மனித உரிமைளை பேணுமளவுக்கு அடிப்படை உரிமைகளில் முன்னேறி உள்ளது. இதே பிரித்தானியாவிலும் அதன் குடியேற்ற நாடுகளிலும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பெண்களும் குழந்தைகளும் தொழிற்சாலைகளில் அடிமைகளாக வேலை வாங்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் உழைப்புக்கள் முதலாளிகளால் சுரண்டப்பட்டு முதலாளித்துவம் எழுச்சியடைந்தது. இந்த உண்மையை பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

இலங்கை சுதந்திரத்தில் இருந்து அனுபவித்த தாரள ஜனநாயகத்தின் வழி பொருளாதாரத்துக்கு பிரதானமாக இரண்டு துன்பியல் சம்பவங்கள் இடம் பெற்று உள்ளன.

முதலாவது, ஜனநாயகத்தில் வாக்கு வங்கியை தக்க வைத்துக் கொள்வதற்காக பதவிக்கு வந்த அரசுகள் இலங்கையின் தகுதிக்கு மீறிய சமூக நலச் செலவீடுகளை செய்து அரச மற்றும் தனியார் நுகர்வுச் செலவு அதிகரித்து சென்றது. இது சேமிப்பைக் குறைத்து முதலீட்டைக் குறைத்தது. உற்பத்தி குறைந்து பொருளாதார வளர்ச்சியை மந்தமாக்கியது. இந்த ஜன நாயக நலன்புரி செலவு நஞ்சு வட்டம் சுதந்திரத்தில் இருந்து ஆரம்பமாகி இன்று வரை தொடர்கின்றது. 1960 களில் இலங்கைக்கு விஜயம் செய்த பிரபல்ய பொருளியல் நிபுணரான ரொபின்சன் அம்மையார் இந்த முரண்பட்ட அபிவிருத்தியை **"இலங்கை மரத்தை (பொருளாதார வளர்ச்சி) நாட்டுவதற்கு முன்னர் அதன் பழத்தை (சமூக நலச் செலவுகள்) ருசி பார்த்து விட்டது"** எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த சாபக்கேடான பொருளாதார நஞ்சு வட்டத்துக்கு பிரதான காரணமாக இருந்தது நாடாளுமன்ற தேர்தல்கள் ஆகும்.

இரண்டாவது, ஆட்சியாளர்கள் சமூக நலன்புரி செலவுகளுக்கு வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த போது அதற்கான செலவீடுகளை எல்லா மக்களுக்கும் வழங்குவதற்கு தேவையான நிதிப்பலம் இலங்கையிடம் இல்லாமல் இருந்தது. ஆரம்பத்தில் பெருந்தோட்டதுறை ஊடாக அரசு வருவாயை பெற்றுக் கொண்ட போதும் பின்னர் சமூக நலச் செலவீடுகளால் வளர்த்தெடுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பணியாளர்களைக் கொண்டு அரச பெருந் தோட்டங் களையோ அல்லது அரச தொழில் முயற்சிகளையோ சிறப்பாக முகாமை செய்ய முடியாது போன காரணத்தால் அரசின் வருவாய் வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக நலச் செலவீடுகளில் வெட்டுக்கள் செய்ய வேண்டி இருந்தது. அந்த வகையில் பெரும்பான்மை மக்களின் பிரதேசங்களில் நலச் சேவைகளில் பேதப்படுத்தலை செய்வதற்கு பதிலாக சிறுபான்மையினர் வாழ்ந்த பிரதே சங்களில் அரச நலச் செலவீடுகளில் பேதப்படுத்தலை செய்தார்கள். கல்வியில் தரப்படுத்தல், பொது வேலை வாய்ப்பில் இனபேதப்படுத்தல், உள்கட்டுமானங்களில் இன பேதப்படுத்தல் என இவற்றை வரிசைப்படுத்த முடியும். இந்த பொருளாதார நலன்புரிச் செலவுகளின் பேதப் படுத்தல்கள் இன முரண்பாடுகளுக்கான காரணங்களில் ஒன்றாகி இன யுத்தத்தில் முடிவடைந்து பாதுகாப்பு செலவின அதிகரிப்புக்கும் காரணமாக அமைந்தது. இது மறுபுறத்தில் வெளிநாட்டு மூலதனத்துக்கான உள் அசைவுகளையும் தாமதப்படுத்தி வளர்ச்சியைத் தடுத்தது.

ஜனநாயக அரசியல் இல்லாமல் 1948 இல் இருந்து இந்த 20 ஐ விட மேலான எல்லா இன மக்களையும் ஒனறிணைத்து சர்வாதிகார ஆட்சியோ அல்லது ஒரு கட்சி தலைமை தாங்கும் ஆட்சி உருவாகி இருந்தால் அப்போது இருந்த இன ஒற்றுமையுடன் குறைந்த ஜனநாயக உள்நாட்டு அரசியல் வழி நாடு பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாக கொண்ட அபிவிருத்தியை அடைந்திருக்கும். இலங்கை சிங்கப்பூரை விட பன்மடங்கு முன்னேறி இருக்கும்.

பாரம்பரியமாக இருக்கின்ற சமூகங்களில் இன, மொழி, சமய வேறுபாடுகளை உருவாக்கி வாக்கு வங்கியை பலப்படுத்த மூன்றாம் நிலை அரசியல் தலைவர்கள் ஜனநாயகத்தை ஒரு கருவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாண்டனர். இதை உடைத்துக்கொண்டு முதலீட்டில் அதி உந்துதல் (Big Push) அல்லது பாரம்பரிய பொருளாதாரத்தில் இருந்து விடுபட்டு கட்டத்தை (Take off period) அடைய வேண்டுமானால் உள்நாட்டு அரசியல் 20 ஐ போல அதிகாரம் ஒருவரின் அல்லது குடும்பம் அல்லாத ஒரு குழுவின் கையில் குறைந்தது 20 வருடங்களுக்கு குவிந்து இருக்க வேண்டும். பேராசிரியர் ரொஸ்ரோவின் கருத்துப்படி ஒரு பொருளாதாரத்தை மேல் எழுப்புவது ஒரு விமானத்தை மேல் எழுப்புவது போன்றது ஆகும். விமானம் மேல் எழும் போது விமானத்தின் அனைத்துக் கட்டுப்பாடுகளும் பிரதான விமான ஓட்டியிடம் இருப்பது போன்று நாட்டின் பொருளாதாரத்தை பாரம்பரிய நிலையில் இருந்து நவீன பொருளாதாரத்துக்கு மேல் எழுப்பும் போது நாட்டின் அரசியல் அதிகாரம் தூர நோக்கு உள்ள தனிமனிதனிடம் அல்லது குழுவுடன் இருக்க வேண்டும் என்பது பின்வரும் பல ஆசிய நாடுகளின் அனுபவங்களில் இருந்தும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தென்-கிழக்கு ஆசியாவில் ஜனநாயகம், தலைமைத்துவம், தலாவருமானம் | | | | |
|---|---|---|---|---|
| நாடுகள் | ஏதேட்சை அதிகார தலைவர்கள் | ஏதேட்சை ஆட்சியின் காலப்பகுதி | அபிவிருத்தியின் வெற்றி / தோல்வி (தலாவருமான அதிகரிப்புUS$) | ஜனநாயகச் சுட்டெண் (சராசரி) (10 க்கு) |
| தென்கொரியா | Park chung – hee<br>Chun Doo - hwan | 1961 – 1997<br>1979 – 1987 | 110 – 3320 (30 மடங்கு) | 1.33 |
| தைவான் | Chiang Kai – shek<br>Chiang Ching – Kua | 1961 – 1975<br>1978 – 1988 | வெற்றி<br>வெற்றி<br>(பல மடங்கு) | 0.07 |
| சிங்கப்பூர் | Lee kuan Yew<br>Goh Cho – Tong | 1965 – 1991<br>1991 – 2013 | 540 – 42930 (80 மடங்கு) | 2.88 |
| மலேசியா | Muhamad Mahuthir | 1981 – 1963 | 1970 – 4530 | 4.58 |
| தாய்லாந்து | Sarit<br>Thanon | 1958 – 1963<br>1963 – 1973 | 116 – 270 ( 2 மடங்கு) | 0.57 |
| பிலிப்பின்ஸ் | Marcos | 1965 – 1986 | 190 – 550 (3மடங்கு) | 1.63 |
| இந்தோனேசியா | Shharto | 1965 – 1998 | 56 – 670 (12 மடங்கு) | 0.00 |
| இலங்கை (பகுதியான ஏதேட்சை அதிகார ஆட்சி) | ஜெயவர்த்தன<br>பிரமதாஸா<br>சந்திரிக்கா<br>மகிந்த<br>ராஜபக்ஸ | 1978 – 2013 | 270 – 2580 (9 மடங்கு) | 6.07 |


மூலம்: Kenichi Ohno, GRIPS & VDF(2006) இலங்கை சேர்க்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்வுச் செலவு குறைந்து முதலீட்டுச் செலவு அதிகரிப்பதற்கு உள்நாட்டு அரசியல் குறைந்த ஜனநாய கமாக இருக்கும் போது பொருளாதார வளர்ச்சி உருவாகி தலா வருமானம் அதிகரிக்கின்றது.

**சீனா மற்றும் இந்தியாவின் மூலதனச் செலவும் தலா வருமான அதிகரிப்பும்**





மூலம் :- Selvarathinam (2009, 2012)

விமானத்தை மேல் எழுப்புவதில் உள்ள வெற்றி யானது எல்லாக் கட்டுப்பாடுகளும் பிரதான கப்டனிம் இருப்பது மட்டும் அல்ல. அந்த கப்டன் சிறந்த கப்டனாகவும் இருக்க வேண்டும். இதே போன்றே நாட்டின் அரசியல் அதிகாரம் ஒருவரிடம் குவிந்து இருப்பது மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. அதை பயன்படுத்துகின்ற அரசியல் தலைவரின் தலைமைத்துவ பண்பும் சிறப்பாக இருக்க வேண்டும்.

பிரபல்யமான அதிக மக்கள் விரும்புகின்ற தலைவர்கள் பொருளாதார அபிவிருத்தி தலைவர்கள் அல்ல. பொருளாதார அபிவிருத்தி தலைவர்கள் மக்கள் விரும்புகின்ற தலைவர்கள் அல்ல. ஜனநாயகத்தில் எல்லா மக்களையும் வீடுகளில் அல்லது அலுவல கங்களில் இருக்கவிட்டு மாதம் அவர்களுக்கான செலவை இலவசமாக கொடுத்தால் அனைத்து மக்களாலும் அந்த அரசியல் தலைவர் நேசிக்கப்படுவார். அவர் பிரபல்யமான அரசியல் தலைவராகுவார். ஆனால் அது அபிவிருத்தி அல்ல. நாட்டின் பலம் குன்றும்.

தலைமைத்துவம் பற்றி நெப்போலியன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்

**"ஆயிரம் நாய்களை போன்ற படை வீரர்களுக்கு ஒரு சிங்கத்தைப் போன்ற தலைவர் தலைமை தாங்குவார் ஆயின் களத்தில் ஒவ்வொரு வீரனும் சிங்கங்களாக இறப்பார்கள். மாறாக ஆயிரம் சிங்கங்கள் போன்ற படை வீரர்களுக்கு ஒரு நாயைப் போன்ற தலைவரை தலைவராக நியமித்தால் இறக்கின்ற ஒவ்வொரு வீரனும் நாய்களாகவே இறப்பார்கள்."**

நாட்டு மக்களையும் சிங்கங்களாக உருவாக்குவதோ அல்லது நாய்களாக உருவாக்குவதோ என்பது அரசியல் தலைமைத்துவத்தில் தங்கியுள்ளது. 20 வது அபிவிருத்திகான அதிகாரத்தை கொடுத்துள்ளது. ஆனால் இதன் வெற்றி என்பது அரசியல் தலைமைத்துவ பண்பில் தங்கியுள்ளது.

இலங்கைக்கு பின்னால் இருந்த பல நாடுகளின் தலாவருமானம் ஏதேட்சை அதிகார ஆட்சியால் பல மடங்குகளால் அதிகரிக்க, இலங்கையின் தலா வருமானம் சில மடங்குகளால் மட்டும் அதிகரித்தமைக்கு காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தலைமைத்துவத்தில் இருந்த குறைபாடுகள் ஆகும்.

இனவாதம் மதவாதம் பேசிப் பண்டா செல்வா உடன்படிக்கைக்கு எதிராக கண்டிக்கு பாதயாத்திரை செய்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா பிறப்பில் ஒரு கிறீஸ்த்த வராவார். அவர் பெற்ற ஏதேட்சை அதிகார ஆட்சியில் தான் யாழ்ப்பாண நூல் நிலையம் 1981 இல் எரிக்கப் பட்டது. 1983 இல் யூலை கலவரத்தில் சிறைச்சாலை களில் தமிழ் கைதிகள் கொல்ப்பட்டார்கள். இவர் நாட்டின் ஏதேட்சை அதிகாரத்தை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கு பதிலாக சிறுபாண்மை இனத்தை மற்றும் அடையாளங்களை அழிப்பதற்கு பயன்படுத்தி யுள்ளார் என்பதை பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வரிசையில் உருவாகிய இலங்கை தலைவர்கள் இலங்கையின் சிறுபாண்மையினர் தொடர்பான கொள்கையில் கொழுக்கட்டையும் மோதகம் போன்றே செயற்பட்டு வந்தார்கள், வருகின்றனர், வருவார்கள்.

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின்
அவனைக் குலத்தின் கண் ஐயப்படும்"

என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் 20 வது திருத்தத்தின் வழியான அதிகாரம் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கு அதிகா ரத்தில் உள்ளவர்கள் பின்வருபனவற்றை முன்னெடுக்க வேண்டாம்.

1. முழுமையான ஏதேட்சை அதிகார ஒரு கட்சி ஆட்சியானது குறைந்தது 20 வருடங்களுக்கு எல்லா கட்சிகளையும் இணைத்து குடும்ப ஆட்சியின்றி சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லீம் தேசியம் என்று இல்லாமல் எல்லா மக்களையும் ஒன்றிணைத்த இலங்கை தேசியம் நோக்கியதாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இனவாத மற்றும் மதவாத மொழிவாதக் கொள்கை களை கைவிட்டு சிங்கப்பூரில் உள்ளது போன்று சிறுபாண்மை மக்களை அவர்கள் இலங்கையர்கள் என்ற உளப்படிவத்தை உருவாக்க கூடிய இலங்கை தேசியத்தைக் கொண்ட இன ஐக்கி யத்தை கட்டியெழுப்ப வேண்டும். அரசின் தேசிய ஐக்கிய கொள்கைகள் உதட்டளவில் இன்றி உள ரீதியாக இந்த மாற்றத்தை உருவாக்க வேண்டும். உள்நாட்டில் இனங்களுக்கு இடையே உள்ள இன ஒற்றுமையானது வெளிநாட்டவர்கள் குறிப்பாக இந்தியா புவிசார் அரசியலைப் பயன்படுத்தி இலங்கையில் தலையிடுவதை கட்டுப் படுத்தும். உலகத்தில் பல சிறிய நாடுகள் கூட பல இன மற்றும் மொழிகளுடன் சமஸ்டி முறையில் ஒரு நாடாக வலுவாக தொழிற்படுகின்ற போது கொடுமையான அழிவுகளுக்கு பின்னரும் கூட இலங்கையில் பிறிதொரு முரண்பாடுகள் மற்றும் யுத்தத்துக்கான சமிஞ்ஞைகள் உள்நாட்டிலும் உலக அரங்கிலும் தென்படுகின்றன.
3. இலவச சமூக நலச் சேவைகளை கட்டுப்படுத்தி அவற்றை வினைத்திறமையாக வறியவர்களை சென்றடையத்தக்க வகையில் மாற்றியமைக்க வேண்டும். உதாரணமாக சிங்கப்பூரில் வீடமைப்புத் திட்டம் தூய தனியார் பொருளாகும். வீடமைப்புத் திட்டம் மக்களை வீடுகளை சொந்தமாக்குவதற்கு உழைக்க தூண்டியது. நுகர்வுச் செலவைக் குறைத்து சேமிப்பு மற்றும் முதலீட்டை 30 வீதத்தில் இருந்து 50 வீதத்துக்கு கொண்டு வருதல்.
4. அரச சேவையை சீர்திருத்தி பொதுத் துறையில் உள்ள மிகைப் பணியாளர்களை கைத்தொழிற் சாலைகளை உருவாக்கி வேலைக்கு அமர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாரிகள் நியமனங்களை முற்றாக நிறுத்தி அவர்களை சொந்தக்காலில் நிற்கச் செய்தல். உயர்கல்வியில் தனியார் துறையை அனுமதித்து தொழிற்சந்தைக்கு தேவையான பட்டதாரிகளை உருவாக்குதல்.

5. பொதுத் துறை தொழில் முயற்சிகளை இலாபம் தரும் தொழில் முயற்சிகளாக மாற்றியமைத்தல்.

மாறாக இலங்கையின் கடந்த கால பேரினவாத அரசியல் தலைவர்கள் கடைப்பிடித்தது போன்று நிறை வேற்று அதிகாரத்தை இலங்கையின் சிறுபாண்மையினரின் அடையாளங்களை அழிப்பதற்கு பயன்படுத்தினால் இலங்கை இன்னொரு அழிவை சந்திக்கும்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பொருளாதார அபிவிருத்திக்கான அரசியல் தலைமைத்துவம் ஒரு இராணுவ கட்டளை தளபதிக்குரிய தலைமைத்துவமாக இருக்க வேண்டும். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் அவ்வாறான பண்பைக் கொண்டு இராணுவத்தில் பல சாதனைகளைச் செய்த போதும், பொருளாதார அபிவிருத்தியில் அவ்வாறான வெற்றியை அடைவதற்கு தேவையான தலைமைத்துவப் பண்பை கொண்டிருந்தாலும் ஜனநாயக மற்றும் குடும்ப அரசியல், அவரை சுற்றியுள்ள தலைவர்களையும் அவர்களின் விருப்பு வெறுப்புக்களை புறம்தள்ளி பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியாது என்பது நிஜமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்-11

# கொரோனாவும் தங்க நகைகள் மீதான முதலீட்டின் நன்மைகளும்

SundayVirakesari,August 16,2020

தமிழர் வாழ்வியலில் தங்க நகைகள் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் வடக்கு மக்கள் ஏனையவர்களுடன் ஒப்பிடும் போது சேமிப்பு பழக்கம் அதிகமானவர்களாக இருந்துள்ளனர். (வி.நித்தியானந்தன்.2002) இவர்களுடைய சேமிப்பு வழிமுறைகளாக பின்வருவன இருந்துள்ளன.

1. தங்க நகைகளில் சேமித்தல்.
2. சீட்டுக் கட்டுதல்.
3. பணச் சடங்கு.
4. முறைசாரா முறைகளில் வட்டிக்கு பணம் கொடுத்தல்.
5. கலாச்சார சடங்குகளில் பணம் பொருள் வழங்குதல்.
6. கால்நடைகளில் சேமித்தல்.(மாடுகள், ஆடுகள்)
7. நிலம், வீடு, கட்டிடங்களில் சேமித்தல்.
8. பெருந்தோட்டம். (குறிப்பாக தெங்கு பயிர்செய்கை)
9. கல்வியில் சேமிக்கப்பட்மை.
10. வங்கிகள், நிதிக் கம்பனியில் சேமித்தல்.
11. காப்புறுதி மற்றும் முறிகள், பங்குகள், ஆவணங் களில் சேமித்தல்.

மேற்குறிப்பிட்ட சேமிப்பு முறைகள் ஊடாக தமிழ்களின் சேமிப்புக்கள் இருந்த போதும் தங்க நகைகளில் சேமிப்பு செய்வது பாரம்பரிய ரீதியான முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. தமிழர் மரபில் காணப்படும் சீதன முறைமையானது தங்க நகைகள், கால்நடைகள், வீடுகள், காணிகள், கட்டிடங்களில் சேமிக்க தூண்டியுள்ளது. இந்த சேமிப்பு நடத்தையானது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மறைமுகமான பொருளாதார நன்மைகளை கொடுத்துள்ளது. இத்தங்க நகைகள் வடிவிலான சீதனமானது புராதன காலத்தில் உயர்வாக இருந்துள்ளது. இன்று இவை அவற்றின் பாவனையில் குறைவாக இருந்த போதும் சீதனத்தில் பிரதான பங்கை வகிக்கின்றன. தமிழர்கள் சேமிப்பை தங்க நகையில் முதலிடுவதால் பின்வரும் அனுகூலங்களைக் கொண்டிருக்கின்றார்கள்.

1. தங்கம் உலகில் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருப்பதால் அதன் மொத்தமான நிரம்பல் மாறாமல் இருக்கின்றது. இதன் காரணமாக உலக சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. இது 2012 வரை உச்சமான நிலைக்கு (60,000) சென்று பின்னர் குறைவடைந்தது. தற்போது (2020 யூலை) ரூபா 100 000.00 அண்மித்தாக இருக்கின்றது. தொடர்ச்சியான விலை அதிகரிப்பு தங்க நகையில் சேமிப்பவர்களுக்கு ஓர் மூலதன நயத்தை பெற்றுக்கொடுத்துள்ளது. நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட உதாரணத்தின் படி ஏறத்தாழ 10 மடங்கு விலை அதிகரிப்பு இருந்துள்ளது. வரைபடம் 1 ஆனது அமெரிக்க டொலரில் உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலையை எடுத்துக் காட்டுகின்றது.

வரைபடம் :- உலக சந்தையில் தங்கத்தின் விலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடம் :- இந்தியாவில் தங்கத்தின் விலை




இவ்தங்கத்தின் அதிகரிப்பு கடந்த 6 மாத காலத்தில் மிகவும் அதிகமாக அதிகரித்துள்ளது. கடந்த யூலை 2000 இல் மிக உயர்ந்த அதி கரிப்பைக் கொண்டுள்ளது.

2. பணவீக்கம் காரணமாக தங்க நகை சேமிப்புக்களின் பெறுமான அதிகரிப்பு ஏற்படுகின்றது. பணவீக்க காலத்தில் தங்க நகைகளின் பெறுமதி அதிகரிக்கின்றது. அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான பண வீக்கத்தை விட நடைமுறையில் உள்ள பணவீக்கம் உயர்வாக இருப்பதால் தங்க நகையில் சேமிப்பவர்கள் அதிக நன்மைகளை பெறுகின்றனர். தங்கத்தின் விலை பருநிலைப் பொருளாதாரக் காரணிகள் மற்றும் நாட்டின் கொள்கைகள் காரண மாக வேறுபடுகின்றது. வரைபடம் 2 இந்தியாவின் தங்கத்தின் விலையின் போக்கைக் காட்டுகின்றது.

3. தங்க நகைகளில் சேமிப்பதால் குடும்ப அங்கத்த வர்கள் நகைகளை அணிவதால் ஏற்படும் உளத் திருப்தியை அனுபவிக்கின்றார்கள். சமய மற்றும் கலாச்சார விழாக்களில் இந்நகைகள் அணிவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். பொருளியலில் இம் மகிழ்ச்சிக்கும் ஓர் பெறுமதி இருக்கிறது. இது தங்க நகைகளில் சேமிப்பதால் ஏற்படுகிறது.

4. தங்க நகைகளை திரவத்தன்மையாக மாற்றுதல் சுலபம். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தங்க நகைகளை பணமாக மாற்றிக் கொள்ளுதல் ஏனைய நிதிச் சொத்துக்களை விட இலகுவானதாக இருக் கின்றது.

5. தங்க நகைகளில் சேமிப்பது பாதுகாப்பனதாக இருக்கிறது. தங்க நகைகளில் சேமிப்பானது பாதுகாப் பானதாக மாறிவிட்டது. வணிக வங்கிகள் பாதுகாப்பு பெட்டக வசதிகளை செய்து கொடுப்பதால் இப் பாதுகாப்பு மென்மேலும் அதிகரிக்கின்றது. வீடுகளில் கூட ஏனைய பௌதீக சொத்துக்களை விட தங்க நகைகளை பாதுகாப்பாக பேண முடிகின்றது.

6. தங்க நகைகளில் சேமிப்பது நிதி இழப்பு குறைவான தாகும். உலகப் பொருளாதார நெருக்கடியான சூழ் நிலைகளில் டொலரில், யூரோவில் சேமிக்கும் போது அவை பொருளாதாரமந்த காலத்தில் பெறுமதியை இழக்கின்றன. சில காலங்களில் சில நாணயங்களில் சேமிப்பு பாரிய மூலதன இழப்பை ஏற்படுத்துகின்றது. தங்க நகைகளைப் பொறுத்தவரை நாட்டின் பொரு ளாதார ஸ்திரமற்று செல்லுகின்ற போது தங்கத்தின் விலை அதிகரிப்பால் தங்க நகைகளின் விலைகள் அதிகரிக்கின்றன.

7. தங்க நகைகளில் சேமிப்பானது பிணையாக பயன் படுத்த உதவுகின்றது. தமிழ் மக்களின் ஓர் அவசர தேவைக்கு உடனடியாக தங்க நகைகளை பிணை யாக வைத்து பணத்தை கடனாக பெறமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சமூகத்தில் புதிதாக திருமணம் செய்த தம்பதிகள் ஓர் ஐந்து லட்சத்துக்கு புதிய தொழில் ஒன்றை தொடங்குவதற்கு தேவையான மூலதனத்தை இந்த தங்க நகைகளை அடைவு வைத்து சில மணித்தியாலயங்களில் பெற முடிகின்றது. தங்க நகைகளை கொண்டிராத சமூகத்தில் இது மிக கஷ்டமானதாகும். பல வங்கிகளுக்கு ஏறி இறங்கி, பலரின் தயவிலேயே ஓர் கடனை பல மாதங்களுக்கு பின்னர் பெறமுடிகின்றது.

8. தங்க நகைகள் ஆபத்துக்கு கைகொடுக்கும் தோழனாகவும் தொழிற்படுகின்றன. கோ. அமிர்தலிங்கம் (2010) செய்த ஆய்வின்படி மட்டகளப்பு மாவட்டத்தில் படுவான் கரை பிரதேசத்தில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் மட்டக்களப்பு நகரத்துக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு முதல் ஐந்து நாட்களும் அரசாங்கம் உதவவில்லை, சிவில் அமைப்புக்கள் உதவவில்லை, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவவில்லை, ஏன் சொந்தக்காரர் கூட உதவவில்லை. இடம்பெயர்து நகரத்துக்குள் வந்தவுடன் உடனடியாக உதவியது தங்க நகைகள் ஆகும். தங்க நகையில் சேமிப்பானது அனர்த்த அழிவுகளில் இருந்து தமிழ் மக்களை உயிர் வாழ உதவி செய்துள்ளது என்பதை யுத்தகால அனுபவங்கள் எமக்கு நிரூபித்துள்ளன.

9. சொத்துக்களை இடம்மாற்றுவதில் தங்க நகை வடிவிலான சேமிப்பு சொத்துக்கள் இலகு தன்மையுள்ளனவாக காணப்படுகின்றன. கனடாவில் குடியுரிமை பெற்ற குடும்பங்கள் வட பகுதியை விட்டு நீங்கும் போது தங்களுடைய வீட்டை காணியை கட்டிடத்தை எடுத்து செல்ல முடியமல் இருந்தது. இவற்றை உடனடியாக நல்ல விலையில் விற்க முடியாமல் இருந்தது. ஆனால் 100 பவுனுக்கு மேற்பட்ட தங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைகளை குடும்பம் சர்வ சாதாரணமாக ஓர் இடை யூறும் இல்லாமல் கனடாவுக்கு எடுத்து சென்றுள்ளது. இவ்வாறு நாட்டுக்குள்ளும் நாடுகளுக்கு இடையிலும் தமது சேமிப்பினை பணம் போன்று அதேநேரம் அவற்றை அணிவதால் ஏற்படும் மகிழ்ச்சியுடன் பிறிதொரு இடத்துக்கு பரிமாற்றம் செய்ய முடிகின்றது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கநகை வடிவில் வைத்திருக்கும் சொத்துக்கள் குறிப்பிடக் கூடிய பங்கினைக் கொண்டிருக்கின்றன. இவைகளில் குறிப்பிடக் கூடியளவு தாயகத்தில் இருந்து தாங்கள் குடிபெயர்ந்த நாடுகளுக்கு எடுத்து செல்லப்பட் டுள்ளன.

10. பிறருக்கு உதவி செய்வதில் தங்க நகைகள் பயன் படுத்தப்படுகின்றன. உதவி பெறுபவர்கள் இதன் மூலம் நன்மை அடைகிறார்கள். திருமண வைப வங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் போன்ற நிகழ்வுகளில் குறிப்பிடக்கூடியளவு தங்க நகைகளை உறவினர்கள், நண்பர்கள் வழங்குகிறார்கள். இது மணமக்களுக்கு பல வழிகளில் உதவி புரிகின்றது. பின்னர் இது திருப்பி செலுத்தப்பட்டாலும் பணத்துக்கு நெருங்கிய பதிலீடு ஒன்றை பெறுவதால் பணப் பிரச்சினைகளை தவிர்க்க முடிகின்றது.


11. தங்கத்தில் முதலீடு செய்து குறும்கால நீண்ட கால விலைமாற்றத்தால் பணத்தை சம்பாதிக்க முடிகின்றது. நாட்டில் நிதிச் சந்தையில் உள்ள ஏனைய சொத்துக் கள் போன்று தங்க நகைகளை சேமிப்பாகவும் அதேநேரம் ஒரு வியாபாரமாகவும் பணம் சம்பாதிக்க முடிகின்றது. வரைபடம் 3 இலங்கையில் தங்கத்தின் விலையில் குறும்கால அசைவுகளைக் காட்டுகின்றது. 2013 யூன் மாதத் துக்கும் ஆகஸ்ட் மாதத்துக்கும் இடையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ரூபா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30000 ஆல் அதிகரித்துள்ளது. வரைபடம் 3 இலங்கையில் தங்கத்தின் குறும்கால விலை அசைவு களை காட்டுகின்றது.

வரைபடம் :-இலங்கையில் தங்கத்தின் குறும்கால விலை




## 1. தங்க நகை சேமிப்புக்களில் உள்ள ஆபத்துக்கள்

மேற்குறிப்பிட்டவாறு தங்க நகைகளில் சேமிப்பில் பல நன்மைகள் கிடைக்கப் பெற்றாலும் பல தீமைகளும் உருவாக வாய்ப்பு இருக்கின்றது.

1. விலை வீழ்ச்சி.

2012 இல் பவுன் ஒன்று ரூபா 60,000 க்கு வாங்கிய ஒருவர் 2015 இல் அவற்றை விற்பதாக இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ ரூபா 15,000/= ஐ இழக்க வேண்டி இருந்தது. வட்டியையும் இழந்து முதலிலும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது ஓர் அசாதாரண சூழ் நிலையாகும். உலக வரலாற்றில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்து தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக 2012 இல் இருந்த நிலையை அடைய முடி யாமல் இருந்தது இதுவே முதற் தடவையாகும். முன்னர் வீழ்ச்சியடைந்தாலும் சில மாதங்களில் பழைய நிலைக்கு சென்றுள்ளது. உலகத்தில் சில நாடுகள் தங்கத்தின் இருப்பை சந்தைக்கு விட்ட மையே இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது. பல வங்கிகளில் அடைவு வைத்தவர்கள் இவ்விலை வீழ்ச்சியினால் தங்க நகைகளை மீட்காது விட்டமை யால் வங்கிகள் நட்டமடைந்தன.

2. களவு கொள்ளை மற்றும் உயிர் ஆபத்து.
ஆசிய நாடுகளில் சட்டம் ஒழுங்கு, பொலிஸ் நிர்வாகம், ஒழுங்கின்மை காரணமாக தங்க நகை களில் சேமிப்பதால் உயிர் ஆபத்துக்களும் இடம் பெற்றுள்ளன. யாழ்மாட்டத்தில் பல உயிர் இழப்பு க்கள் தங்க நகை அபகரிப்பால் இடம்பெற்று ள்ளன. பொலிஸ் நிர்வாக சிறப்பாக இருநதால் இவ் விளைவினை தடுக்கலாம்.

3. தொழில் நுட்பத்தின் முன்னேற்றம் தங்கத்தின் விலை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம். புவியை விட ஏனைய கிரகங்களில் தங்கம் அதிகளவில் இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தொழில் நுட்ப முன்னேற்றமானது குறைந்த செலவில் தங்க த்தை பூமிக்கு கொண்டுவர உதவும் போது தங்க த்தின் விலை வீழ்ச்சியடைந்து அதன்வழி தங்க நகைகளில் சேமிப்பவர்கள் இழப்புக்களை எதிர் கொள்ளலாம். இருப்பினும் உலகத்தில் தங்க த்தின் இருப்பை அதிகமாக கொண்ட நாடுகளான அமெரிக்க (8133.5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்கள்) ஜேர்மனி (3383.4 தொன்கள்) பிரான்ஸ் (2435.7 தொன்கள்) ஜப்பான் (765.2தொன்கள்) சீனா (1054.1தொன்கள்) போன்றன இவ்வாறான தொழில்நுட்பத்துக்கு உதவும் போது அவர்கள் பாரிய நிதி இழப்பை சந்திக்க வேண்டி வரும் என்பதால் இந்த கண்டுபிடிப்புக்களை செய்ய தயங்குவார்கள். இலங்கையில் கிழக்கு மாகாண த்தில் தங்க படிவுகள் இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இது உற்பத்தி செய்யப்படும் போது தங்கத்தின் விலை குறைவடையலாம்.

4. உலகில் பலமான நாடுகளின் நாணயங்கள் நன் மதிப்பை பெறுகின்ற போது தங்கத்தில் சேமித்த வர்கள் வலுவான நாணயங்களுக்கு தங்கள் சேமிப்பை மாற்றும் போது தங்கத்தின் விலை வீழ்ச்சியடையலாம். மறுபுறத்தில் உலகில் பலமிக்க நாணயங்களில் நம்பிக்கையீனம் ஏற்படும் போது அந்த நாணயத்தில் சேமித்தவர்கள் தங்கத்தை நாடுவார்கள். இதன் காரணமாக தங்கத்தின் விலை அதிகரித்து தங்க நகையில் சேமிப்பவர்கள் அதிக நன்மையினை அடைவார்கள். 2001- 2012 க்கும் இடையில் யூரோ நாணயத்தில் இருந்து சில நாடுகள் விலகப் போவதாக வெளிவந்த செய்தி களும் யூரோவில் சேமித்தவர்களை தங்கத்தில் சேமிக்க தூண்டி தங்கத்தின் விலை அதிகரித் துள்ளது. இக்காலப்பகுதியில் அமெரிக்கப் பொருளா தாரத்தின் ஸ்திரமற்ற தன்மை மற்றும் ஐக்கிய இராட்சியத்தின் பொருளாதார மந்த நிலைகள் யூரோவில் சேமிப்பை விலக்கியவர்களை அமெரிக்க டொலரில் அல்லது ஸ்ரேலிங் பவுணில் சேமிக்க தூண்டவில்லை. இந்நிலைமை தங்கத்தின் விலை அதிகரிப்புக்கு காரணமாக இருந்தது. எனவே வன் நாணயங்கள் மற்றும் அவை சார்ந்த பொருளாதா ரங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்த்திரத்தன்மை தங்கத்தின் விலையில் செல்வாக்கு செலுத்துகின்றன.

5. தங்க இருப்பை அதிகமாக கொண்ட நாடுகளின் பொருளாதாரம் மந்தமடைகின்ற போது அவை பிரதானமாக இரண்டு வழிகளில் அவை மீள முயல்கின்றன. முதலாவது நாணயத்தை பெறுமதி இறக்கம் செய்வதன் ஊடாக நாணய உட் பாய்சல்களை ஊக்குவித்து சென்மதி நிலுவையில் சமநிலையைக் கொண்டு வருதல். இரண்டாவது தங்க இருப்பை விற்றல். முதலாவது உலக சந்தையில் தங்கத்தின் விலையை அதிகரிக்கின்றது. இரண்டாவது உலக சந்தையில் தங்கத்தின் விலையைக் குறைக்கின்றது.
உதாரணமாக அமெரிக்கப் பொருளாதாரத்தில் மந்தம் ஏற்படும் போது டொலரின் பெறுமதி குறைக் கப்படும்போது டொலரில் சேமித்தவர்கள் நிட்சயமற்ற தன்மை காரணமாக தங்கத்தை நாடுவதால் தங்கத்தின் விலை அதிகரிக்கலாம். அமெரிக்கா தங்கத்தை விற்கும் போது உலக சந்தையில் தங்கத்தின் நிரம்பல் அதிகரித்து தங்கத்தின் விலை வீழ்ச்சியடையலாம். அமெரிக்காவின் பொருளாதார மந்தத்திற்கும் உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியையும் எடுத்து காட்டுகின்றது. நிழற் படுத்தப்பட்ட காலம் மந்த காலம் ஆகும். இக்காலம் பலவற்றில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந் துள்ளது.

6. அரசுகளின் கொள்கைகளில் ஏற்பபடும் தீடீர் மாற்றங்களும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தி தங்க நகைகள் மீதான சேமிப்புக்களில் இழப்புக்களை உருவாக்கலாம். 2013 க்கு பின்னர் தங்கத்தின் விலை வீழ்ச்சிக்கு காரணம் பல நாடுகள் தங்கள் தங்க இருப்பை குறைத்து அவற்றை உலக சந்தையில் விற்றமை ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 12

## இலங்கையில் கொரோனாவும் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பும்

September 06, 2020 & September 13, 2020

"சேர் பல்கலைக்கழக பேராசிரியரான நீங்களே உருவாக்கிய பட்டதாரிகளையே மாடு மேய்க்கும்படி தொலைக்காட்சியில் கூறலாமா?" என்ற கேள்வி பல பட்டதாரிகளிடம் இருந்து என்னுடைய ஒரு தொலைக் காட்சி உரையாடலுக்கு பின்னர் எனது தொலைபேசிக்கு வந்திருந்தது. சமூகத்தில் எந்த திறமையும் இல்லாத வர்களை மாடு மேய்கக்கத்தான் சரியானவர்கள் என்று கூறுகின்ற ஒரு மரபு எம்மிடையே காணப்படுகின்றது. பெற்ற பட்டத்துக்கு எந்த வேலையும் இல்லை என்றால் பட்டதாரிகள் தாங்களாக வேலையை உருவாக்குகின்ற மனப்பாங்கை உருவாக்கி சுயதொழிலில் ஈடுபட்டு நல்ல வருமானத்தை உழைக்க முடியும். உதாரணமாக தற் போது கறவைப் பசு மாடு வளர்ப்பு நல்ல வருமானத்தை தரும் என நான் கூறிய கருத்தை அடிப்படையாக கொண்டு இவ்வாறான வினாவை எனது மாணவர்கள் கேட்டிருந்தார்கள். உண்மை என்ன? நான் கூறியது பிழையா?

### உளப்பாங்கும் வேலைவாய்பும்

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்ற மாண வர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உளப் பாங்கில் மாற்றம் ஏற்பட்டால்தான் அவர்களின் வருமானம் மற்றும் வாழ்க்கை தரத்தில் மாற்றம் உருவாகும். வீட்டின் செல்வம் பெருகினால்தான் நாட்டில் செல்வம் பெருக் கெடுக்கும். வெளிநாடுகளில் பல்கலைக்கழகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்கின்ற மாணவர்கள் மட்டும் அல்ல 18 வயதுக்கு மேற்பட்ட ஏனைய மாணவர்கள் கூட பகுதியாக வேலை செய்து கொண்டு தான் கல்வி கற்கின்றார்கள். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் பல்கலைக்கழககங்களில் உள்ள உணவு சிற்றூண்டிச் சாலைகளில் கோப்பை கழுவும் தொழில்களில் கூட ஒரு இரு மணித்தியாலங்கள் பகுதியாக வேலை செய்கின்ற மையை நான் நேரில் கண்டுள்ளேன். KFC, Macdonal போன்ற உணவு சாலைகளில் பல மாணவர்கள் கழுவு கின்ற, துடைக்கின்ற மற்றும் பரிமாறுகின்ற வேலைகள் கூட செய்வதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் எமது நாட்டில் பல்கலைகழகம் சென்றவுடன் அம்மாணவனோ அல்லது மாணவியோ நாங்கள் குடும்ப வேலையை கூட கைவிட்டு வெள்ளை ஆடைத் தொழிலை எதிர்பார்த்து இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது. இந்நிலைமைக்கு பின்வருபன காரணங்களாக உள்ளன.

**அரச துறையில் வேலையை மிகுதியாக விரும்புவதற்கான காரணங்கள்**

1. அரசாங்க வேலையில் நிரந்தர வருமானம் உழைத்தல்
2. அரசாங்க வேலையில் பொறுப்பு கூறும் தன்மை குறைவு.
3. வினைத்திறன் இல்லாத வேலை. நல்லாய் பொழுதை போக்கலாம். இலக்கு இல்லை.
4. சமூக அந்தஸ்த்து அதிகம்
5. விடுமுறை நாட்கள் அதிகம்.
6. தொழிலுக்கு பூரணபாதுகாப்பு ஆயுள்காலம் வரை உள்ளது.
7. வேலை செய்யும் நேரம் குறைவு.
8. ஓய்வூதியமும் ஏனைய சலுகைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மனஅமைதி மற்றும் நிம்மதியான வாழ்வு
10. தனியார் துறையில் மற்றும் சுயதொழிலில் உள்ள ஆபத்து மற்றும் நிட்சயமற்ற தன்மைகள்
11. ஏனையவை

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்றவர்கள் அனைவரும் ஒரு விரிவுரையாளராகவே, அரச துறையில் நிறைவேற்று அதிகாரியாகவோ அல்லது திணைக்கள உயர் அதிகாரியாகவோ வர முடியாது. ஏறத்தாழ 10 வீதமானவர்கள் இவ்வாறான உயர்வருமான தொழில் களுக்கு செல்ல ஏனையவர்கள் சாதாரண பொது பணியாளர்களாக பணியாற்றி அளவான சம்பளத்துடன் பொதுத்துறைக்கு சுமையாக நாட்டு மக்களின் வரி வருமானத்தில் சம்பளம் பெற்று ஒய்வு பெறுகின்ற நிலையினை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலைமை மாறுகின்ற போதுதான் வீடும் நாடும் பௌதீக செல்வத்தை உருவாக்கி கொள்ள முடியும்.

**மாடு வளர்க்கின்ற என்ஜினியர்கள்**

இந்தியாவில் கணனித்துறையில் என்ஞினியராக பணியாற்றிய கணவனும் மனைவியும் மாதம் ஒன்றுக்கு இந்தியன் ரூபா மூன்று இலட்சத்துக்கு மேலான நிரந்தர வருமானம் தரும் கணனித்துறை தொழிலை விட்டுவிட்டு சென்னையில் கறவைப்பசு மாடுகளை வளர்த்து கணனித் துறையில் அவர்கள் பெற்ற வருமானத்தை விட அதிக வருமானத்தை உழைத்ததை இணைய வீடியோவில் பதிவு செய்து இருக்கின்றார்கள். மாதம் ஐம்பது ஆயிரம் சம்பளம் கிடைத்தால் போதும் என்ற எமது பட்டதாரி களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ஆராய்ந்த போது இது உண்மை என அறிய முடிகிறது. இப்படி வாழ்க்கையை நீங்களே கொண்டு செல்வதற்கு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்கள் உள்ளன. எந்த தொழில்களையும் நடாத்து வதற்கு தேவையான அடிப்படை அறிவினை பல்கலைக் கழக கல்வி வழங்குகின்றது. அதைக்கொண்டு வெற்றி யீட்டுவது பட்டதாரிகளின் தனிப்பட்ட ஆற்றலைப் பொறுத்தது. தன்னம்பிக்கை, விடாமுயற்சி மற்றும் சுய சிந்தனையிலான புத்தாக்கம் என்பன முன்னேற் றத்துக்கு அவசியமானவையாகும்.

## மூலதனச் செறிவான தொழில்நுட்ப தொழில்கள்

நாம் பாரம்பரிய முறையிலேயே சிந்திக்கின்றோம். நவீனம் என்ற பேரில் வளர்ந்த நாடுகளில் இருபது முப்பது வருடங்களுக்கு முற்பட்ட விவசாயக் கைத் தொழில் கண்டுபிடிப்புக்களே வளர்ந்து வரும் நாடுகளில் நவீன தொழில்நுட்பமாக அறிமுகமாகின்றது. அமெரிக் காவில் ஒரு பண்ணை ஒன்றில் 400 கறவை பசுக்களை கொண்ட ஒரு பண்ணையை இயந்திரங்ளை இயக்கு பவர்கள் உள்ளடங்கலாக பத்துக்கு குறைந்த வேலை யாட்களே இயக்குகின்றனர். எமது பிரதேசத்தில் ஒரு கறவை பசுவுக்கு பின்னால் ஒரு குடும்பமே உள்ளது. அமெரிக்காவில் பண்ணையாளர்களின் வருமானம் ஒரு வைத்தியர் மற்றும் எஞ்ஞினியர்கள் பெறும் வருமானத்தை விட அதிகமாகும். பிரான்சில் ஒரு பண்ணையாளர் பெறுகின்ற வருமானம் ஒரு சாதாரண என்ஞினியர் பெறுகின்ற வருமானத்தை விட அதிகமாகும்.

வெளிநாடுகளில் பல படித்த பட்டம் பெற்ற பட்டதாரிகள் எந்த தொழிலையும் பாகுபாடு இன்றி மனத்திருப்தியுடன் செய்கின்ற மனப்பாங்கை கொண்டிருக் கின்றனர். குறிப்பாக விவசாயம் மற்றும் விலங்கு வளர்ப்பை மன விருப்பத்துடன் செய்கின்றனர். இந்த நாடுகளில் இயற்கையுடன் போராடி இயற்கையுடன் இணைந்த விவாசாயத் தொழில்களை மிகவும் இலாப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமாக செய்யும் போது மிருதுவான இத்தொழில்களுக்கு பொருத்தாமான காலநிலையைக் கொண்ட இலங்கையில் கலைப்பட்டதாரிகள் அல்ல இத்துறைகளில் கல்வி கற்ற விவசாயப் பட்டதாரிகள் கூட விவசாயத்தையும் விலங்கு வேளாண்மையையும் முன் வந்து செய்ய மறுக்கிறார்கள். பல்கலைக்கழகங்கள் பட்டதாரிகளை வீட்டுக்கும் நாட்டு க்கும் தேவையான பட்டதாரிகளாக உருவாக்குவதை விடுத்து அவர்கள் கோழி மேய்த்தாலும் அரசாங்கத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற உளப்பாங்கில் வளர்க்கப்படுகின்றனர். தற்போது 18 பல்கலைக் கழகங் களில் வெளியேறுகின்ற பட்டதாரிகளின் இந்த சீத்து வத்தில இன்னும் 10 பல்கலைக்கழகங்களை உருவாக்கப் போவதாக கல்வி அமைச்சர் கூறியிருக்கிறார்.

பட்டதாரிகளின் வேலையின்மை குறிப்பாக கலைப் பட்டதாரிகளின் வேலையின்மை அதிகரித்து செல்கின்றது. பல இன்னல்களுக்கு மத்தியில் கிராமப்புறங்களில் இருந்து வறிய குடும்பத்தில் கல்வி கற்று பல்கலைக்கழக அனுமதியை பெற்று பல ஆண்டுகள் பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறி பல போராட்டங்கள் செய்து அரசை பணிய வைத்து பெற்ற நியமனத்தில் மாதம் ஒழுங்கான வருமானம் ஒரு கூலித் தொழிலாளி எதுவித கல்வி அறிவு இன்றி சராசரி நாள் ஒன்றுக்கு பெறுகின்ற வருமானத்தை விட அரைப்பங்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர்.

இன்று பல்கலைக்கழக பட்டம் என்பது வெறு மனமே குடும்ப கௌரவத்துக்கான பட்டம் என்பதற்கு அப்பால் அவர்களின் வருமானத்தை உழைப்பதற்கான ஒரு பட்டமாக மட்டுமே காணப்படுகின்றது. கல்வியானது வருமானத்தை உழைக்கும் மூலத்தை கல்வி கற்பவருக்கு பெற்றுத்தராத வரை அக்கல்வியினால் பொருளாதார ரீதியான எந்த நன்மையையும் பெற்றுத் தர முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பட்டதாரிகள் வருமானம் உழைக்கும் மூலங்களை விரிவுபடுத்த வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வாழ்கின்றனர். அவ்வாறு அரச வேலை வாய்ப்பிலும் வேலையை பெற்றுக்கொண்டு பல பக்க தொழில்களை உருவாக்கி நிர்வகிக்கின்ற போதுதான் வாழ்கைக்கு தேவையான வருமானத்தை உழைக்க முடியும். இச்செயற்பாட்டில் பலர் உள்ளனர். பட்டதாரிகள் படிக்கின்றபோதே உழைக்கின்ற மாணவர்களாகவும் மற்றும் வேலையை தேடுபவர்களாக அன்றி வேலையை உருவாக்குபவர்களாக மாற வேண்டும் என அரசு எதிர்பார்கின்றது. பல்கலைக்கழகங்கள் இந்த மாற்றங் களுக்கான அறப் புறச் சூழல்களை பாடவிதானங்களில் உருவாக்க வேண்டும்.

**பட்டதாரிகளின் வேலையின்மைக்கான கேள்விப் பக்க காரணிகள்**

பட்டதாரிகளின் வேலையின்மையானது அதிகரித்து செல்வதற்கு மேற்குறிப்பிட்ட நிரம்பல் பக்க காரணிகளை விட கேள்விப் பக்க காரணிகளும் இவ்வேலையின் மைக்கு காரணமாக இருக்கின்றன. நாட்டில் புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டுமாக இருந்தால் புதிய முதலீடுகள் உருவாக்கப்பட வேண்டும். இலங்கை யில் மொத்த முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக ஏறத்தாழ சாராசரி 25 வீதம் ஆகும். இம்முதலீடு வளர்ந்து வருகின்ற சீனா-45, இந்தியா-35 வீதமாக உள்ளது. சிங்கப்பூரில் இது 45 வீதமாகும். முதலீட்டின் அதிகரிப்பு இல்லாமல் உற்பத்தி மற்றும் வோலைவாய்ப்பை அதிகரிக்க முடியாது.

இலங்கையில் ஏன் முதலீடு குறைவாக உள்ளது என்பதற்கான காரணிகளில் நுகர்வு செலவு அதிகமாக இருப்பதும் முதலீட்டுக்கு உகந்த அரசியல் உறுதிப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் இருப்பதும் ஒரு காரணமாகும். இலங்கையில் சமூகங்களுக்கு இடையிலும் சமூகங்களுக்குள்ளும் நீண்ட நெடும் காலமாக புரையோடி இருக்கின்ற முரண்பாடுகள் காரணமாக ஒரு பகுத்தறிவுள்ள உள்நாட்டு முதலீட்டா ளனோ அல்லது வெளிநாட்டு முதலீட்டாளனே நீண்ட கால முதலீடுகளை இடுவதற்கு தயக்கம் காட்டுகின்றான். இந்நிலைமை புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்க தடையாக உள்ளளது.

பட்டதாரிகள் கூட சுயதொழில்களை செய்வதற்கு அரசியல் உறுதியின்மை காரணமாக இருக்கின்றது. ஆபத்தை தவிர்ப்பதற்காக அரச வேலைவாய்ப்பை நாடுகின்றனர்.

அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான் மையைக் கொண்டுள்ளது. எனவே இதை விட இலங்கைக்கு என்ன அரசியல் உறுதிப்பாடு தேவை என நீங்கள் சிந்திக்க கூடும். இந்த பெரும்பான்மைதான் அரசியல் உறுதியின்மைக்கான அடிப்படை பிரச்சினை ஆகும். இலங்கையில் கடந்த காலத்தில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஐந்தில் நான்கு பெரும்பாண்மையை கொண்டிருந்து என்ன செய்தார்? நாடு என்ன நிலைக்கு சென்றது? என்பதை இலங்கையின் அரசியல் வாதிகளும் இனவாதிகளுக்கும் மறந்தாலும் ஒரு பகுத்தறிவுள்ள முதலீட்டாளன் தனது சட்டைப்பையில் இருந்து ஒரு டொலரை இலங்கையில் முதலீடு செய்ய முயற்சிக்கும் போது இந்த கடந்த கால நிகழ்கால அரசின் நடவடிக்கைகளை மிகவும் துல்லியமாக எடைபோட்டுத் தான் முதலீடு செய்வான். மழைக்கு முளைத்த காளான்கள் போன்ற சில பிஞ்சில் பழுத்த முதலீட்டா ளர்கள் இலங்கையில் அங்கொன்று இங்கொன்றாக சிறிய வர்த்தக முதலீடுகளை மேற் கொண்டாலும் நீண்டகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்வாய்ப்புக்களை உருவாக்க கூடிய முதலீடுகள் குறைவாகவே இருக்கும்.

எனவே இலங்கையின் பட்டதாரிகளின் வேலையின்மைப் பிரச்சினை கூட இலங்கையின் அரசியல் உறுதிப்பாட்டுடன் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 13

## கொரோனாவும் விவசாயத்தொழில்நுட்பமும்

SundayVirakesari, october 04,2020, October 11,2020 & October 18,2020

### தொழில்நுட்பமும் விவசாய உற்பத்திகளின் விலைகளும்

நூறு ரூபாவுக்கு விற்பனை செய்கின்ற அரிசியை ஐம்பது ரூபாவுக்கு விற்பதன் மூலம் விவசாயி இலாபம் அடைய வேண்டும். உற்பத்தி, முகாமைத்துவ சந்தைப் படுத்தல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள் ஒரு விவசா யிக்கு இந்த நிலையை பெற்றுக் கொடுத்தால் இலங்கையில் 70 வீதமாக இருக்கின்ற விவசாயிகள், மற்றும் கிராமிய மக்களின் வாழ்வாதாரம் வளம் பெறும். உணவுப் பொருட்களின் விலை வீழ்ச்சி ஏனைய 30 வீதமான மக்களின் வாழ்க்கை செலவை குறைத்து அவர்களின் வாழ்வையும் வளப்படுத்தும். நாடு அபி விருத்தியை நோக்கி பயணிக்கும். இலங்கை விவசாய அபிவிருத்திக்கான பல சாதகமான இயற்கை வளங்களின் மத்தியிலும் விவசாயத்தில் தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யா விட்டாலும் பரவாயில்லை. உணவில் தன்னிறைவை அடைந்து விட்டதா? இலங்கையின் உணவு உற்பத் தியில் பிரதான உணவாக இருக்கின்ற அரிசி உற்பத் தியில் கூட நாம் இன்னும் பூரண தன்னிறைவை அடைய வில்லை. அரிசிக்கான சராசரி 95 வீதமான உள்ளூர் கேள்வியையே உள்நாட்டு உற்பத்தி பூர்த்தி செய்கின்றது. இது கூட பல இறக்குமதி உணவுப் பொருட்களின் பதிலீடு காரணமாக உருவானது. எமது பாட்டன் மூன்று வேளையும் சோறு சாப்பிட்டார்கள். எமது பெற்றோர் இரண்டு வேளைகள் சோறு சாப்பிட்டார்கள் நாம் ஒரு வேளை மட்டும் சோறு சாப்பிடுகிறோம். எமது பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேளை சாப்பிடும் சோற்றின் அளவு கூட குறைந்து விட்டார்கள். குறைக்கப்பட்ட சோற்றின் அளவை இறக்கு மதி செய்கின்ற ஏனைய உணவுப் பொருட்கள் நிரப்பி விட்டன. இந்த நோக்கில் அரிசியின் 95 வீத தன்னிறைவு என்பது 60-70 வீதத்துக்கு செல்லும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**உலகில் விவசாயத்தில் இன்றைய தொழில்நுட்பங்கள்**

ஜப்பானில் ஒரு பல்கலைக்கழகத்தில் விவசாய ஆராட்சி மகாநாடு ஒன்று கடந்த வருடம் நடைபெற்றது. மகாநாட்டின் நுழைவாயிலில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு தக்காளி செடி நாட்டப்பட்டு கொடிகளை பந்தலாக படர விட்டு ஏறத்தாழ 20,000 பழங்களை அந்த இரண்டு தக்காளி செடிகளும் கொண்டிருந்தன. இந்த மகாநாட்டுக்கு வருகை தந்த அத்தனை பேரையும் அந்த தக்காளி பயிர் செய்கை முறை கவர்ந்திழுத்து இருந்தது. இந்த கண்டு பிடிப்பு நாட்டுக்கு எப்படி பயனளிக்கின்றது? சர்வதேச வர்த்தகத்தில் தொழில்நுட்பத்தின் வழி ஒரு நாடு எவ்வாறு நன்மை அடைகின்றது?

இந்த தக்காளி இனத்தை மரபணுதொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஒரு பேராசிரியர் கண்டுபிடித்து அதை மூன்று மாதங்களுக்கு முன்னரே அந்த இடத்தில் நாட்டி அதற்கு தேவையான வளர்ச்சிக்குரிய நைதரசனை நீருடன் செலுத்தி செடிகளை வளர செய்த பின்னர் பூப்பதற்குரிய பொஸ்பரஸை செலுத்தி பூக்கச் செய்து பின்னர் பூத்த ஒவ்வொரு பூவும் வாடி கொட்டி விடாமல் செய்வதற்கு பூக்கள் காய் ஆவதற்காக வெப்ப நிலையை கட்டுப்படுத்தக் கூடிய பச்சை வீட்டு செயல்முறையை உருவாக்கி எல்லா பூக்களையும் காயாக்கிய பின்னர் பச்சை வீட்டை நீக்கிவிட்டு பழுக்க செய்து மகாநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற தினங்களில் பொது மக்களின் பார்வைக்கு திறந்து விடப்பட்டிருந்தது. இது தொழில்நுட்பம்.

**இலங்கையில் விவசாயத்தில் இன்றைய தொழில் நுட்பங்கள்**

புன்னாலைக்கட்டுவனில் எனது மாணவர்களுடன் உணவுப் பொருளாதாரம் என்ற பாடநெறிக்கு களப்பயணம் செய்த போது ஒரு தக்காளி பயிர் செய்யும் விவசாயி தனது தக்காளிப் பயிர்செய்கை தொடர்பாக பின்வருமாறு விபரிக்கின்றார்.

“தக்காளி பயிர் வெள்ள அழிவுகள், பூச்சி பீடைகளின் தாக்கம் மற்றும் காலநிலை மாற்றம் போன்றவற்றின் தாக்கங்களுக்கு உட்படாமல் சிறப்பாக விளையுமானால் ஒரு தக்காளி செடி ஏறத்தாழ 50 பழங்களையே விளைவிக்கும். இது கூட ஆபத்துக்களை தாண்டி கைக்கு வந்த பின்னர்தான் கூறமுடியும்.” என கூறியிருந்தார்.

**தொழில்நுட்பமும் விலையில் போட்டியும்**

உள்நாட்டு சந்தையை நீக்கி சர்வதேச சந்தையில் ஜப்பான் விவசாயினதும் இலங்கை விவசாயினதும் தக்காளிப் பழம் விற்பனைக்கு வருகின்றது எனக் கருதுவோமானால் ஒரு கிலோ தக்காளிப் பழத்தை ஜப்பான் விவசாயி இலங்கை ரூபா விலையில் சாராசரி உற்பத்தி செலவு அடிப்படையில் ரூ 0.00001 க்கு விற்பனை செய்ய முடியும். ஆனால் இலங்கை விவசாயின் பழம் சாராசரி உற்பத்தி செலவின் அடிப்படையில் ஏறத்தாழ ரூபா 50 க்கு விற்பனை செய்ய வேண்டி இருக்கும். இலங்கை விவசாயி எப்படி ஜப்பான் விவசாயி உடன் சர்வதேச சந்தையில் விலையில் போட்டிபோட முடியும்?. அடிப்டையில் விலைப்போட்டி நன்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் விவசாயிக்கு பெற்றுக் கொடுத்தது ஜப்பான் நாட்டின் விவசாயப் பேராசிரியரின் தொழில்நுட்ப கண்டு பிடிப்பு ஆகும்.

ஒப்பீட்டு ரீதியில் விலை குறைந்த பொருட் களையே நுகர்வோன் கொள்வனவு செய்கிறான். பொருளின் தரம் என நோக்குகின்ற போது பொதுவான சந்தையில் ஜப்பான் தக்காளிப்பழம் இராசயனப் பொருட்களை அதிகம் பயன்படுத்தி உற்பத்தி செய்யப் பட்டது. அது உடல் நலத்துக்கு கேடானது எனவும் இலங்கையின் தக்காளிப்பழம் அதிகம் இயற்கை உள்ளீடு களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டது எனவும், இது உடல் நலத்துக்கு தீங்கு இல்லாதது இலங்கை யினுடையதை தாருங்கள் என பல்பொருள் அங்காடி களில் யாரும் கேட்டு வாங்குவதில்லை. இன்னும் கூறுவோமானால் ஜப்பானில் பழம் பார்வைக்கு கவர்ச்சி யாகவும் நுகர்வோனை கவரக்கூடியதாகவும் இருக்க, இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பழம் பார்வைக்கு அசிங்கமாகவும் தெரியலாம். சுப்பர் மார்கெட்டுக்களில் கவர்ச்சியான பொருட்களையே நுகர்வோன் விரும்பி வாங்குவதால் விவசாயப் பொருட்களின் சுகாதார தரம் பற்றி யாரும் கவனத்தில் கொள்வதில்லை. விலையில் மட்டும் அல்ல சந்தை கவர்ச்சியிலும் இலங்கையின் தக்காளிப்பழம் ஜப்பான் பழத்துடன் போட்டி போட முடியாது.

**விவசாயத்தில் ஆபத்தைக் குறைத்தல்**

அடிப்படையில் இரண்டு தக்காளி உற்பத்திகளின் சராசரி உற்பத்தி செலவும் அதன் வழி விலையும் தொழில்நுட்பம் காரணமாக மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடாக காணப்படுகின்ற போது இலங்கை விவசாயின் இந்த உற்பத்தி கூட நிட்சயமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை மற்றும் ஆபத்தைக் அதிகம் கொண்டிருக் கின்றது. தக்காளியை நாட்டியது தொடங்கி அறுவடை செய்யும் வரை நித்தம் நித்தம் வெள்ளம் போடுமோ அல்லது கடும் வெப்பம் வந்து தக்காளி எரிந்து விடுமோ அல்லது அதிகம் பனி கொட்டி அழிந்து விடுமோ என இலங்கை விவசாயி இயற்கையுடன் சார்ந்து ஆபத்தை எதிர் நோக்குகின்றான். அவனுடைய வருமானத்துக்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஆனால் ஜப்பான் விவசாயியோ தக்காளி பயிர் செய்கையை ஒரு இயற்கையுடன் இணைந்த விவசாயமாக அன்றி திட்டமிட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மை அற்ற கைத்தொழில் விவசாயமாக கையாளுகின்றான். இவனுடைய வருமானம் தக்காளியை நாட்டும் போதே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. ஒரு கைத்தொழில் துறையில் ஒரு உற்பத்தி எவ்வாறு திட்டமிட்டு செய்யப்படுகின்றதோ அதே போன்று விவசாயத்திலும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி விளைச்சலும் வருமானமும் முற்கூட்டியே தீர்மானிக்கப் படுகின்றது. வங்கிகளும் வருமானம் நிச்சயம் என்ற காரணத்தால் தயக்கம் இன்றி குறைந்த வட்டியில் கடன் வழங்குகின்றன. காப்புறுதி நிறுவனங்களும் உற்பத்தி யாளனுக்கு சார்பாக தொழிற்படுகின்றன. அரசும் யாருக்கும் அடிபணியாமல் விவசாய இறக்குமதி மீது 300-500 விதம் வரையான வரியினை விதித்து உள்நாட்டு விவசாயிகளின் வருமானத்தை பாதுகாக்கின்றது.

### விவசாயத்தில் தொழில்நுட்பமும் வருமானப் பங்கீடும்

ஜப்பானில் விவசாயின் வருமானமும் கைத் தொழி லாளியின் வருமானமும் ஏறத்தாழ சமனாக காணப்பட இலங்கையில் இது நேர் எதிராக காணப்படுகின்றது. இலங்கையில் விவசாயியின் விவசாய உற்பத்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பம் அதிகம் பங்காற்றவில்லை. பயன் படுத்துகின்ற தொழில் நுட்பம் காலவதியானது ஆகும். உதாரணமாக மேல் குறிப்பிட்ட உதாரணத்தில் தக்காளியின் வளர்ச்சிக்கு இராசயண வளமாக்கியான நைதரசனை யூரியா அல்லது அமோனியா என்ற பெயரில் தக்காளிக்கு இடுகின்ற தொழில்நுட்பத்தைப் பயன் படுத்துகின்றான். ஆனால் அத்தொழில்நுட்பத்தை சரியான அளவில் சரியான பருவத்தில் பயன்படுத்துவதில்லை. வளமாக்கிகளை வாங்குவதற்கு நிதி பிரச்சினை அல்லது பயன்படுத்திய பின்னர் பாரிய வெள்ளம் வந்து அதை கழுவிச் செல்லல் அல்லது புறகாலநிலை மாற்றத்தால் தக்காளிப் பயிருக்கு அந்த வளமாக்கி ஒவ்வாமையாகி பல நோய்கள் உருவாதல் என காலவதியான தொழில்நுட்ப பயன்பாடு கூட விவசாயிகளை சரியாக சேராமல் போகின்றது. இந்த இழப்பீடுகளுக்கு காப்பீடு செய்தால் காப்புறுதி நிறுவனங்கள் விவாயிகளை ஏமாற்றுகின்றன. ஜப்பான் விவசாயி வளமாக்கியை நீருடன் கலந்து பயன்படுத்துகின்றான். இது வீண் விரையத்தை தடுப்பதோடு சரியான அளவில் பயிரின் வளர்ச்சியுடன் இணைந்து வளர்ச்சிக்காலம் பூராக கிடைக்கின்றது. இயற்கையினால் வரும் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பச்சை வீட்டு முறை அல்லது திறந்த வெளியில் சரியான காலநிலை கணிப்பை பயன்படுத்தி பயிர் செய்கின்றான். இவைகளையும் மீறி பயிர் அழிந்தால் காப்புறுதி நிறுவனங்களும் மற்றும் அரசும் விவசாயிகளை காப்பாற்றுகின்றன.

### தொழில்நுட்பமும் ஊழியச் செலவும்

இலங்கையில் விவசாயத்தில் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்பதற்கான இன்னொரு காரணம் ஊழியர் தொடர்பான பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இலங்கையில் அரசின் சமூக நலச் செலவீடுகள் காரணமாக வேலைக்கு ஆட்களை பிடித்தல் அதிலும் விவசாய வேலைக்கு ஆட்களை பிடித்தல் மிகவும் கடினமானதாக காணப்படுகின்றது. எனவே ஊழியத்துக் கான செலவு அதிகரித்து உற்பத்தி பொருளின் சாராசரி செலவு அதிகரிக்கின்றது. ஜப்பானில் சில பண்ணைகளில் விவசாயி நவீன மூலதன செறிவாக தொழில்நுட்பம் ஊடாக செலவைக் கட்டுப்படுத்துகின்றான். தக்காளிப் பழங்களை பறிப்பதற்கு ரோபோக்களைப் பயன்படுத்து கின்றான். நீர்ப்பாசணம், கிருமிநாசினியின் பிரயோகம், நோய்த் தாக்கங்களை கட்டுப்படுத்தல் என்பன யாவும் தன்னியக்க கருவிகள் ஊடாக நடைபெறுகின்றன. இவற்றுக்கென பல Robots, app, Drones க்கள் மற்றும் Sensors கள் பயன்படுத்தப்படுகின்றன. தன்னியக்கம் என்பது இன்று விவசாயத்தில் உற்பத்தி செலவைக் குறைத்து நிட்சயமற்ற தன்மையை குறைக்கின்றது. எங்களுடைய விவயாயிகள் பலருக்கு தொலைபேசியில் குறும் செய்தி கூட அனுப்ப தெரியாதவர்களாக உள்ளனர். எப்படி வெளிநாட்டு உணவு உற்பத்திகளுடன் போட்டி போட முடியும்?

## தொழில்நுட்பமும் விவசாய உற்பத்திகளின் சந்தைப் படுத்தலும்

இவ்வாறு இலங்கையில் பல இன்னல்களுக்கு மத்தியில் தப்பி பிழைத்து வரும் விவசாய உற்பத்தி களுக்கு சந்தையில் நல்ல விலையை பெற்றுத் தருவ திலும் தொழில்நுட்பம் அளப்பரிய பங்கினை ஆற்று கின்றது. மேலே உள்ள உதாரணத்தில் தக்காளி உற்பத்தியில் காலநிலை சாதகமாகி அதிக விளைச்சல் கிடைத்தாலும் உள்நாட்டு சந்தையில் நிரம்பல் அதிகரிப்புக்கு ஏற்ப கேள்வி அதிகரிக்காத காரணத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தை விலை வீழ்ச்சியடைகின்றது. சில காலங்களில் தக்காளிப்பழம் கிலோ 20 ரூபாவுக்கு பெறக் கூடியதாக உள்ளது. பருவ காலத்தில் அதிகரிக்கின்ற உற்பத்தி களை சேமித்து ஒரு இரு மாதங்களில் இரண்டு மடங்கு அதிகமான விலைகளில் விற்க முடியும். குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகள், பழங்களை பதப்படுத்தும் தொழிற் சாலைகள், போன்ற அறுவடைக்கு பின்னரான விவசாயக் கைத்தொழில்கள் பற்றாக்குறையாக உள்ளன. தனியார் துறையினரும் இந்த துறைகளில் முதலீடு செய்வதில்லை.

இந்த களஞ்சிய வசதி தொடர்பாக ஆராயும் போது தக்காளி பழம் சைவ உணவா? அல்லது அசைவ உணவா என்ற ஐயம் எழுகின்றது. இன்று சந்தைகளில் உள்ள தக்காளிப்பழம் அவைச உணவு ஆகும்.

## தக்காளி சைவமா? அசைவமா?

ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் ஆறு மாதங்கள் கோடை காலத்தில் செய்யப்படும் தங்காளிப் பழங்களையே வருடத்தில் மிகுதி ஆறு மாதங்கள் குளிர் காலத்தில் நுகர வேண்டி இருக்கின்றது. தக்காளிப்பழம் இவர்களின் உணவுகளில் மிக முக்கியமான உணவாக இருந்த காரணத்தால் 1980 களுக்கு முன்னர் இருந்த தக்காளி இனத்தின் தோல் மிகச்சிறிதாக இருந்த காரணத்தால் தக்காளிப் பழத்தை நீண்ட நாட்களுக்கு சேமிக்கும் போது இவை மிக மென்மையான தோல் காரணமாக அழுகி பழுதடைந்தன. இதன் காரணமாக குளிர் காலத்தில் தக்காளியின் விலை மிக அதிகமாக இருந்தது. எனவே விவசாய ஆராட்சியாளர்கள் இப் பிரச்சினைக்கு ஆய்வு செய்து தக்காளிப் பழத்தின் தோலை தடிப்பாக்க தக்காளி விதையில் உள்ள மென்மையான தோலுக்கான மரபணுவை பிரித்து எடுத்து அகற்றி அதற்கு பதிலாக தவளையின் தோலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான குளிரையும் தாங்குகின்ற தோல் திரைக்கான மரபணுவை பிரித்தெடுத்து அதை தக்காளி விதைக்குள் செலுத்தி மிகவும் தடிப்பான தோல் உள்ள தக்காளி விதையை உருவாக்கினார்கள். இந்த கண்டுபிடிப்பு இன்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற தாகும். இதன் பின்னர் இடைவெப்ப மற்றும் குளிர் வலைய நாடுகளில் தக்காளிப்பழம் 6 மாதங்களுக்கு குளிரூட்டிகள் ஊடாக சேமிக்க கூடிய வாய்ப்பபை பெற்றது. இது ஏற்றுமதிக்கும் வாய்ப்பாக அமைந்தது.

**அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சந்தைப் படுத்தலில் உள்ள பிரச்சினைகள்.**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இன்று கூட பருவகாலத்தில் அளவுக்கு மீறிய அறுவடையால் தக்காளி பீற்றுட் போன்ற விவசாய உற்பத்திகளை மாடுகளுக்கு உணவாக பயன்படுத்தும் நிலை உள்ள போது வளர்ந்த நாடுகளில் மரக்கறிகள் மட்டும் அல்ல கீரைகளை கூட வறுத்து பதப்படுத்தி பக்கற்றுக்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு தொழில்நுட்பத்தில் வளர்ந்து விட்டனர்.

**விவசாய தொழில் நுட்ப இடைவெளி**

வளர்ந்து வரும் நாடுகளில் பத்து இருபது கோழிகளை வளர்த்து அவைகளுக்கு பின்னால் ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரமே கேள்விக் குறியாக இருக் கின்ற போதும், கோழிப் பண்ணைகளில் கோழிகளின் எடையை எப்படி அதிகரிக்கலாம் என்று நாம் திக்கு முக்காடி கொண்டிருக்கின்ற இவ் வேளையில், வளர்ந்த நாடுகள் மரங்களின் தண்டுகளில் கோழிச் சதையை உற்பத்தி செய்து வெட்டி எடுக்கின்ற தொழில் நுட்பத் துக்கு சென்று விட்டார்கள். 2019 இல் உன்னதமான 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பங்களில் இந்த தொழில் நுட்பம் இடம் பிடித்து உள்ளது. இஸ்ரேல் கண்டு பிடித்த இந்த தொழில்நுட்பத்தின்படி அனைத்து வகையான இறைச்சி களையும் மரத்தின் தண்டுகளில் விளைவிக்க முடியும். விலங்குகளில் சதையின் மரபணுவை பிரித்தெடுத்து அதை மரங்களின் தண்டுகளின் மரபணுவுக்குள் செலுத்தி தண்டுகளில் விலங்குகளின் பறவைகளின் இறைச்சி உற்பத்தி செய்கின்ற தொழில் நுட்பம் கிடைத்துள்ளது. இலங்கையில் பல ஆறுகள் ஊடாக கிடைக்கின்ற மழைநீர் கடலுடன் கலக்கின்ற போதும் இலங்கை நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடையாமல் உள்ளது. இந்நீரை சேமித்து எப்படி நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து அரிசியை ஏற்றுமதி செய்யலாம் என மண்டையை குடைந்து கொண்டிருக்கும் போது இஸ்ரேல் கடல் நீரில் விளைவிக்க கூடிய நெல் இனத்தை கண்டுபிடித்துள்ளது. இந்த தொழில் நுட்பம் சந்தைக்கு வந்தால் நெல் உற்பத்தியை தளமாக கொண்ட இலங்கை போன்ற பல பொருளாதாரங்கள் சரிவடையலாம்.

**உணவு உற்பத்தியில் நவீன தொழில்நுட்ப முறைகளும் மனித ஆரோக்கியமும்.**

தொழில்நுட்ப வழியான விவசாய உற்பத்தி களுக்கு எதிராக தற்போது முன்வைக்கப்படுகின்ற முக்கியமான ஒரு எதிர் வாதம் அவை மனித வாழ்வின் சுகாதார ஆரோக்கியத்துக்கு சவாலாக அமைந்துள்ளன என்பதாகும். நவீன தொழில்நுட்பம் மனிதவாழ்வின் ஆரோக்கியத்தை அழிப்பதனால் இயற்கை உணவுகளை உற்பத்தி செய்யும்படி உலக அமைப்புக்கள் வலியுறுத்து கின்றன. இவ்வகையில் இயற்கை விவசாயம் மற்றும் பாரம்பரிய தொழில் நுட்ப முறைகள் மீளப் புத்துயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளன. பேண்தகு அபிவிருத்தி என்ற எண்ணக்கரு இன்று முக்கியம் பெற்று வருகின்றது. அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் இத்துறையில் கல்வி கற்பவர்களுக்கும் ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் புலமைப் பரிசில்களும் பல வாய்ப்புக்களும் வழங்கப்படுகின்றன.

நவீன தொழில்நுட்ப உணவு உற்பத்தி முறைகள் மனித ஆரோக்கிய வாழ்வுக்கு சவாலாக அமைந்துள்ளன என்பதில் எல்லோரும் உடன்படுகின்றார்கள். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இவ்விடயத்தில் பின்வரும் விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்த தொழில்நுட்ப முறைகளால் விவசாயப் புரட்சி ஏற்பட்டு அவை வழி குவிந்த செல்வம் கைத்தொழில் துறையில் முதலீடு செய்யப்பட்டு கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட பின்னரும் நவீன நுட்ப முறைகளை விவசாயத் துறையில் பயன்படுத்தி விவசாய உற்பத்திகளிலும் உலக வர்த்தகத்தில் வளர்ந்த நாடுகள் முன் நிற்கின்றன. இந்த தொழில் நுட்ப முறைகளை உருவாக்கின்ற நாடுகளில் இது ஏன் தடைவிதிக்கப்படவில்லை என்ற வினா எழுகின்றது.

2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விவசாய உற்பத்திகளில் தங்களுடைய முழுமையான இயல்தகவை அடைவ தற்கு முன்னரே உலக பணக்கார நாடுகள் மனித ஆரோக்கியத்தை எடுத்துக்காட்டி இந்த தொழில் நுட்ப முறைகளை அபிவிருத்தியடைந்த நாடுகளில் செயற்படுத்த பல்வேறு விதமான தடைகளை விதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் உலக ஒழுங்குகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதற் காகவும் பணக்கார நாடுகளில் இருந்து அந்நிய உதவிகளை பெறுவதற்கும் கண்ணை மூடிக் கொண்டு நவீனநுட்ப முறைகளை விவசாயத்தில் ஊக்குவிப்பதற்கு பதிலாக பாரம்பரிய முறைகளை ஊக்குவிக்கின்றன. இந்நாடுகளின் அரசியல் வாதிகள் தங்கள் நாடுகளில் தங்கள் பொருளா தாரங்கள் அடைய வேண்டிய இலக்குகளுக்கு முன்பே பேண்தகு அபிவிருத்தியில் கவனம் செலுத்த முற்படுகின்றன. பேண்தகு அபிவிருத்தி யானது அபிவிருத்தியின் இறுதி இலக்காக இருக்கின்ற போது இவை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்தியின் ஆரம்ப இலக் காக முன்னெடுக்கப்படுகின்றன. அபிவிருத்திய டைந்து வரும் நாடுகள் US$ 40 000 தலா வருமானத்தில் கடைப்பிடிக்கின்ற பேண்தகு அபி விருத்திக் கொள்கைகளை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தலாவருமானம் US$ 4000 இல் கடைப்பிடித்தால் எவ்வாறு விரைவான அபிவிருத் தியை அடைய முடியும்.

4. தொழில் நுட்ப முன்னேற்றத்தால் உருவாகும் உலக ஆரோக்கிய பிரச்சினை என்பது உலக நாடுகள் யாவற்றுக்கும் உரிய ஒரு பொதுவான பிரச்சினை ஆகும். விளையாட்டு ஓட்டப் போட்டியில் வெற்றி பெறுவதாயின் போட்டியாளர்கள் அனைவரும் அவர் அவர் ஒடுபதையில் ஒழுங்கு விதிகளை கடைப் பிடித்து ஓட வேண்டும். எல்லா வீரர்களும் பாதை களை மாற்றி ஓடும் போது ஒரு சிறந்த வீரன் நேர்மையாக தனக்குரிய ஓடு பாதையில் ஒழுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிகளின்படி ஓடி வெற்றி பெற முடியாது. அதே போன்று உலக நாடுகள் ஒவ்வொன்றும் விவசாய உற்பத்தியில் நவீன தொழில்நுட்ப முறைகளால் உருவாகும் பாதிப்புக்களை கவனத்தில் கொண்டு செயற்பட்டால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் அவைகளை கவனத்தில் எடுக்க முடியும். மாறாக வளர்ந்த நாடுகள் நவீன நுட்ப முறைகளை பயன்படுத்தி உலக சந்தைக்கு உணவுப் பொருட்களை அனுப்பும் போது அபி விருத்தி அடைந்து வரும் நாடுகள் அவர்கள் இருக்கின்ற பொருளாதார நிலையில் எப்படி நவீன தொழில் நுட்ப முறைகளை பயன்படுத்தி விவசாயம் செய்ய முடியாது இருக்க முடியும்?

5. வளர்ந்து வரும் நாடுகளில் விவசாயிகளின் மூட நம்பிக்கைகளும் நவீன தொழில் நுட்ப முறைகளை பயன்படுத்தி விவசாயப் புரட்சியை உருவாக்க தடையாக உள்ளன. இந்தியாவில் மழை கிடை க்கும் என்ற நம்பிக்கையில் கழுதைக்கும் மனித னுக்கும் திருமணம் செய்கின்ற நிகழ்வுகளை காண் கின்றோம். இலங்கையில் நெல் உற்பத்தியில் நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டும் என்பதற்காக கோயில்களுக்கு படித்த விவசாயிகள்கூட மடைகள் மற்றும் பூசைகள் செய்வதை காண்கின்றோம். இவை எல்லாம் பல தசாப்பதங்கள் நீங்கியும் நாம் விஞ்ஞான பூர்வமான விவசாயத்துக்கு செல்ல வில்லை என்பதை கோடிட்டுக் காட்டுகின்றன.

கொரோனா தொற்று நோயானது விவசாயத்தில் பாரம்பரிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு வழி வகுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் அரிசி தேவையில் இன்று சராசரி 95 வீதம் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப் படுகின்றது என்ற உண்மை புலப்படுத்துவது என்ன வென்றால் இலங்கையின் நிலச்சீர்திருத்தங்கள் விவசாய புரட்சியை உருவாக்காவிட்டாலும் அதை உருவாக்கு வதற்காக புறச்சூழலை கூட உருவாக்கவில்லை என்பதாகும். நிலமை இவ்வாறு இருக்க இந்த விவசாயப்புரட்சியும் அவற்றுக்கு அடிப்படையாக இருக்கும் விவசாயத் தொழில் நுட்பங்களுக்கு எதிரான விமர்சனங்களும் ஆய்வுகளும் எதிர்ப்புக்களும் இலங்கை போன்ற நாடுகளில் அதிகரிக்க தொடங்கியுள்ளன.

**நிலச் சீர்திருத்தங்களும் தொழில்நுட்பமும்**

நிலச் சீர்திருத்தங்கள் வழி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நாட்டை விவசாயத் துறை வழி அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக நிலப்பங்கீடு வறுமையை குறைத் துள்ளது. மக்களுக்கு நிலம் என்ற அடிப்படை உற்பத்தி வளம் கிடைத்துள்ளது என்ற வாதம் முன்வைக்கப் படுகின்றது. நாங்கள் பெரியளவில் பொருளாதார வளர்ச்சியை பெறாவிட்டாலும் வருமானப் பங்கீட்டுடன் கூடிய அபிவிருத்தியை பெற்று விட்டதாக சிலர் கருது கின்றனர். நிலத்திட்டமிடலில் பல குறைபாடுகள் உள்ளன. இலங்கையில் விவசாயத்துக்கு கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு இலங்கை மக்கள் அனை வரினதும் வருமானத்தை மற்றும் வாழ்க்கைத் தரத்தை பல மடங்கு உயர்த்தக் கூடிய உற்பத்தி மூலங்களை உருவாக்கியிருக்கலாம். இலங்கையின் நிலக் கொள்கை யானது மக்களை சிறிய நிலப்பரப்புக்குள் உள்ளடக்கி குடியிருப்புக்களை அமைத்து நிலைக்குத் தான வீடமைப் புக்கு கொள்கைக்கு இட்டுச் செல்லாமல் கிடையான குடியிருப்பு பரம்பலுக்கு உற்சாகப்படுத்தியுள்ளது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் விவசாய நிலங்களில் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தி பெருக்கத்துக்கு தடையாக அமைந்துள்ளது.

விவசாய அபிவிருத்தியானது போட்டி முறையில் உற்பத்தியை தூண்டி அதன்வழி புதிய நுட்ப முறை களை புகுத்துவதற்கு பதிலாக அது பொதுவுடமை வழி அரசதனியுரிமையுடன் கூடிய ஒரு தொழிலாக வளர்ந்தது. ஏறத்தாழ 65 வீதமான மக்கள் வினைத்திறன் அற்ற வர்களாக விவசாயத் துறையில் வாழ்கின்றனர். அரசியல் தலைமைத்துவ மாற்றத்தின் ஊடாக சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 14

## கொரோனாவின் பூகோள அரசியலும் இலங்கைப் பொருளாதாரமும்

SundayVirakesari,November 08, 2020

ஒரு நாடு நிறைய இயற்கை வளம், மனித வளம், நிதிவளம் என அனைத்து வளங்களையும் கொண்டு இருக்கலாம் ஆனால் அந்நாட்டின் பொருளாதாரம் அபி விருத்தி அடையாது இருக்கின்றது. உதாரணம் ஆபிரிக் காவில் பல நாடுகள் இயற்கை வளங்களை கொண்டு ள்ளன. ஆனால் அவை உலகிலே வறிய நாடுகளாக மட்டும் அன்றி வறுமையில் பட்டினியால் இறக்கின்றார்கள். மாறாக உலகிலே பல நாடுகள் வளங்கள் அற்று காணப்படுகின்றன. ஆனால் அவை மிக உயர்ந்த வருமானத்தையும் வாழ்க்கை தரத்தையும் கொண்டுள்ளன. உதாரணமாக சிங்கப்பூரில் தண்ணீர் கூட மலேசியாவில் இருந்துதான் கிடைக்கின்றது. ஆனால் உலகிலே பலரால் மேற்கோள் காட்டி பொருளாதார அபிவிருத்தியில் முதல் நிலையில் உள்ள நாடாக இது திகழ்கின்றது. இது எப்படி சாத்தியமானது. இந்நாட்டின் அபிவிருத்திக்கு பல காரணிகள் பங்காற்றிய போதிலும். புவிசார் அல்லது பூகோள அரசியல் இந்நாட்டின் அபிவிருத்திக்கு மிகப்பாரிய பங்களிப்பை செய்துள்ளது.

இலங்கையில் மனிதன் மகிழ்சியாக வாழ்வதற்கு தேவையான அனைத்து வளங்களும் மிகச் சிறப்பாக உள்ளன. ஆறுகள், மலைகள் சமவெளிகள், களப்புக்கள், தீவுகள், கடற்கரைகள், வேறுபட்ட காலநிலைகளை சில மணித்தியால பயணத்தில் அனுபவிக்க கூடிய புவியிய லமைப்புக்கள் என இவை எண்ணில் அடங்காதவை. இலங்கை ஆசியாவில் பௌதீக வாழ்க்கைப் பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டெண்ணில் மிக உயர்ந்த நாடாக உள்ளது. இப்படி பல வாய்ப்புக்களை கொண்டிருந்தும் இலங்கையின் ஒட்டுமொத்த அபிவிருத்தியானது மிகக் கீழ் நிலையிலேயே உள்ளது. இலங்கையின் அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்திய மிக முக்கிய காரணி யாது? இலங்கையின் அமைவிடமும் அது சார்ந்த புவிசார் அரசியலும் இலங்கையின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் கணிசமான பங்கினைக் கொண்டுள்ளது.

இலங்கை இந்துச் சமுத்திரத்தில் இந்தியாவுக்கு கீழே இருப்பது இதன் அரசியல், வரலாற்று மற்றும் பொருளாதாரத்தில் குறிப்பிடக்கூடிய தாக்கத்தை கொண்டு ள்ளது. இலங்கையின் திறந்த பொருளாதாரம் 1978 இல் மீள அறிமுகமாகி இலங்கை முதலாளித்துவ நாடுகள் பக்கம் சார்ந்த போது இது அருகில் உள்ள இந்தி யாவுக்கு ஆபத்தாக அமையும் எனவும் அடுத்த பத்து ஆண்டுகளில் இலங்கையை அடக்குவதற்கு இலங்கையில் இந்திய இராணுவத்தின் பிரசன்னம் இருக்க வேண்டும் என அப்போதைய இந்திய கொள்கை வகுப்பாளர்கள் திட்டமிட்டு அதை அடைவதற்காக பல வேலைத் திட்டங்களில் செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டனர். இந்தியாவின் இந்த வேலைத்திட்டங்களால் இலங்கையில் இன முரண்பாடு மற்றும் ஆயுதகலாச்சாரம் தூண்டப்பட்டு பாரிய யுத்தத்துக்கும் அழிவுகளுக்கும் முகம் கொடுத்து இலங்கைப் பொருளாதாரம் சின்னா பின்னமாக்கப்பட்டது. இலங்கை தனது பிராந்திய வல்லரசின் அரசியல் நலன்களுக்கு எதிராக தனது பூகோள அரசியலை பயன்படுத்தி இலங்கை பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சித்தமையானது இலங்கையை பொருளாதார ரீதியாக அடிபாதாள உலகத்துக்கு தள்ளிவிட்டது. 2009 இல் மாற்றமடந்த இந்த பூகோள அரசியலை சாதுரியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இலங்கையானது 30 வருட யுத்த அடியில் இருந்து பொருளாதாரத்தை மீள முன்னேற்ற முயற்சிக்கும் போது இலங்கைக்கு கோவிட் 19 தொற்றுக்கு பின்னரான பூகோள அரசியலில் எற்பட்ட மாற்றங்கள் மென் மேலும் பாரிய பொருளாதார பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

1992 இல் சோவியத் ஒன்றியம் உடைந்த பின்னர் பனிப்போர் தணிந்து இருந்தது. அமெரிக்காவுக்கு சீனாவின் பாரிய சந்தை தேவைப்பட்டது. சீனாவுக்கு அமெரிக்கா வின் கொள்வனவு சக்தியுடன் கூடிய சந்தையும் முதலீட்டாளர்களும் தேவைப்பட்டனர். உலக வர்த்தக தாபனத்தின் அனுசரனையுடன் இரு நாடுகளும் தங்கள் பொருளாதாரங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்க முற்பட்டு இருந்தனர். இது ஒரு வர்த்தக உலகமாகும். நட்புக்களும் கூட்டுக்களும் பொருளாதார நன்மை கருதியவையாகும். இரு நாடுகளின் வர்த்தக உறவின் ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு பின்னர் அமெரிக்கா சீனாவுடனான பொருளாதார உறவுகளை சீர்தூக்கி பார்த்த போது பொருளாதாரக் கொள்கையின் ஒட்டு மொத்த தேறிய இலாபம் சீனாவுக்கே அதிகமாக இருந்தது. அதாவது உலகில் சீனா தவிர்ந்த ஏனைய நாடுகளை தாராள வர்த்தகம் என்ற பெயரில் பொருளாதார சீர்திருத்தங்கள் வழி வளச் சுரண்டல்களை செய்த அமெரிக்காவுக்கு சீனாவுடனான இந்த வர்த்தக உறவு ஏமாற்றத்தையே கொடுத்தது. அமெரிக்காவில் இடைத்தர மக்கள் கொள்வனவு செய்கின்ற சுப்பர் மார்கெட்டுக்களில் 80 வீதத்துக்கு மேலான பொருட்கள் சீனாவில் உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். அப்பிள் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் கூட குவாவை நிறுவனத்தின் போன்களை பயன்படுத்த தொடங்கினார்கள். சீனாவிடம் இருந்து அமெரிக்கா சுருட்டுவதற்கு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் காரணமாக அமெரிக்காவின் வளத்தை சீனா சுரண்டுவதை அமெரிக்கா உணர்ந்து கொண்டது. இதன்காரணமாக சீனாவில் இருந்து வரும் இறக்குமதிகள் மீது வரிவிதிக்க இருவருக்கும் இடையில் ஒரு வர்த்தக போர் பல வடிவங்களில் உருவானது. இந்த வர்த்தக போரின் மத்தியில் கோவிட் 19 தொற்று சீனாவில் இருந்து உருவாகி உலகில் பல நாடுகளை கடுமையாக பாதித்துள்ளது. இவைகளில் அமெரிக்கா இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடுமையாக பாதிப்படைந் துள்ளன. பாதிப்படைந்த நாடுகள் சீனாவுக்கு எதிராக கூட்டு சேர ஆரம்பித்துள்ளன.

உலகத்தில் பல அணிகள் இருந்தாலும் கோவிட் 19 க்கு பின்னர் உலகில் இரண்டு பிரதான அணிகளை நாம் தெளிவாக இனம் காணலாம். ஒன்று அமெரிக்கா தலைமையில் இந்தியா, அவுஸ்ரேலியா, ஜப்பான் மற்றும் கனடா போன்ற நாடுகளின் கூட்டு அணியாகும். மற்றையது சீனா தலைமையில் இரசியா, ஈரான் பாகிஸ்தான் போன்ற சில அரபு நாடுகளை உள்ளடக்கிய அணியாகும். இந்த இரண்டு அணிகளில் இலங்கை எந்த அணியில் உள்ளது என்ற கேள்விக்கு பதிலாக இலங்கைத் தலைவர்கள் தாங்கள் இரண்டு அணியிலும் சேராது அணிசேராக் கொள்கையை கடைப்பிடிப்பதாக குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இது பூனை கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருண்டுவிட்டது என எண்ணிக்கொண்டு பாலைக் குடிப்பதற்கு ஒப்பானது. இலங்கைத் தலை வர்கள் என்னதான் கூறினாலும் இலங்கை சீனா பக்கமே உள்ளது என்பதற்கு வலுவான காரணங்களை எடுத்துக் காட்ட முடியும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு 99 ஆண்டுகள் குந்தகைக்கு விட்டமை, துறைமுக நகர திட்டம் மற்றும் அரசுக்கு கொடுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பில்லியன்கள் பெறுமதியான நன்கொடைகள் மற்றும் கடன்கள் போன்றவற்றை குறிப்பிட முடியும். இலங்கை சீனாவுக்கு கொடுக்க வேண்டிய கடன் அதன் ஒதுக்கத்தை விட பல மடங்கு அதிகமானதாகும். மறுபுறத்தில் இலங்கை அமெரிக்காவின் அணியில் உள்ள அமெரிக்காவையும் இந்தியாவையும் கவனத்தில் கொள்ள வில்லை. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் (*India's* East Container *Terminal* (ECT) இந்தியாவுக்கு கொடுக்க முன்னைய அரசாங்கம் ஒப்பந்தம் செய்த போதும் அது இன்று வரை தொழிற்பாட்டுக்கு கொடுக்கப் படவில்லை. மாறாக தொழிற் சங்கங்களை கையாண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தி இந்த ஒப்பந்தத்தை மக்கள் எதிர்ப்பு என்ற காரணத்தை முன்நிறுத்தி இரத்து செய்ய துடிக்கின்றது. பின்னர் இரத்து செய்து விட்டது.

இதேபோன்று அமெரிக்காவின் MCC The *Millennium* Challenge *Corporation* (MCC) ஒப்பந்தமும் இன்னும் முற்று முழுதாக உடன்படவில்லை. ஆரம்ப கட்ட பேச்சு வார்த்தைகள் இடம்பெற்ற போதும் இறுதியில் அமெரிக்கா தானாக விலக்கிக் கொண்டது. ஆக மொத்தத்தில் இலங்கை அரசாங்கத்தின் நகர்வு பகட்டுக்கு அணிசேராக் கொள்கை என குறிப்பிட்டாலும் நிஜத்தில் அது சீனாவின் அணியில் சேர்ந்து சீனாவிடம் பொருளாதாரத்தை முற்று முழுதாக தாரைவார்ப்பதாக அமைகின்றது. இலங்கைக்கு சீனா போன்று பொருளாதார உதவிகளை செய்வதற்கு அமெரிக்காவால் மற்றும் இந்தியாவினால் முடியாது உள்ளது. உலகத்தில் நிதிப் பலத்தில் அமெரிக்காவுக்கு உதவுக் கூடிய அளவுக்கு சீனாவின் பொருளாதாரம் உறுதியாக உள்ளது. அமெரிக் காவுக்கே உதவி செய்கின்ற அளவுக்கு பலத்தில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவுடன் இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் கைகோர்ப்பதில் என்ன தவறு இருக்கின்றது.

இந்த புவிசார் யாதார்த்த நிலையில்தான் அமெரிக்காவின் வெளியுறவு செயலாளரின் வருகையும் பிரித்தானியாவில் விடுதலை புலிகள் மீதான தடை நீக்கத்துக்கான சமிஞ்சைகள் போன்றன நிகழ்ந்துள்ளன. இலங்கையை அமெரிக்கா தலைமையிலான அணி தனது பக்கம் நகரச் செய்வதற்கு இவ்வாறான பல செயற்பாடுகளை செய்கின்றது. செய்ய இருக்கின்றது. ஆனால் இந்த செயற்பாடுகளின் நலன் முற்று முழுதாக இலங்கை மக்களுக்கு சார்பானது அல்ல. மாறாக இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து தங்களுடைய பூகோள அரசியலுக்கு பயன்படுத்துவதாகும். இலங்கை மக்கள் இனங்களுக்குள்ளும் இனங்களுக்கு இடையிலான முரண் பாடுகள் காரணமாக மீண்டும் ஒரு முறை பாரிய நெருக்கடிக்குள் புகப்போகின்றது என்பதை இந்நிகழ்வுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இலங்கையில் உள்ள இன, மத, மொழி சார்ந்த முரண்பாட்டு பலவீனங்களை வெளிநாட்டவர்கள் தங்களின் ஆக்கிரமிப்புக்கு ஒரு கருவியாக பயன் படுத்தியுள்ளனர் என்பது 30 ஆண்டுகளுக்கு மேலான யுத்தம் எங்களுக்கு பாடத்தை புகட்டியுள்ளது என்பதை அரசியல் தலைவர்கள் உணர மறுக்கின்றனர்.

கோவிட் 19 க்கு பின்னராக பூகோள அரசியலில் இலங்கைக்கு தர்மசங்கடம் ஏற்பட்டுள்ளது. இலங்கை குறிப்பிடுவது போன்று அது இரண்டு அணியையும் சாராமல் நடுநிலைமையாக இருக்க முடியாது. அணி சேராக் கொள்கையானது ஒரு பழைய காலாவதியான கொள்கை ஆகும். இலங்கை சீனாவின் பக்கமே மென்மேலும் சாரப் போகின்றது என்பதற்கு அப்பால் அவ்வாறான சூழ்நிலையிலேயே இலங்கைப் பொருளாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகியுள்ளது. உலகில் யாரும் முனிவர்கள் அல்ல. அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தர பகைவர்களும் இல்லை. இலங்கையில் வெளிநாட்டவர்கள் ஊடுருவி நாட்டை அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு இட்டு செல்வதற்கு அடிப்படையாக இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாத வரை இலங்கையின் அழிவை எவராலும் தடுக்க முடியாது. இலங்கை தனது சொந்த மண்ணில் நீண்ட நெடும் காலம் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் இருப்பை அகற்றுவதற்காக இலங்கையர்கள் அனைவரையும் பிராந்தியத்தின் மற்றும் உலகின் வல்லாதிக்க சக்திகளின் ஆதிக்கத்துக்குள் கட்டுப்பட செய்கின்றது. இது இலங்கையர்கள் அனை வரையும் பாரிய அழிவுக்கு இட்டுச் செல்லும். கோவிட் 19 ஏற்படுத்திய இந்த பூகோள அரசியல் மாற்றம் இலங்கைப் பொருளாதாரத்தை இன்னொரு அழிவுக்கு இட்டுச் செல்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்பதை உணர்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 15

## COVID 19 இல் வரவு செலவுத் திட்டம்-2021

SundayVirakesari,December 20, 2020

இலங்கையின் 2021ற்கான வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டு அவற்றுக்கான இருநிலை விவாதங்கள் பாரளுமன்றத்தில் நடைபெற்று முடிந்துள்ளன. இவ்வரவு செலவுத்திட்டம் covid-19 காலத்தில் கொண்டு வரப்பட்ட மையால் இக்கட்டான ஒரு சூழ்நிலையில் இந்த திட்டம் ஆக மோசமானது அல்ல என தெரிவிக்கின்ற பல செய்திகளை பார்க்கிறோம்.

இலங்கையில் இராணுவப் பின்ணணியை கொண்டு ஆட்சிக்கு வந்த புதிய ஜனாதிபதியினால் புலிகள் கொன்று குவித்து நாட்டில் 30 வருட காலமாக புரை யோடி இருந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தது போன்று பொருளாதார முன்னேற்றத்திலும் பல மாற்றங் களை உருவாக்குவதற்கு இந்த வரவு செலவுத்திட்டம் அளப்பரிய பங்கினையாற்றும் என சம்மந்தப்பட்டவர்களால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த எதிர்பார்ப்பு கேள்விக் குறியாக பல ஐயங்களுக்கு விடை தருபனவாக அமைந்துள்ளது. பொருளாதாரத்தை வெற்றி கொள்ளல் என்பது பயங்கரவாதத்தை வெற்றி கொள்வது போன்று இலகுவானது அல்ல. காரணம், இலங்கை பயங்கர வாதத்தை தோற்கடித்ததே ஒழிய பயங்கர வாதத்துக்கான அடிப்படை காரணங்களை யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களுக்கு பின்னரும் தோற்கடிக்கவில்லை. மாறாக இலங்கையின் பயங்கர வாத்துக்கான அடிப்படைகள் வேறு கோணங்களில் முன்னரை விட மிக வேகமாக வியாபித்துச் செல்கின்றன.

வரவு செலவுத்திட்டம் பிரதானமாக இரண்டு வகையில் நோக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டு நிரந்தரமான வாக்கு வங்கியை பலப்படுத்து வதற்கான பாதீடு ஆகும்.
2. நாட்டின் பொருளாதாரத்தை குறுகிய நோக்கம் கொண்டதாக இல்லாமல் நீண்ட கால நோக்கில் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவ தற்கான பாதீடு ஆகும்.

முதலாவது வகையான பாதீடுகளையே இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இன்று வரை கடைப்பிடித்து வருகின்றது. மக்களை குறிப்பாக அரசின் பெரும்பான்மை சிங்கள மக்களை மகிழ்வித்து நிரந்த ரமான வாக்கு வங்கியை பலப்படுத்துவதற்காக பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் இலவசக்கல்வி, இலவச சுகாதார மருத்துவ வசதிகள், இலவச சீருடைகள், உணவு, மானியம், ஏனைய மானியங்கள், தேவைக்கு மேலான அரச பணியாளர்கள், உலர்வலய குடியேற்ற திட்டங்கள் என இந்த பட்டியல் மிக நீண்டு செல்கின்றது. இவற்றின் மூலம் பெருபான்மை மக்களை மகிழ்வித்து பொருளா தாரம் என்ன கேடு கெட்டாலும் பரவாயில்லை, மக்களின் வாக்குகள் தான் இலக்காக கொண்டு பாதீடுகள் தயாரிக்கப்பட்டன. இது சமூக நலனியல் அரச பாதீடு என அழைக்கப்பட்டது.

இரண்டாவது வகைப் பாதீடு அபிவிருத்தி அரசுக்குரிய பாதீடு ஆகும். மக்களின் மனதை குறும் காலத்தில் வெற்றி கொள்வதை நோக்கமாக கொண்டு இல்லாமல் மக்களின் மனதை நீண்ட காலத்தில் நிரந்தரமாக மகிழ்விக்கின்ற பாதீடு இந்த வகையில் சார்ந்தது ஆகும். இந்த வகைப் பாதீட்டை இலங்கையில் எந்த காலத்திலும் காணப்படவில்லை.

உலகிலே ஒரு ஜனநாயக நாட்டுக்கு சமூக நல பாதீடும் ஒரு குறைந்த ஜனநாயக பண்பு கொண்ட நாட்டுக்கு அபிவிருத்தி பாதீடும் பொதுமைப் படுத்தப்பட்ட சிறப்பு பண்பாக இருந்தது. இலங்கை 1948-1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியில் தாராள ஜனநாயகம் கொண்ட நாடாக இருந்தது. 1977-2020 வரை சற்று குறைந்த ஜனநாயகம் கொண்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் பயணித்துக் கொண்டு இருக் கின்றது. பாதீடு தொடர்பாக நோக்கின்ற போது தாராள ஜனநாயகம் மற்றும் குறைந்த ஜனநாயகம் கொண்ட இரு வெவ்வேறு காலப்பகுதிகளிலும் சமூக நலம்பேணும் பாதீடுகளையே முன்னெடுத்து சென்றுள்ளது. இலங்கை யின் 2021ற்கான பாதீடும் அந்த வகையில் அடங்கு கின்றது.

**2020 பாதீட்டின் செலவீனங்களும் அதன் நன்மைகளும்**

தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வை [1000] தவிர வேறு ஒரு நன்மைகளையும் சிறுபாண்மை மக்கள் இந்த பாதீட்டின் வழி பெற்றுக்கொள்ளவில்லை.

பொதுவாக பிரேரிக்கப்பட்ட சமூக நலன் அடிப்படை யிலான நன்மைகள் கூட சிறுபாண்மை மக்களுக்கு ஒதுக்கப்படும் வள ஒதுக்கீட்டு அடிப்படையில் தரத்திலும் அளவிலும் குறைக்கப்பட இருக்கின்றது.

பெரும்பான்மை மக்களின் விருப்புக்களுக்கு அமைய பதவிக்கு வந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் பெரும்பான்மை மக்களின் விருப்புகளை நிறை வேற்று வதை அடிப்படையாகக் கொண்டு சிறந்த பாதீடு தயாரிக்கப்பட்டு உள்ளது.

மொத்த செலவீனத்தில் முதல் இடத்தை [13%] வகிக்கும் இராணுவ செலவீனத்தின் முழு நன்மைகளும் பெரும்பான்மை மக்களை சென்றடைய இருக்கின்றது. பாதுகாப்பு படைகளுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் மற்றும் இதர கொடுப்பனவுகள்,மற்றும் ஏனைய மூலதன செலவுகள் கூட பொசிந்து செல்லும் கோட்பாட்டுக்கு அமைய இராணுவ வீரர்களுக்கு செல்லும் என்பது யதார்தமாகும். இலங்கையின் பாதுகாப்பு படையில் 97.3 வீதமானவர்கள் சிங்கள இன மக்களாக உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இலங்கையின் இராணுவ செலவு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கபடுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு சிங்கள மக்கள் நன்மைகளை அதிகம் பெறுவார்கள்.

பாதுகாப்பு செலவீனம் அதிகரிப்பது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. இலங்கையில் தேசியம் என்பது யுத்தத்துக்கு பின்னர் பல்லின தேசியங்களாக இன அடிப்படையில் ஏட்டிக்கு போட்டியாக வீறு நடை போட்டுக் கொண்டு இருக்கின்றன. எனவே இந்த ஒரு சமூக கண்ணோட்டத்தில் இந்த சிறிய ஒரு பொருளாதாரத்தின் பாதுகாப்பு செலவீடு நாட்டுக்கு நன்மை பயர்க்குமா? என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

பாதுகாப்பு செலவீன அதிகரிப்பானது நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு பதிலாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் சிங்கள மயமாக்கத் தையும் பௌத்த மத மேலாண்மையையும் அதிகரிப் பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. பாதுகாப்பு செலவீன மானது நாட்டின் நிரந்தர உற்பத்தியை பெருக்கும் பொருளாதார வளர்ச்சி மூலங்களை வலுப்படுத்துவதற்கு பதிலாக பலவீனப்படுத்துகின்றது. பாதுகாப்பு படையினர் உற்பத்தி திறன் அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்ய வில்லை. இலங்கையில் தற்போது குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பராமரிப்பு இன்றி இருக்கும் தனியார் தாழ் மற்றும் மேட்டு நிலக் காணிகளை உற்பத்தி பெருக்கத்துக்காக அரச உடமை யாக கையகப்படுத்தி அவற்றில் இராணுவ வீரர்களைக் கொண்டு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுத்து செல்வ தற்காக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைகள் பல்வேறு அரச நிறுவனங்கள் அமைப் புக்கள் ஊடாக முன்னெடுத்து செல்லப்படுகின்றன. இந் நடவடிக்கைகள் இலங்கை தீராத யுத்தத்தால் பாதிக்கப் பட்டதற்கான மூல காரணிகள் இன்னும் நீக்கப்படா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாலும் பரவாயில்லை அவை பல்வேறு கோணங்களில் மிகத் தீவிரமாக மென்மேலும் முன்னெடுத்து செல்லப்படுகின்றன.

இலங்கையில் பாதுகாப்பு செலவீனம் உயர்வாக இருப்பது பொருளாதாரத்தில் முதலீட்டார்களின் அவ நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களுக்கு பின்னரும் பாதுகாப்பு செலவீன அதிகரிப்பானது நாடு இன்னும் அச்சுறுத்தலில் உள்ளது என்பதற்கான ஒரு குறிகாட்டியாகும். இதனை ஜனாதிபதியும் அமைச்சர்களும் உறுதிப்படுத்தி நியாயப்படுத்தியுள்ளனர்.

**வரவு செலவுத் திட்டமும் கல்விக்கான செலவும்**

2021ற்கான வரவு செலவுத்திட்டத்தில் அரசின் மொத்த செலவீனத்தில் முதலாம் இடத்தில் பாதுகாப்புச் செலவும், இரண்டாம் இடத்தில் சுகாதாரத்துறையும், மூன்றாம் இடத்தில் கல்விக்கான செலவும் இடம் பெற்றுள்ளது இவை முறையே அரசின் மொத்த செலவீனத்தில் 13.1,5.1,4.0 வீதம் ஆகும்.

பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் மற்றும் அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற்ற சமரசத்தை தொடர்ந்து கல்விக்கான செலவீனத்தை GDPல் 6 வீதத்திற்கு அதிக ரிப்பது என உடன்பாடு காணப்பட்டமைக்கு அமைவாக இந்த அதிகரிப்பு நடைபெற்றுள்ளது. கல்விக்கான இந்த 4 வீதம் என்பது அரசின் மொத்த செலவீனத்தில் ஆகும். இது GDP ல் 3 வீதத்திற்கு அண்ணளவாக காணப் படுகின்றது. எனவே பல்கலைக் கழக ஆசிரிய சம்மேளனத்தின் உடன்பாட்டில் தற்போது அரைவாசி மட்டத்தையே இந்த கல்விக்கான அரசின் செலவீடு எய்தியுள்ளது. இது இவ்வாறு இருக்க புதிய அரசாங்கமானது கல்விக்கான செலவை அதிகரித்து இருப்பது என்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கான செலவீட்டை அதிகரித்தல் என்பதில் இப்பாதீடு வரவேற்கப்படுகின்றது.

இருப்பினும் கல்வி என்பது அறிவின் உருவாக்கம் மற்றும் அறிவு பரம்பல் என இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. இலங்கையின் இலவசக் கல்வியானது பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை அறிவுப் பரம்பலையே அதிகம் ஊக்குவிக்கின்றது. பாடசாலை மாணவர்களை கற்பித்து பல்கலைக்கழகம் அனுப்புகின்றன. பல்கலைக்கழகங்கள் அவர்களை குறித்த பாடங்களில் அறிவூட்டிய பின்னர் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக அனுப்புகின்றன. இந்த செயல்முறை மருத்துவம் மற்றும் பொறியியல் தவிர்ந்த பாடங்களில் நஞ்சு வட்ட வடிவில் சுழன்று கொண்டிருக்கின்றது. எனவே இங்கு எழுகின்ற ஒரு முக்கியமான வினா யாதெனில் இந்த நஞ்சு வட்டத்தால் நாட்டின் பொருளாதாரத்துக்கு இந்த கல்வி முறைமை என்ன பங்களிப்பு செய்கின்றது என்பதாகும். கல்வியானது அது இலவசமாக வழங்கப்பட்டாலும் சரி அல்லது தனியார் செலவில் வழங்கப்பட்டாலும் சரி கல்வியை கற்றவர்களின் வருமானத்தை அதிகரிக்கவில்லையாயின் அதனால் பயன் ஏதும் இல்லை என பிரபல்ய அபிவிருத்தி பொருளாதார நிபுணர் வில்லியம் ஈஸ்ரெர்லி குறிப்பிடுகின்றார். இலங்கையும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இலங்கையின் கல்வி முறைமையானது இவருடைய நோக்கில் அர்த்தமற்ற கல்வி [meaningless education] ஆகும். தற்போது வரவு செலவுத்திட்டம் ஊடாக அதிகரிக்கப்படும் கல்விக்கான செலவு கூட ஒரு அர்த்தமற்ற செலவீடுகளாக உள்ளன. ஏற்கனவே பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறுகின்ற பட்டதாரிகளுக்கு வேலை அற்ற நிலையில் வேலை அற்ற பட்டதாரிகளாக பொதுத்துறையில் மிகையாக உள்ள வேலையாட்கள் இவர்களையும் வருடா வருடம் இணைக்கப்பட்டு பொதுத்துறை பணியாளர்களின் எண்ணிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது மென்மேலும் மிகையாகிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் பல்கலைக் கழகங்களுக்கு உள்ளீர்க் கப்படும் மாணவர்களை 32000ல் இருந்து 50000 ஆக அதிகரித்தல் என்பது தொழிற் சந்தையில் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இருக்கி ன்றது. இந்நிலைமையானது அரசுக்கு பாரிய சுமையை உருவாக்கும். கல்வியின் இலக்கு தனித்து வருமானத்தை உழைத்தல் மட்டும் அல்ல நல்ல பிரசைகளை உரு வாக்கல் என வாதிடுபவர்களும் உள்ளனர். இது தொடர் பாக பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. கல்வியின் இன்றைய இலக்கு கற்ற கல்வி வழி வருமானத்தை உழைத்து தங்கள் சொத்தை பெருக்குவதாகும். தனிமனிதர் ஒருவரினது உழைப்பும் வருமானமும் அதிகரிக்கும் போது நாட்டின் தேசிய உற்பத்தி அதிகரித்து பொருளாதார வளர்ச்சி தூண்டப்படுகின்றது.
2. கல்வியின் இரண்டாவது இலக்கு நல்ல பிரஜைகளை உருவாக்குதல் என்பது இலங்கையின் இலவசக் கல்வியினால் அடையப்படுகின்றதா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் இன்று வரை இலவசக்கல்வியை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. ஆனால் இலங்கையின் இனங்களுக்கு இடையில் முரண் பாடுகள் இல்லாமல் இலங்கை பிரஜைகள் அனை வரையும் நற்பிரஜைகளாக உருவாக்க இலங்கையின் கல்வி முறைமை தவறிவிட்டது. இனவாதம், மதவாதம் என்பன கல்வி முறைகள் ஊடாக வளர்க்கப் படுகின்றன. இலங்கையை சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதில் இலவசக் கல்விக்கு அதிக பங்கு உண்டு என்பதை பலர் சுட்டிக் காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உற்பத்தித் திறன்

மக்களின் வருமானம் அதன் வழி நாட்டின் வருமானம் அதிகரித்து நாட்டின் ஒட்டு மொத்தமான பொருளாதார அபிவிருத்திக்கு தனிநபர் ஒவ்வொரு வரினதும் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட வேண்டும். உற்பத்தித் திறன் அதிகரிப்பு என்பது கல்வி முறைமையினால் உருவாக்கப்பட வேண்டும். 2021 பாதீடானது கல்வி முறையில் மாற்றத்தை உருவாக்கு வதற்கான செலவீனங்களாக அன்றி இருக்கின்ற கல்விமுறையை தொடர்ந்து முன்னெடுத்து செல்வ தற்கான செலவீடாக மட்டுமே காணப்படுகின்றது. இந்நிலையில் பாதீட்டு செலவீனங்கள் உற்பத்தித் திறன் வழி பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யுமா? என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது. உதாரணமாக இலங்கையில் இலவசக் கல்வியில் இலங்கையின் பௌதீக வாழ்க்கைப் பண்பு சுட்டெண்களில் எழுத்தறிவு வீதம் என்பது ஜப்பானை நெருங்கி விட்டது ஆனால் ஜப்பானில் ஒரு தொழிலாளரின் உற்பத்தித் திறனுக்கு அண்மித்தாக இலங்கை தொழிலாளியின் உற்பத்தித் திறன் உள்ளது என கூற முடியாது. இரு நாடுகளும் கல்வி அறிவில் நெருங்கிய போதும் உற்பத்தி திறனில் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடு காணப்படுகின்றது.

உண்மையில் இலங்கையின் கல்விக் கொள்கை யானது ஏழை மக்களை திருப்திபடுத்துவதற்காக அளவு ரீதியாக அதிகரிக்கப்படுகின்றதே தவிர தர ரீதியாக கல்வியின் தரமும் உற்பத்தித்திறனும் அதிகரிக்கப்படவில்லை எனலாம். இந்த பண்பு காரண மாக இலங்கையானது தமது கல்வி முறையில் உருவாக்கிய பட்டதாரிகளுக்கு பொதுத்துறையில் மேலதிகமாக அவர்களை உள்வாங்க வேண்டிய இக் கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வீண்விரயமாகும் கல்விக்கான செலவீடு.

இலங்கையில் ஆரம்பக்கல்வி தவிர்ந்த இடை நிலை மற்றும் உயர்நிலை கல்வியில் அரசாங் கத்தின் செலவீடு வீண் விரயமாக்கப்படுகின்றது. கல்வி பொதுத்தராதர உயர்தர பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகம் புகுகின்ற மாணவர்களில் ஏறத்தாழ 90 சதவீதமான மாணவர்கள் தங்களின் தனியார் கல்வி நிலைய செலவுகள் ஊடாக பல்கலைக்கழக அனுமதியை அடைய கூடிய பெறு பேறுகளை பெற்றதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எனவே மிகுதி 10 வீதமான மாணவர்கள் மட்டுமே பாடசாலை கல்வி ஊடாக பல்கலைக்கழகம் செல்கின்றனர். இவர்கள் கூட தங்களுடைய சுய கற்றலால் சென்றார்களா? அல்லது பாடசாலைகளில் ஆசிரியர்களின் கற்றல் செயற்பாடுகளால் சென்றார் களா? என்பது கேள்வியாக உள்ளது.

எனவே இவ்வாறான ஒரு நிலையில் ஒரு பொருளாதார கண்ணோட்டத்தில் இலவசமான உயர் தர பாடசாலை மற்றும் பல்கலைக்கழக இலவசக் கல்வி தேவையானதா? என்ற வினா எழுகின்றது.

இரண்டாவது உயர்கல்வி ஆகும். பல்கலைக் கழகங்களில் வழங்கப்படும் உயர் கல்வியால் மாணவர்களின் புத்தாக்கத்துக்கான அறிவு கிடைக் கின்றதா? என்பது விடை காணமுடியாத வினாவாக அமைகின்றது. சில பட்டதாரிகளும், ஆய்வாளர்கள், மற்றும் விரிவுரையாளர்கள் புத்தாக்கத்துக்கு பங் காற்றிய போதும் பலர் புத்தாக்கத்துக்கு பங்களிப்பு செய்யாமல் அறிவு பரம்பலையே செய்கின்றனர். பல்கலைக்கழக புத்தி ஜீவிகளின் ஆய்வின் முடிவு களை கொள்கை வகுப்பாளர்கள் உள்வாங்காமல் இருப்பது ஒரு புறம் இருக்க பல புத்தி ஜீவிகளின் ஆய்வுகளும் வெளியீடுகளும் அவர்களை ஒரு அதிசயமான உலகத்தில் வாழ்பவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தரிக்கின்றன. அவை யதார்த்தத்துடன் இணைந்த வகையில் மக்களின் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆய்வுகளை செய்வதற்கு பதிலாக வேறு ஒரு உலகத்துக்கு ஆய்வுகளையும் நூல்களையும் எழுதுகின்றனர். 2020ல்-2021ற்கான வரவு செலவுத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தவரவு செலவுத்திட்டம் இலங்கையில் கடந்த காலத்தில் முன் வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து பல்வேறு வழிகளில் வேறுபடுகின்றது.

முன்னைய வரவு செலவுத்திட்டம் பொருளா தாரம் ஒரு சாதாரண நிலையில் உள்ள போது முன் வைக்கப்பட்டது. ஆனால் தற்போது COVID 19 காலத்தில் இத்தொற்று ஏற்பட்டு ஒரு வருட காலத்தில் தொற்று முற்றுப் பெறாமல் தொடர்ந்து இருக்கின்ற போது முன்வைக்கப்படுகின்றது. இலங் கையில் உலகில் ஏனைய நாடுகள் போன்று COVID 19 ன் தாக்கம் இல்லாது இருந்த போதும் இத் தொற்றை தடுப்பதற்கு அரசினால் கொண்டு வரப்பட்ட கட்டுப்பாடுகள் பொருளாதார செயற் பாடுகளை ஸ்தம்பிதம் அடையச் செய்து இருக் கின்றன. பொருளாதாரத்தில் பல பிரச்சினைகள் உருவாகி ஏற்கனவே நொந்து இருக்கின்ற பொருளா தாரத்தை மென்மேலும் வலு குன்றச் செய்து இருக்கின்ற நிலையில் இவ்வரவு செலவுத்திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது. சுருக்கமாக கூறினால் பொருளாதாரம் ஒரு பாரிய பொருளாதார மந்தத்தை எதிர்நோக்கி இருக்கின்ற சூழ்நிலையில் இந்த வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை யின் 2020 ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி வீதமானது சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை யின் படி 5.7 வீதத்தால் வீழ்ச்சியடையும் எனவும், உலக வங்கியின் கணிப்பீட்டின் படி 4.5 சதவீதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் வீழ்ச்சியடையும் என கூறுகின்றது. ஆனால் இலங்கையின் அறிக்கையின் படி பொருளாதார வளர்ச்சி வீதம் 1.8 வீதத்துக்கு குறைவடையும் எனவும் கூறப்படுகின்றது. பலரது கணிப்பீடுகள் வேறுபட்டு இருந்தாலும் இலங்கைப் பொருளா தாரத்தின் வளர்ச்சி வீதமானது 2020ல் எதிர்கணிய நிலைக்கு செல்லும் என்பதில் எந்த ஐயமும் இல்லை எனலாம்.

உலகிலே இலங்கைப் பொருளாதாரம் மட்டும் மந்த நிலைக்கு சென்றால் இலங்கையின் கடந்த காலம் போன்று பிற நாடுகள் இலங்கையை மீட்டு எடுக்க முடியும்.ஆனால் இலங்கையின் நிலவரத்தின் படி தற்போது ஏற்பட்டுள்ள உலக பொருளாதார மந்தத்துக்கு பிற நாடுகள் குறிப்பிடக்கூடிய உதவியை செய்து மீண்டு எடுக்க கூடிய நிலையில் இல்லை எனலாம். எனவே இவ்வாறான அகப் புறச் சூழலால் பொருளாதாரத்தை மீட்டு எடுப்பதற்கான ஒரு வரவு மீட்டு மாக இது அமைந்துள்ளதா? என்ற வினா எழுகின்றது.

இலங்கையை பொறுத்த வரை எதிர்வரும் 2021 ஆண்டு மிகவும் இக்கட்டான ஒரு ஆண்டாக இருக்கும் என்பது தெளிவாகின்றது. இந்த மந்தமான பொருளாதாரத்தை மீட்டு எடுப்பதில் வரவு செலவுத் திட்டத்திற்கு அளப்பரிய பங்கு உள்ளது. இது அரசின் செலவுப் பக்கத்தில் இருந்தும் வருமான மூலங்களில் இருந்து விளங்கப்படுத்த முடியும்.

பொதுவாக இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் குறைநிலை வரவு செலவுத் திட்டம் இருக்கவேண்டும் என வற்புறுத்துவதற்கான பிரதான காரணம் அரசு பல்வேறுபட்ட செலவினங்கள் ஊடாக உற்பத்தியை பெருக்கி வேலை வாய்ப் பையும் வெளீயீட்டையும் அதிகரிக்க வேண்டும் என்பதாகும். இந்த நோக்கு பொருளாதாரம் மந்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற போது மென்மேலும் வலுவவடைகின்றது. உலகில் 1929-1933 காலப் பகுதியில் இடம்பெற்ற உலக பொருளாதார மந்தத்தில் இருந்து மீண்டு எழுவதற்கு கெயின்சினால் முன் வைக்கப்பட்ட ஒரு பிரதான கொள்கையாக அரசின் செலவினத்தை [y=c+I+G+[X-M]] அதிகரித்தல் என்பதாகும். இந்த கொள்கை சிபாரிசு கோட்பாடு ரீதியானது மட்டும் அல்ல. பல அபிவிருத்தி அடைந்த, மற்றும் அடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் கூட 1933 பின்னரும் தங்கள் பொருளாதாரங்களில் ஏற்பட்ட பின்னடைவை சீர் செய்து மீட்பதற்காக அரச செலவினத்தை அதிகரித்து இருப்பதை காண முடியும்.

இலங்கையின் தற்போதைய நிலையில் பாதீட்டில் அரச செலவீனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான பின்வரும் காரணங்கள் எடுத்து விளக்க முடியும்.

1. COVID 19 காரணமாக பல ஆயிரக்கணக்கான மக்கள் குறிப்பாக தனியார் துறை, மற்றும் சுய தொழிலில் ஈடுபட்ட மக்கள் தங்களுடைய வேலைகளை இழந்துள்ளனர். வேலை இழப்புக்கு காரணம் பல தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை செயற்பாடுகளை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிறுத்தியுள்ளன. இது தொழிலாளர்களை வேலையில் இருந்து நிறுத்து வதற்கு காரணமாக அமைந்துள்ளது. எனவே வேலை இழந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் கடமையாக இருப்பதனால் அரச செலவீனம் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் அவ்வாறான செலவீடு அதிகரிப்பு இந் நோக்கத் துக்காக குறித்துக் காட்டப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தனியார் துறை, மற்றும் சுய தொழில்கள் மூடப்படும் போது இதற்கு இணையாக அரச தொழில் முயற்சிகள் உருவாக்கப்படும் போது தான் பொருளாதாரம் சமநிலை அடைய முடியும். COVID 19 இனால் வேலை இழந்த மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு அரச தொழில்துறை முதலீடுகள் அதிகரிப்பதற்கான செலவீடுகள் இவ் வரவு செலவுத்திட்டத்தில் இடம்பெறவில்லை. பாரிய பண்ணைகள், கைத்தொழிற்சாலைகளில் குறிப்பாக அரச விவசாயப் பண்ணைகளில் அரசு முதலீடு செய்து தொழில் இழந்த மக்களுக்கு வேலை வழங்க அரசு செவீடுகளை அதிகரிக்க வேண்டும்.

3. COVID19 இனால் பாதிப்புக்கு உள்ளான தொடர்ந்து இயங்குகின்ற தனியார் நிறுவனங்களுக்கு அரசு தனது செலவீடுகள் ஊடாக நிவாரணம் வழங்கி [Stimulation Package] தனியார் நிறுவனங்களை தொடர்ந்து இயங்க செய்ய வேண்டும். இந் நிறுவனங்கள் தொடர்ந்து இயங்கும் போது மட்டும் தான் மக்களுக்கு வேலைவாய்ப்பும் வருமானமும் கிடைக்கும். இந்த வருமானம் மக்களை கேள்வி மீது தூண்டுதலை நுகர்வு செலவு ஊடாக உருவாக்கும். எனவே இக்கட்டான சூழ்நிலையிலும் தொடர்ந்து இயங்குகின்ற நிறுவனங்களை பொருளா தார மந்தத்தில் இருந்து பாதுகாப்புதற்கான சிறப்பான எந்த செலவீடுகளும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் இடம்பெறவில்லை எனலாம்.

4. பொருளாதார மந்த காலத்தில் உற்பத்தி செய்யப் படுகின்ற பொருட்கள் சேவைகளை மக்கள் நுகரச் செய்வதற்கு வருமானம் இல்லாத அம்மக்களும் அரசாங்கம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளை கொள்வனவு செய்து இலவசமாகவோ அல்லது மானிய அடிப்படையிலே வழங்குவதற்கு அரசாங்கம் செலவு செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. இந்த வரவு செலவுத்திட்டத்தில் மக்களின் நுகர்வை அதிகரிப்பதற்கான நிவாரணம் வழங்குவதற்கான செலவீடுகள் இடம்பெறவில்லை. இது மந்தத்தை மீட்டு எடுக்க உதவமாட்டாது. இவ்வாறு அரச செலவீன பக்கத்தில் பொருளாதார மந்தத்தில் இருந்து மீள்வதற்கான எந்த வித செலவீடுகள் செய்வதற்கான நிதி இந்த வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படாமையினால் இவ் வரவு செலவுத்திட்டத்தை பொருளாதார மந்தத்தில் இருந்து மீட்டு எடுப்பதற்கான திட்டமாக கூற முடியாதுள்ளது என கொழும்பு பல்கலைக்கழக த்தில் பொருளியியல் துறை தலைவர் பேராசிரியர் சிறிமால் அபெயரத்தின குறிப்பிடுகின்றார்.

மறுபுறத்தில் அரசின் வருமான பக்கத்திலும் பொருளாதாரத்தை மந்தத்தில் இருந்து மீட்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை சுட்டிக் காட்டுகின்றார்கள். பொருளாதார மந்த காலத்தில் உற்பத்தி செய்யப் பட்ட பொருட்கள் சேவைகளை மக்கள் நுகரச் செய்வதற்கு அவர்களிடம் போதியளவு வருமானம் இருக்க வேண்டும். அவ்வாறு வருமானம் தங்கு தடையின்றி குறைவடையாமல் அதிகரித்து செல்கின்ற போது தான் அது கேள்வியை [மொத்த கேள்வி] தூண்டும். மொத்தக் கேள்வி தூண்டப்படுகின்ற போது உற்பத்தி தூண்டப்பட்டு அது வேலைவாய்ப்பு வருமா னத்தை உருவாக்கும். நாடு மந்த நிலையில் இருந்து மீண்டு எழுகின்றது.

2021 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் இந்த அணுகுமுறையை காண முடியாமல் உள்ளது. மக்களின் வருமானத்தையும் கொள்வனவு சக்தியை யும் அதிகரிப்பதற்கு வருமான வரிகளையும் பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சேவைகள் மீதான வரியையும் குறைப்பதற்கு பதிலாக இந்த இரண்டு வரிகளையும் அதிகரிப்பதற்கு சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வளவு காலமும் வரி சேகரிப்பு முறைகளில் இருந்த ஓட்டைகளை அடைத்து அரசு வரி வருமானத்தை உயர்த்துவதற்கு பல சிபாரிசுகள் இடம்பெற்றுள்ளன. உண்மையில் அரசுக்கு வரி வருமானம் தேவை என்பதும் அதை சேகரிப்பதில் உள்ள ஓட்டைகளை அடைப்பதும் தேவையாக இருந்த போதும் அதை செய்வதற்கான காலம் COVID 19 இனால் உருவான பொருளாதார மந்த காலம் அல்ல என நிபுணர்கள் குறிப்பிட்டு உள்ளனர். அரசின் வரி வருமானம் அதிகரித்தல் என்பது நாட்டின் நுகர்வை சுருக்குகின்றது. இது மொத்த கேள்வியை சுருங்க செய்து உற்பத்தி வேலை வாய்ப்பை வீழ்ச்சியடையச் செய்யும் இந்நிலைமை பொருளாதார மந்தத்தை மென்மேலும் தீவிரமாக்கும் என்கின்றனர்.

அரசாங்கம் செலவை அதிகரித்து தனது வருமானத்தை சுருக்குதல் என்பது பொருளாதார மீட்பிற்கான உபாயமாக உள்ள போது இந்த உபாயத்துக்கு எதிராக அரசு செலவை குறைத்து வருமானத்தை உயர்த்தியுள்ளமை. முரண்பாடான தந்திரோபாயக் கொள்கையாக உள்ளது என்பதை பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை இந்நோக்கில் மந்த காலத்தில் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் 2021 வரவு செலவுத்திட்டத்தில் GDP இல் 9.2 வீதமாக உள்ள பற்றாக்குறையை 7.2 வீதமாக குறைப்பதாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. அதிகரித்த வரவு செலவுத்திட்டத்துக்கு எவ்வாறு நிதியீட்டம் செய்வது என அரசு திணறிக் கொண்டு இருக்கின்ற போது இந்த பற்றாக்குறை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது சரியானதா? என நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவலாம். இந்த வினாவுக்கு விடையாக அதிகரித்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை அந்நிய உதவிகள், கடன்கள் மூலம் நிரப்பச் செய்து மிகுதியாக உள்ள குறை நிலைக்கு பணத்தாள்களை வெளியீடு செய்து பண நிரம்பலை அதிகரிக்கலாம் என்பது தான் சரியான கொள்கைத் தெரிவாக இருக்க வேண்டும் என வாதிடப்படுகின்றது. உண்மையில் பொருளாதார மந்த காலத்தில் இருந்து பொருளாதாரத்தை மீட்டு எடுப்பதற்கான ஒரு கருவியாக பண நிரம்பலை பயன்படுத்த முடியும் என மில்ரன் பிறீட்மன் குறிப்பிட்டு உள்ளார். 1929 இல் இடம்பெற்ற உலக பொருளாதார மந்தமானது பண நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் உருவானது என்பது பிறீட்மனின் வாதமாக உள்ளது. இக் காலத்தில் அமெரிக்காவின் பண நிரம்பல் 38 வீதத்தால் வீழ்ச்சியடைந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

தற்போது உலகளாவிய ரீதியில் உருவாகியுள்ள இந்த பொருளாதார மந்தத்தில் இருந்து எழுவதற்கு உலகில் பல வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் நாடுகள் பணத்தாள்களை அச்சிட்டு அதன் வழி அரச செலவீனத்தை ஈடுசெய்கின்றன. ஆஜென்ரினா, உருகுவே, துருக்கி, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பணத்தாள்களை அச்சிட்டு பணநிரம்பலை அதிகரிக்கின்ற கொள்கை நடைமுறைக்கு வந்துள்ளது.

இலங்கையும் இந்த கொள்கையில் புகுந்து ஏற்கனவே ஏறத்தாழ ரூபா 400 மில்லியன் பெறுமதியான பணத்தாள்களை வெளியிட்டு அரச செலவீனத்தை ஈடுசெய்துள்ளது. அவ்வாறு செய்தும் பொருளாதார மீட்சி மிகவும் தாமதமாக உள்ளது. இவ்வாறான நாணயதாள்கள் வெளியீட்டுக் கொள்கையினால் இலங்கைப் பொருளாதாரம் தடுமாறுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கு பின்வரும் காரணங்கள் எடுத்துக் காட்டப் படுகின்றது.

1. அரசாங்கம் ஏற்கனவே கடன் சுமையில் உள்ளது அரச செலவீனத்தில் அதிக பங்கு கடன் மீளச் செலுத்துகைக்கு பயன்படுத்தப்படுகின்ற காரணத்தால் பணத்தாள்களின் வெளியீடு பொருளாதாரத்தில் புதிய முதலீட்டு செலவு மற்றும் நுகர்வுச் செலவுக்கு அதிகரித்து செல்வதற்கு பதிலாக வெளிநாட்டு கடன்களை அடைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

2. பணத்தாள்களின் வெளியீடு மூலம் அரச செலவீனத்தை ஈடுசெய்தல் என்பது ஒரு குறும் கால கொள்கைத் தெரிவாகும். ஆனால் நீண்ட காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தூண்ட கூடிய கொள்கைளை நாடு கடைப்பிடிக்கும் போது தான் இந்த பணத்தாள்களின் வெளியீடு மூலம் ஏற்படுகின்ற அதிர்வுகளை கட்டுபடுத்த முடியும். வளர்ச்சிக்கான மூலங்கள் பலவீனமாக இருக்குமானால் பண நிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பண வீக்கத்துக்கு இட்டுச் செல்லும் சாதாரண வார்த்தையில் குறிப்பிடு வோமாயின் பொருளாதார மந்தத்தில் இருந்து மீள்வதற்கு பண நிரம்பலை அதிகரித்து வேலை வாய்ப்பை அதிகரித்தல் என்பது ஒரு நோய்க்கு பனடோலை பயன்படுத்துவது போன்றது. இது தற்காலிக பலனைத் தரும். நீண்ட காலத்தில் மாற்றுக் கொள்கைகள் ஊடாக நாட்டின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும். பொருளாதார மந்தத்துக் கான மூலக்காரணி தொடர்ந்து இருக்குமானால் [COVID 19] பணத் தாள்களின் வெளியீடு பொருளா தாரத்தை மீட்பதற்கு பதிலாக மென்மேலும் சிதை வடையச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அந்நிய செலவாணி வருவாய்கள்.
பணத்தாள்களின் வெளியீடுவழி பொருளாதாரத்தில் இருந்து மீள்வதற்கு ஏற்றுமதி வருவாய்கள் உல்லாச பயணிகளின் வருவாய்கள் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புதல்கள் அதிகரிக்கும் போது பணத்தாள் களின் வெளியீடு மூலமான நீண்ட காலத்தாக்கங்கள் குறிப்பாக பண வீக்க நிலைமைகள் தடுக்கப்படும். இலங்கையில் பணத்தாள்களின் வெளியீடு பிரச்சி னைகளை தீர்க்காமல் மென்மேலும் தீவிரமடையச் செய்யும் என்பதற்கு இந்த மூன்று மூலங்களில் இருந்து கிடைக்கும் வருவாய்களை இலங்கை இழந்துள்ளமையை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

4. வளர்ந்த நாடுகள் பொருளாதார மந்தத்தில் இருந்து மீள்வதற்கு தற்காலிக ஒரு கொள்கை தெரிவாக பணத் தாள்களின் அச்சிடுதல் இருந்த போதும் இலங்கைக்கு இது பொருத்தமானது எனக் கூற முடியாது. வளர்ந்த நாடுகளின் வன் நாணயங்க ளுக்கு உலகில் கேள்வி உள்ளது. அவைகளின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மூலங்கள் மிகவும் பல மாக உள்ளன. ஆனால் இலங்கைக்கு இக்காரணிகள் சாதகமாக இல்லை எனலாம்.

எனவே இலங்கையில் 2021 இற்கான வரவு செலவுத்திட்டம் இலங்கைப் பொருளாதாரத்தை பொருளா தார மந்தத்தில் இருந்து மீட்பதற்கு பதிலாக பொருளா தாரப் பிரச்சினைகளை மென்மேலும் தீவிரமடையச் செய்யும் என்பது யதார்த்தமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 16

## இலங்கையின் பாதுகாப்பு செலவும் கடன் சுமையும்

SundayVirakesari,December 27, 2020

கடந்த வாரம் இலங்கையின் முதல் தர பல்கலைக்கழகமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்த் துறையில் 2021 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட குழுநிலை கருத்தரங்கு ஒன்று நடை பெற்றது. அக்கருத்தரங்கில் ஆரம்ப உரையினை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முன்னாள் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பொருளி யல்த் துறையின் பேராசிரியருமான W.D லக்ஸ்மன் வழங்கியிருந்தார். பல பேராசிரியர்கள் கலந்து கொண்ட இந்த கருத்தரங்கில் முடிவில் கேள்வி நேரத்தில் என்னால் இரண்டு முக்கியமான கேள்விகள் முன் வைக்கப்பட்டன.

1. இலங்கையின் யுத்தம் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்த நிலையிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அரச செலவீனத்தில் முதல் நிலை செலவீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது ஏன்? இலங்கை போன்ற சிறிய ஒரு பொருளாதாரத்துக்கு இந்த பாதுகாப்பு செலவீனம் ஒதுக்கீடு செய்யப்பட்டது சரியானதா?
2. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் மீண்டும் மீண்டும் வேலையில்லா பட்டதாரிகளை உற்பத்தி செய்து கொண்டு இருக்கின்றன. இந் நிலையில் புதிதாக பல்கலைக்கழகங்களை உரு வாக்குவதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக செலவீட்டை உயர்கல்விக்கு ஒதுக்குவது வினைத்திறனான செலவீடாக இருக்குமா?

என்பன அவையாகும். என்னுடைய முதலாவது வினாவுக்கு விடை தரப்படவில்லை. இரண்டாவது வினா சரியானது என ஏற்றுக் கொள்ளப்பட்டு தொழில் சந்தைக்கு பொருத்தமான பட்டதாரிகளை பல்கலைக் கழகங்கள் உருவாக்க கூடிய வகையில் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழக கல்வியில் சீர் திருத்தங்கள் அவசியம் என வலியுறுத்தப்பட்டது.


விடை வழங்கப்படாத எனது கேள்வியை இந்தக் கட்டுரையில் இலங்கையின் கடன் சுமையுடன் தொடர்புபடுத்தி ஆராயலாம்.




மூலம்:-https://commons.wikimedia.org/wiki/File:2016 Sri_Lanka_Defence_Budget.png

ஒரு நாட்டின் பாதுகாப்பு செலவுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான தொடர் பினை ஆய்வு செய்தவர்கள் ஒரு நாட்டின் பாதுகாப்பு செலவு அதிகரிக்கப்படும் போது முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பை வழங்கி நாட்டை அமைதியாக உருவா க்குவதன் மூலம் முதலீட்டாளர்களின் ஆபத்து குறைந்து முதலீட்டு நம்பிக்கை அதிகரித்து முதலீடுகள் அதிகரிப்பதன் ஊடாக உற்பத்தி வேலை வாய்ப்பு அதிகரித்து பொருளாதார வளர்ச்சி உருவாகும். இது நாட்டின் வளர்ச்சியை அதிகரிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என குறிப்பிட்டுள்ளனர். வளர்ந்த நாடுகள் தங்கள் பாதுகாப்பை செலவை அதிகரிப்பதன் ஊடாக சில பொருளாதார வாய்ப்புக்களை பெற்றுக்கொள்கின்றனர். உதாரணமாக அமெரிக்கா வளை குடா யுத்தத்துக்கு செய்த செலவீடுகள் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மசகு எண்ணெய் வளத்தை தங்கள் நாட்டு கம்பனிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வர்த்தக முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பு செலவீனத்தின் அதிகரிப்பானது யூதர்களின் இருப்பை மத்திய கிழக்கில் உறுதிப்படுத்துதற்கு அவசியமானது என்றும் யூதர்களின் உலகளாவிய பொருளாதாரத்தை பலப் படுத்துவதற்கு அவர்களுக்கு என ஒரு தாய் நாடு அவசியமானது. என்றும் இதன் காரணமாக நாட்டைப் பலப்படுத்துவதன் ஊடாக யூத இனத்தை உலகில் பலப்படுத்துவதற்காக இராணுவ செலவீனம் அவசியமானது என வலியுறத்தப்படுகின்றது.

சிங்கப்பூர் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தி யில் ஒப்பீட்டு ரீதியில் அதிகளவு பாதுகாப்பு செலவை கொண்டிருக்கின்றது.

இந்த பாதுகாப்பு செலவு சிங்கப்பூர் அனுபவிக்கும் உயர்ந்த தலா வருமானத்தில் சிங்கப்பூரை பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் ஆக்கிரமிப்பில் இருந்து குறிப்பாக மலேசியாவின் அச்சுறுத்தலில் இருந்து சுயமாக பாதுகாத்து கொள்வதற்கு தேவை என வலியுறுத்தப்பட்டது. இந்த உதாரணங்களில் இருந்த நாம் கண்டறியும் உண்மை என்னவெனில் ஒரு பொருளாதாரத்துக்கு பாதுகாப்பு செலவீனம் தேவையானதா? இல்லையா? என்பது தனித்து பொருளாதார காரணிகள் மட்டுமன்றி தேசம், பாதுகாப்பு என பல அரசியல் சமூக காரணிகளினாலும் தீர்மானிக்கப்படுகின்றன.

இலங்கை ஒரு மிகச் சிறிய ஒரு பொருளாதாரம் ஆகும். இலங்கையின் இச்சிறிய பொருளாதாரத்துக்கு இந்த உயர்வான பாதுகாப்பு செலவு அவசியமானதா? அதுவும் யுத்தம் முடிவடைந்து 11 ஆண்டுகள் நீங்கிய பின்னரும் அவசியமானதா? என்பது ஆராய்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு 11 ஆண்டுகள் பூர்த்தியடைந்த பின்னரும் பாதுகாப்பு செலவை அதிகரித்தல் என்பது இலங்கையில் பயங்கரவாதத்துக்கு அப்பால் வேறு தேவைகள் பாதுகாப்பு செலவை அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது என்பதை கோடிட்டு காட்டுகின்றன. அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழித்ததை விட பாதுகாப்பு தேவைக்கு வேறு பல இன வாத காரணங்கள் தேவையாக உள்ளது என்பது வெளிப்படையாகின்றது.

எனது கேள்விக்கான விடை இலங்கையில் சிங்கள பௌத்த தேசியத்தை பாதுகாக்க இந்த இராணுவ செலவு அவசியம் என்பதாகும்.

இந்த பாதுகாப்பு செலவின் அதிகரிப்பு தொடர்ந்தும் பேணப்படுவது இலங்கையில் உள்ள இன முரண்பாடும் யுத்தமும் பயங்கரவாதத்தால் தோன்றியது அல்ல. மாறாக அரசாங்கத்தால் வளர் க்கப்பட்ட இனவாதக் கொள்கையினால் உருவானது என்பது நிரூபணமாகின்றது. பௌத்த சிங்கள பேரின வாத அரசாங்கம் இலங்கையை ஒரு சிங்கள பௌத்த தேசமாக உருவாக்குவதற்கு இந்த பாதுகாப்பு செலவீனம் மிகவும் அவசியமான ஒன்றாக காணப்படு கின்றது. இந்த பாதுகாப்பு படைகளின் விஸ்தரிப்பு நாட்டின் அனைத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்ப டுத்துவதற்கு பதிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மை மக்களின் இன அடையாளங்களை அழித்து சிங்கள குடியேற்றங் களையும் பாதுகாப்பதற்காக அதிகரிக்கப்படுகின்றது என்பது வெளிப் படையாகின்றது. எனவே இலங்கையில் பாதுகாப்பு செலவீன அதிகரிப்பு பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கான செலவு அல்ல. மாறாக சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை பாதுகாப்பதற்கான செலவீடாக உள்ளது என்பது உணர்த்தப்படுகின்றது.

இவ்வாறான பாதுகாப்பு செலவினம் இலங்கைப் பொருளாதாரத்தில் உருவாக்கும் தாக்கங்களில் முக்கியமானது இலங்கையின் கடன் சுமை அதிகரித்தல் ஆகும். இலங்கையில் பன்நெடும் காலமாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து வாழ்ந்து வரும் சிறுபான்மை தமிழ் சமூகத்துக்கு அடிப்படை அரசியல் உரிமைகளை வழங்காது அவர்களின் அடையாளங்களை அழிப்பதற்கு வெளி நாடுகளில் கடன் பெற்று அந்நிய சக்திகளின் நிதிக் காலணித்துவத்துக்குள் இலங்கை சிக்கியுள்ளது. இலங்கை 30 ஆண்டுகளுக்கு மேலான போரினால் பெற்ற அனுபவம் பூச்சியமாகவே உள்ளது. அப்பாவி பாமர சிங்கள மக்களை முதலாளித்துவ பௌத்த சிங்கள தேசியவாதம் இனவாதம் பேசி ஒரு இருண்ட யுகத்தில் பல அழிவுகளை சந்தித்த பின்னரும் உலகெங்கும் கடன் பெற்றும் இலங்கையின் அரச முயற்சிகளை அந்நிய ஏகாதிபத்திய நாடுகளின் நிறுவனங்களுக்கு விற்பனை செய்து அல்லது குத்தகைக்கு வழங்கி உலகளாவிய ஆக்கிரமிப் புக்குள் அகப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செலவீனத்தை தொடர்ந்து உயர்வாக கொண்டிருப்பதனால் பின்வரும் விளைவுகள் பொருளாதாரத்தில் தோன்றலாம்.

1. இலங்கையின் கடன் சுமை அதிகரித்து கடன் களை மீள செலுத்த முடியாத நிலை தோன்ற லாம்.
2. பிற நாடுகளிடம் குறிப்பாக வல்லரசுகளிடம் கடன் பெறுவதால் அவைகளின் நவ காலணித்துவ ஆட்சிக்குள் அகப்பட்டு கொள்ளும். இதில் சீனா அணியா? இந்திய அணியா? என்ற வினா தோன்ற லாம். இலங்கை கடந்த காலத்தில் இரண்டு அணிகளையும் சமாளிக்க முடியாத புதிய அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் உருவாகியுள்ளது. இது ஒரு ஆபத்தான நிலைமை ஆகும்.

3. கடன் சுமை காரணமாக இலங்கைக்கு சொந்த மான அரச தொழில் முயற்சிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இது ஏற்கனவே உருவாகி விட்டது. அம்பாந்தோட்டை துறைமுகம் துறைமுக நகரம் என பல விற்கப்பட்டு விட்டன. (99 ஆண்டுகள்)
4. பாதுகாப்பு படைகளின் விஸ்தீரணம் உற்பத்தி திறன் அற்ற பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும். இது வளர்ச்சியை தடுத்து நிறுத்தும்.
5. ஏனைய துறைகளுக்கு ஒதுக்கப்படும் செலவீடுகள் குறைக்கப்படும். இது விவசாயம் கைத்தொழில் துறை களை பாதிக்கும்.
6. இனங்களுக்கு இடையே இன முரண்பாட்டு சூழல் அதி கரித்து செல்லும். ஏற்கனவே குடியேற்றங்கள், பௌத்த ஆலய விஸ்தரிப்புக்கள், சட்டத்துக்கு முரணான சிறுபான்மை யினருக்கு எதிரான நடவடிக் கைகள் என பல முரண்பாட்டு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இது நாட்டை அமைதியற்ற நிலைக்கு இட்டு செல்லும்
7. உள்நாட்டில் படித்த உயர்மட்ட மனித வளம் பிற நாடுகளுக்கு குடி பெயரும். இது மனித வள திரட்சியில் எதிர் கணிய விளைவை உருவாக்கும்.
8. அந்நிய முதலீடுகள் குறைவடையும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறிய ஒரு பொருளாதாரத்தின் இன ரீதியான பாதுகாப்பு செலவு அதிகரிப்பை தங்கள் முதலீட்டுக்கான ஆபத்துக் காரணியாகவே பார்க்கின்றனர்.
9. இராணுவ செலவை உயர்வாக கொண்ட நாடு களுக்கு உலக நாடுகளால் வழங்கப்படும் அந்நிய உதவிகள் தடைப்படும்.
10. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பாதிப்படையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 17
# Sunday Virakesari, May 16,2021

## இலங்கையில் கோவிட்-19 பொருளாதாரத்தில் உருவாகிய தாக்கங்கள்.

உலகளாவிய ரீதியில் மிகவும் வேகமாகப் பரவிவருகின்ற கோவிட்-19 தொற்று நோய் காரணமாக ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்கள் மூன்று மில்லியனைத் தாண்டியுள்ள தற்போதைய சூழ்நிலையில் நோய்ப்பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார, மற்றும் சமூகப் பின்னடைவுகள் உலகநாடுகளை பல தசாப்தங்கள் பின்னோக்கி நகர்த்தியுள்ளது. அந்தவகையில் நோய்ப் பரவல் காரணமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மாத்திரமல்லாது வளர்ச்சி கண்ட பொருளாதார வல்லரசுகளும் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளன.

சுகாதாரத்துறை மீதான உயர்ந்தபட்ச சவால்களை சமாளிக்க முடியாது திணறும் உலக நாடுகள் வீரியமான நோய்த் தாக்கம் காரணமாக ஏற்படுத்தப்படும் பொது முடக்கம், பணப்பழக்க நெருக்கடிகள், வேலையிழப் புக்கள், சர்வதேச வர்த்தக தடைகள், சுற்றுலா மற்றும் பயணத்தடைகள் போன்ற மேலதிக சுமைகள் காரணமாக பொருளாதார மந்த நிலமைக்குள் தள்ளப்பட்டுள்ள உலக மயமாக்கல் வலையமைப்புக்குள் இணைந்துள்ள இலங்கையும் இவ்வாறான இடர்நிலமைக்கு விதி விலக் கல்ல. 2019 யூலையில் உலக வங்கியால் வெளியிடப் பட்ட உலக நாடுகளின் தரப்படுத்தல் அறிக்கையில் இலங்கை உயர்நடுத்தர வருமான நாடாக தரமுயர்த்தப் பட்டிருந்ததுடன் 2020 யூலையில் தாழ் நடுத்தர வருமான நாடாக தரவிறக்கப்பட்டிருந்தமையினை பாதிப்பின் வெளிப் பாடாக சுட்டிக்காட்டலாம். அந்த வகையில் கோவிட்-19 பரவலானது இலங்கைப் பொருளாதாரத்தில் எத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சேவைத் துறையில் வீழ்ச்சி

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 57% இனை சேவைத்துறை கொண்டுள்ளது. சேவைத் துறை வருமானத்தில் சுற்றுலா மற்றும் பயணத்துறை மூலமான வருமானமானது பாரிய பங்களிப்பினை நல்கி வருகின்றது. கோவிட் தொற்று காரணமாக ஏற்பட்ட சுற்றுலா மற்றும் பயணத்தடைகள் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த ஆண்டு முற்றாக தடைப் பட்டிருந்த நிலையில் தற்போது பாதுகாப்பு நடை முறைகளைப் பின்பற்றி மிகக் குறைந்தளவான பயணி களே அனுமதிக்கப்படுகின்றனர். ஆகவே சுற்றுலாத்துறை வருமானமானது பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ள அதே வேளை விமான நிலையங்கள் மூடப்பட்டமை காரணமாக பொருட்களை ஏற்றியிறக்கல் மற்றும் பயணிகள் விமா னங்கள் தங்கிச்செல்லுதல் போன்ற ஏனைய வருமானங் களின் வழியும் அடைக்கப்பட்டது.

சேவைத்துறை ஊடாகப் பெற்று வந்த அந்நியச் செலாவணி முற்றுமுழுதாக இழக்கப்பட்டது. அத்துடன் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய சுமார் ஐந்து லட்சம் பேர் தமது வேலை வாய்ப்பை இழந்துள்ளனர். அதாவது சுற்றுலா பயணத்துறையுடன் நேரடியாகத் தொடர்பு படுகின்ற ஹோட்டல் ஊழியர்கள், வாகன ஓட்டுநர்கள், பயண வழிகாட்டிகள் போன்றோர் மற்றும் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்ட உள்ளூர் உற்பத்தி யாளர்கள் பலரும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு வங்கி மற்றும் நிதியியல் சேவைகளின் பரிமாற்றங்களில் ஏற்பட்ட தடங்கலும் சேவைத்துறை மீதான எதிர்க் கணிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அத்தோடு உலகளாவிய நிதி நெருக்கடி நிலமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக பங்குச் சந்தை தொழிற்பாடுகளும் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன.

## தனியார் துறை வேலைவாய்ப்பு இழப்பு

கொவிட்-19 நோய்த் தாக்கம் வேலையின்மை அதிகரித்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது. தனியார் துறை நகரத்துறை மற்றும் சொந்தமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அதிகளவில் தமது வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர். குறிப்பாக நகரமயமாக்கப்பட்ட மேல் மாகாணமானது வேலை வாய்ப்பில் 28.6% ஆன பங்களிப்பினைக் கொண்டுள்ளது. இவர்களில் 36.3% ஆனோர் தமது தொழிலை இழந்து ள்ளதாக அண்மிய புள்ளி விபரங்கள் சுட்டு கின்றன. இலங்கையானது உயர்ந்தளவான தொழிலாளர் பாது காப்புச் சட்டங்களைக் கொண்டுள்ள போதும் கொவிட்-19 நோய்ப்பரவல் போன்ற எதிர்பாராத இடர் நிலமைகளின் போது அவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கவில்லை என்பது பொதுவான குறை பாடாகும்.

## ஆடைக் கைத்தொழில் வீழ்ச்சி

ஏற்றுமதி நோக்கிய ஆடை உற்பத்தித் தொழிற் சாலைகளால் பெறப்படும் ஏற்றுமதி வருமானம் 2019 ல் 5.6 பில்லியன் ஐ அ. டொலர்களினை ஈட்டிக் கொடுத்தது. குறித்த துறையானது ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட தொழில் வாய்ப்பை வழங்கி வருவதுடன் அனேகமானோர் பெண்களாவார். கொத்தணித் தொற்றுக்கள் காரணமாக தொழிற்சாலைகள் மூடப் பட்டமையால் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சி மற்றும் மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட தடைகள் காரணமாக உற்பத்திப் பொருட்களின் நிரம்பல் வீழ்ச்சியடைந்துள்ளது. அது மட்டுமன்றி இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை உற்பத்திப் பொருட்களின் பிரதான ஏற்றுமதிப் பங்காளர்களான ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம் என்பன நோய்த் தொற்றால் உயர்ந்த பட்ச பாதிப்புக்களை எதிர் கொள்கின்ற நாடுகளாக இனங்காணப்பட்டுள்ளன. குறித்த நாடுகளால் ஆடை உற்பத்திகளுக்கு ஏற்படுத்தப்படும் கேள்வியானது 30-40% அளவில் வீழ்ச்சி கண்டுள்ளமையானது ஏற்றுமதி வருமான வீழ்ச்சிக்கு நேரடிக்காரணமாக குறிப்பிடப் படுகின்றன.

## வெளிநாட்டு பண வருவாய்களில் வீழ்ச்சி

அந்நிய செலாவணியினை ஈட்டித் தருகின்ற பிரதான மூலங்களாக வெளிநாட்டு பண அனுப்பல்கள் மற்றும் ளெிநாட்டு உதவிகளைக் குறிப்பிடலாம். வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள வேலையிழப்புக்கள் மற்றும் வருமான வீழ்ச்சி காரணமாக இலங்கைக்கு அனுபப்படும் பணத் தொகை குறைவடைந்துள்ளது. அத்தோடு இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகள் பெருமளவில் வெளிநாடுகளின் உதவிகளிலே தங்கியுள்ள நிலைமை காணப்படுகின்றது. வல்லரசுகளின் பொருளாதார வீழ்ச்சி யானது இத்தகைய உதவிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைகளை தோற்றுவித்துள்ளது.

## கட்டுமானத் தொழில் வீழ்ச்சி

இலங்கைப் பொருளாதாரத்துக்கு 26.4% அளவில் வகை கூறும் கைத்தொழில் துறையானது ஆடை உற்பத்தி துறை வீழ்ச்சியுடன் இணைந்த கட்டுமான துறைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் காரணமாக 2020 இல் 6.9% அளவில் வீழ்ச்சியடைந்தது. குறிப்பிட்ட துறைகள் ஏனைய துறைகள் ஏனைய துறைகளைப் போலன்றி தொழிலாளர்களின் பௌதீக ரீதியான பங்களிப்பை வேண்டி நிற்பவையாகையால் ஏற்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது முடக்க நிலைமைகள் குறித்த துறைகளின் செயற்பாடுகளை ஸ்தம்பிக்க செய்துள்ளது. மூலப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படுகின்றமையும் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சி

நுகர்வுச் செயற்பாடுகளில் ஏற்படுத்தப்பட்ட வரையறைகள் காரணமாக பொதுவாக நாட்டின் உற்பத்தி, வர்த்தகம் வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால் விவசாயத் துறை உற்பத்திகளுக்கான கேள்வி குறைவடைந்துள்ளமையினையும் சுட்டிக்காட்ட வேண்டும். நிரம்பல் சங்கிலிகளில் ஏற்படுத்தப்படுகின்ற இடையூறுகள் காரணமாகவும் ஒட்டு மொத்த விவசாயத் துறையானது 2.4% வீழ்ச்சியடைந்துள்ளது.

## அரசின் வருமானங்களின் வீழ்ச்சியும் செலவு அதிகரிப்பும்

இவ்வாறான அதிர்வுகளுடன் இணைந்த வகையில் இலங்கையின் இறைத்துறை தொழிற்பாடுகளும் மந்த நிலைமைக்குள் சென்றுள்ளது. பொருளாதார இயந்திரத்தை இயக்குவதற்கான பிரதான வருமான மூலம் 'வரி' ஆகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரி வருமானங்களைப் பெற்று நாட்டின் செலவுகள் உத்தேசிக்கப்படுகின்றன. அந்த வகையில் வெளிநாட்டு மூலங்களால் உள்ளீர்க்கப்படுகின்ற வரி வருமானம் குறைவடைந்துள்ள அதே வேளை உள்நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பல்வேறு மட்ட சமூகத்துக்கும் அரசாங்கத்தினால் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக சுற்றுலா சார்ந்த துறையினர் மற்றும் ஒப்பீட்டளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் பாதிக்கப்பட்டோர் என்று பட்டியலிடப்பட்டோர் களிற்கான வரிச் சலுகைகள் மற்றும் மானியங்கள் காரணமாக அரசாங்கத்தினால் வருமானம் இழக்கப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளது. அத்துடன் இணைந்த கொவிட்-19 நிவாரண உதவிகளும் அரசாங்கத்தின் செலவுகளை மேலும் அதிகரித்து வருகின்றதனை குறிப்பிட முடியும்.

## உற்பத்தி திறனில் வீழ்ச்சி

அனைத்து துறைகளில் ஊழியம் மற்றும் மூலதனத்தின் உற்பத்தி திறன் வீழ்ச்சியடைந்துள்து. முற்றான பொருளாதார முடக்கங்கள் மற்றும் பகுதி நேர வேலைகள் இணையத்தள கற்பித்தல் செயற்ப்பாடுகள் போன்றன உள்ளீட்டு அதிகரிப்பு வீதத்தை விட வெளியீட்டு அதிகரிப்பு வீதத்தை அளவு ரீதியாகவும் தர ரீதியாகவும் குறைவடையச் செய்துள்ளது.

## பொருளாதாரத்தில் உருவான சாதகமான மாற்றங்கள்

நோய்த்தாக்கம் காரணமாக உலக நாடுகள் எதிர் கொண்டுவரும் எதிர் மறையான தாக்கங்கள் ஒரு புறமிருக்க சாதகமான மாற்றங்களையும் ஏற்படுத்தி யிருப்பதனை இங்கு நாம் குறிப்பிட வேண்டும்.

## சூழல் பாதிப்பு குறைவடைந்தமை

வளிமண்டலத்துக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் காபனீரொட்சைட் வாயு வெளியேற்றம் 25% ஆல் குறை வடைந்துள்ளது. இதனால் ஓசோன் படைக்கு ஏற்படுத்தப் படும் பாதிப்புக்களும் குறைவடைந்து வருகின்றது. வளி மாசடைதல், பூகோள வெப்பமயமாதல் போன்ற சூழல் பிரச்சினைகளினை இழிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையவழி பொருளாதாரச் செயற்பாடுகளின் அதிகரிப்பு

பொது முடக்கம் காரணமாக ஏற்பட்ட பயணத் தடைகளால் நிகழ்நிலை வர்த்தக [Online business] செயற்பாடுகள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. இலத்திரனியல் வர்த்தகம் [E- Commerce] பிரபல்ய மடைந்து வருகின்ற நிலைமைகளில் தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக உள்ளது. டெஜிரல் இலங்கை உருவாகின்றது.

## உள்ளூர் உற்பத்திகளின் வளர்ச்சி

இறக்குமதித் தடைகள் காரணமாக தேவையான உற்பத்திகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதாவது தேவை யான பொருட்களை தாமே உற்பத்தி செய்து பயன் படுத்துகின்ற தன் நிறைவுப் பொருளாதார எண்ணக்கரு மீள உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதார செயற்பாடுகள் கிராமத்தை நோக்கி நகர்த்தப்படுவதால் கிராமிய பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதுடன் கிராம நகர இடைவெளிகள் குறைந்து வருவதோடு வறுமை தணிப்பிலும் முன்னேற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

## சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் வளர்ச்சி

கிராமியப் பொருளதாரத்தின் எழுச்சியானது சில்லறை வியாபார செயற்பாடுகளை தூண்டியுள்ளதன் காரணத்தினால் சிறியளவான தொழில் முயற்சிகள், வியா பாரங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. அதாவது நகரமயமாக்கத்துடன் கூடிய மொத்த விற்பனை நிலை யங்கள், பல் தேசிய கம்பனிகளின் விற்பனை நிலையங் களுக்கு பழக்கப்பட்டுள்ள மக்கள் தற்போது சில்லறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபார முயற்சிகளை நோக்கி திரும்ப வேண்டியது காலத்தின் தேவையாகும். உதாரணமாக கடந்த ஒரு வருட காலத்தில் உலர் உணவுக்கான கேள்வி உள்நாட்டிலும் புலம்பெயர் தமிழர் வசிக்கும் நாடுகளிலும் அதிகரித்துள்ளது. பல புதிய தொழில் முயற்சிகள் உருவாகியுள்ளன. உதாரணம் முகக் கவசம் உற்பத்தி மற்றும் விற்பனைத் தொழில்கள் உருவாகியுள்ளன.

## சுகாதாரச் சேவைகளின் விரிவாக்கம்

சுகாதார நலச் சேவைகளுடன் தொடர்புபட்ட உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் குறித்த உற்பத்திகளை மேற் கொள்ளும் நிறுவனங்கள் அதிக வருமானத்தை ஈட்டி வருகின்றன. அத்தோடு புத்தாக்கங்கள், புதிய கண்டுபிடிப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றமையானது சுகாதார துறையின் நவீனத்துவத்திற்கு வழிகோலியுள்ளது எனலாம்.

## மகிழ்ச்சியான வாழ்க்கை

விரைவான பொருளாதார அபிவிருத்தி உருவாக்கிய பாதகமான விளைவுகளில் முக்கியமாக விவாதிக்கப்பட்ட விடயம் மனிதன் மகிழ்ச்சியை இழந்தமை ஆகும். கோவிட் தொற்று நோயானது மனிதனுக்கு மகிழ்ச்சியான அமைதியான வாழ்வினை வழங்கியுள்ளது. இருப்பினும் மகிழ்ச்சியை வரை யறுப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. ஒருவருக்கு மகிழ்ச்சியை கொடுப்பது இன்னொ ருவருக்கு மகிழ்ச்சியற்றதாக இருக்கலாம். மகிழ்ச்சி என்பது அவரவர் மனங்களைப் பொறுத்தது ஆகினும் இத்தொற்று நோயானது உலகலாவிய ரீதியில் தயாரிக்கப்படும் மகிழ்ச்சிச் சுட்டெண் குறிகாட்டியில் உள்ள பல விடயங்களுக்கு நேரான பங்களிப்பை வழங்கியிருக் கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வெளியீடுகள்

1) Selvarathinam Santhirasegaram (edited book) (2015) Asian Development Reality, Felicitation volume, honored to Prof V. P. Sivanathan, consulting editor Professor A.V Manivasagar. Pages 271, API publisher, Manipay, Jaffna. ISBN: 978-955- 44890-7-3 (Bilingual, Tamil and English)
2) Selvarathinam Santhirasegaram (2015) Prosperity of North, collection of short stories, API publisher, Manipay, Jaffna., ISBN:978-955-44890-3-5 (In Tamil)
3) Selvarathinam Santhirasegaram (2015) Issues in political economics, printed by Jaffna printers and published by API publisher, Pages 140, ISBN: 978-955-420640-0-3( In Tamil)
4) Selvarathinam Santhirasegaram (2015) Essays in Political Economics, printed by Jaffna printers and published by API publisher, Pages 161, ISBN: 978-955-44890-9-7( In Tamil)
5) Selvarathinam Santhirasegaram (2014) Women's Characteristics in Tamil Literature, API publisher, Manipay, Jaffna. ISBN: 978-955- 44890-6-6( In Tamil)
6) Selvarathinam Santhirasegaramand L.Reginold (2014) Knowledge Economics, pages 150. Published by API Publisher, ISBN: 978-955- 44872 -8-0 ( In Tamil)
7) Selvarathinam Santhirasegaram (2013) Entrepreneur ship for Graduates, published by API publisher, printed by Kangai Printer, pages 149. ISBN: 978-955-44890 - 4 -2( In Tamil)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) Selvarathinam Santhirasegaram (2013) History of Economic Thoughts, page 222, published by API publisher. 2013, ISBN: 978-955- 44890 - 0-4( In Tamil)

9) Selvarathinam Santhirasegaram (2013) Monetary Economics, Kudanaaddu Pathipagam, page 200 ( ISBN978-955-44890-2-8), 2013( In Tamil)

10) Selvarathinam Santhirasegaram, A.A.M. Musthapa and ThavamSasivathany (2013) An Introduction to Tourism Economics, pages 140. Published by South Eastern University of Sri Lanka, ISBN: 978-955-44872 -0-8 ( In Tamil)

11) Selvarathinam Santhirasegaram (2013) Economic Development Singapore and Sri Lanka,A political economics Review.Semamadu publisher, (ISBN 978-955-685-022-2), 2013 (In Tamil)

12) Selvarathinam Santhirasegaram (2011) 'An Introduction to Macroeconomics' API publisher, Published, First edition in 2000 and Third Edition on August 2011. (ISBN978-955-44890-5-9, (In Tamil)

13) Selvarathinam Santhirasegaram (2012) "Socio political Causes for Economic Growth and Inflation in Sri Lanka" (ISBN 978-3-8484-2087-2) LAMBERT Academic Publishing GmbH & Co. KG(English)

14) Selvarathinam Santhirasegaram (2009) Economic Development: China and India: A Comparative Study -Economic progress, Under different political systems, Kumaran Book House, (ISBN978-955-659-202-3, September 2009, (In Tamil)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) Selvarathinam Santhirasegaram (2003) 'Economics' –2 , Higher Education publisher, Published on August 2003, (In Tamil)

16) Selvarathinam Santhirasegaram (2003) 'Money and Banking and Price level, Lashumi Publisher, Publishedon August2002 (Tamil)

17) Selvarathinam Santhirasegaram and Kopalapillai. Amirthalingam' Economics 1(2001)' Global publication, Published on June 2001, (In Tamil)

18) **Selvarathinam Santhirasegaram (2015)** The Induced Factors of Economic Success of South - East Asia and Sri Lanka's Experiences, published in book "Asian development realities, pp1-56, Edited by SelvarathinamSanthirasegaram, API publisher, Manipay, Jaffna. ISBN: 978-955- 44890-7-3

19) **A.M.M. Musthafa and S.Santhirasegaram (2015)** Foreign Direct Investment in southeast Asia, A scholarly article, published in felicitation volume honored to Prof .V.P .Sivanathan "Asian Economic development realities, 89-133, Edited by Selvarathinam Santhirasegaram, API publisher, Manipay, Jaffna. ISBN: 978-955- 44890-7-3

20) **Selvarathinam Santhirsarasegaram(2014)** Foreign Aid and Poverty Alleviation in Developing Countries: A scholarly article published in the book of contemporary socioeconomic issues in Sri Lanka, A Festschrift in Honor of Prof N. Balakishnan, Edited by S. Uthayakumar Published by department of economics, university of Jaffna. PP. 69-84, Colombo. (ISBN- 978-955-0585-05-2) (In Tamil)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) **A.M.M. Musthafa and S.Santhirasegaram (2014)** Tourism Industry in Sri Lanka, A scholarly article published in the book of contemporary socioeconomic issues in Sri Lanka, A Festschrift in Honer of Prof N. Balakishnan, Edited by S. Uthayakumar Published by department of economics, university of Jaffna. PP. 69-84, Colombo. (ISBN- 978-955-0585-05-2) (In Tamil)

22) **Selvarathinam Santhirsarasegaram (2014)** Entrepreneur ship and Development in Vanni, A scholarly article published in the book of Puthivaiyal edited by V. Pratheepan, Published by Divissionalsecreate, Puthukkudiyiruppu, pp.204-207 Mullathivu, (In Tamil)

23) **Selvarathinam Santhirsarasegaram (2013)** Emergence and Evolution of Aboriginal Capitalism in Sri Lanka under the British regime. A scholarly article published in the book of Economic History of Sri Lanka (collection of articles), edited by N. Perinpanathan, published by Jaffna economist association, pp.111-137, Jaffna. (ISBN- 978-955-44453-1-4)(In Tamil)

24) **Selvarathinam Santhirsarasegaram (2008)**Social and Economical Instability: Sri Lanka's Experiences. A scholarly article published in the book of Path to Economic Development: An inquiry based on Sri Lanka's Experience, A Festschrift in Honer of Prof N. Balakishnan, Edited by N. Ravinthirakumaran and M. Kanesamoorthy, Published by Kumaran Publication, PP. 284-404, Colombo. (ISBN- 978-955-51372-0-1) (In Tamil)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1] **Kamalakumari Karunanithy, Mahadevan Karunanithy and Selvarathinam Santhirasegaram (2017)** Understanding and responding to youth savings behaivieour: Evidence from undergraduates in the war torn regions of Sri Lanka, International Journal of research & development, Volume2, Issue 1,

[2] Selvarathinam Santhirsarasegaram (2017) கறுப்புபணத்தின் பொருளாதாரதாக்கங்கள்: இந்தியா பற்றிய ஒரு நோக்கு (Economic impacts of black money: Special reference to India) journal of Cinthanai , Vol XVI (16 ) No3, pp.93-105, official journal of Faculty of Arts, university of Jaffna, Sri Lanka, ISSN: 2478-1061

[3] Selvarathinam Santhirsarasegaram. (2017) Interest Income of Depositors: Do depositors gain in North and East of Sri Lanka?, Journal of Management, Volume 10 Number 1 , page 14-19, official journal of Faculty of Management and commerce, Southeastern university of Sri Lanka, ISSN: 1391-8230

[4] Selvarathinam Santhirsarasegaram (2017) ஈழத் தமிழர்களின் சேமிப்பில் தங்கநகைகளின் வகிபாகம் (Role of Gold Jewelaries in Tamil's Saving in Eelam) journal of Kalam, Vol 10 (1)Faculty of arts and culture, South Eastern university of Sri Lanka, ISSN: 1391-6815

[5] Jeyarasah.S and Santhirasegaram. S (2015) Assignment of Small Scale Fisher's Livelihood Status in the Batticaloa District of Sri Lanka, International Journal of research in commerce,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

economics and management, Vol 5 issue 1, pp 66-69

[6] Jeyarasah.S and Santhirasegaram. S (2015) Socio Economic Factors Influencing Marine Small in the Batticaloa District of Sri Lanka, International Journal of Humanities and social studies, Vol 3 issue 1, pp 75-79

[7] Selvarathinam Santhirsarasegaram and Kopalapillai Amirthalingam. (2014)The Socio-Economic Statuses of Tamil Speaking Muslims in Sri Lanka: A Comparative Study with Developing World, journal of Kalam, Vol 2 (8)pp.136-147, Faculty of arts and culture, Southeastern university of Sri Lanka

[8] Selvarathinam Santhirsarasegaram. (2014) Socio-political and Economic Causes for Corruption in Developing Countries: A Cross Country Empirical Study,Journal of Management, Volume 7 Number 1 , page 27-32, Faculty of Management and commerce, Southeastern university of Sri Lanka,

[9] Selvarathinam Santhirsarasegaram. (2014) Socio-Political Instability and Inflation and Exchange rate Instability in Developing Countries, The International Journal for Economics and business management, Volume 3 issue 2, pp. 16-21

[10] Musthafa A.M.M. and Santhirasegaram. S (2014) Empirical Investigation of the Relationship between the Tourism Receipts and Sustainable Economic Growth in Sri Lanka, Journal of Emerging Trends in Economics and Management Science, Volume 5, issue 7, pp. 131-137



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[11] A.M.M. Musthafa and S.Santhirasegaram (2014) The Impact of Foreign Direct Investment on Economic Growth in Sri Lanka, Journal of Management, Volume 9 Number 1

[12] A.M.M. Musthafa and S.Santhirasegaram (2013) Impact of Market Capitalization on Macro economic Variables in Sri Lanka, The International Journal for Economics and Business Management, Volume 3 issue 1, pp. 56-64

[13] Nufile, A A M, S Santhirasegaram, and S M M Ismail (2013 ), "Pakistan-Sri Lanka Free Trade Agreement (PSFTA): A Comparison with SAARC and SAFTA", International Journal of Accounting and Business Management, Vol: 1, No: 1, Pp: 145-160

[14] Nufile, A A M, S Santhirasegaram, and S M M Ismail (2013 c) "Sri Lanka's Economic Liberalization and its Contribution to the Economic Changes: An Empirical Evidences After 1977", Journal of Management of Prudence, Vol: 3, No: 5, Pp: 76-97

[15] Nufile, A A M, S Santhirasegaram, and S M M Ismail (2013 c) "Liberalization, Regionalization and its Impact on Country's Regional Trade", Asia Pacific Journal of Marketing and Management Review Vol: 2, No: 1, Pp: 1-18

[16] **Selvarathinam Santhirsarasegaram**. (2013) Capability of Information Accesses and Poverty Reduction in Developing Countries: Cross country Empirical Study, Information and Knowledge Management, Vol 3, No 10(2013) p.18-24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[17] **Selvarathinam Santhirsarasegaram. (2013)** Capability of Information Access and Poverty Reduction in Sri Lanka: A Cross Sectional Empirical Analysis, Developing Country Studies, Vol 3, No11(2013), pp.92-104

[18] **Selvarathinam Santhirsarasegaram**. (2013) Military and Poverty : Critical Study in Sri Lanka, Developing Country Studies 3 (8) (2013) . pp 90-97,

[19] **Selvarathinam Santhirsarasegaram and K. Amirthalingam**. (2009) Direct and Indirect Effects of War and Conflict on Economic Growth in Sri Lanka., Sri Lanka Economic Journal , Vol 11, June 2010.p.31-60, Sri Lanka Economic Association, Colombo.

[20] **Selvarathinam Santhirsarasegaram**. (2009) Political Backing, Success of Big Push and Take off in Capital Accumulation in Asia. Sri Lanka Economic Journal, Vol 10/2,pp.51-77, December, 2009. Sri Lanka Economic Association, Colombo.

[21] **M. Muhammad, Y. Sharahili, S .Selvarathinam (2008).**Political Stability and Economic Growth in Asia, American Journal of Applied Sciences, Volume 5(3), pp. 203-208, 2008.

[22] **A Ali, T Shukui, S Selvarathnam, X Xiaolin, A Saboor (2008)**Political Stability and Balance of Payment: An Empirical Study in Asia, American Journal of Applied Sciences, Volume 5(9), pp.1149-1157, 2008.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[23] **Chang Sheng Xu, Santhirasegaram Selvarathinam, Wen Xing Li (2007)**Sociopolitical Instability and Economic Growth: Empirical Evidence from Sri Lanka, American Journal of Applied Sciences, Volume 4(12), pp.1029-1035, 2007.

[24] A Haque, S Santhirasegaram, M Younis (2007)Sociopolitical Instability and Capital Accumulation in Developing Countries: Cross Country pooled data Evidence, Journal of Social Sciences, Volume 3(4), pp.204-212, 2007.

[25] **Selvarathinam Santhirsarasegaram**. (2007) Impact of Democratic and Economic Freedom on Economic Growth in Developing Countries, Journal of Applied Sciences, Volume 7(11), pp.1484-1489, 2007.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-624-5144-05-01

9 786245 144050 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org